BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 05 Issue - 110 30 Friday January 2009

இலவசம்


- நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
- வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
- உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

**Forward Consultants**
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052





**VBR** Visual Business Retail Ltd.
Special Offers... Call: 020 8540 8886
2 EPOS & 1 Back Office PC for £3999*
1 EPOS FOR £1799*
Free 3 years POS PACK Warranty!!! Pricing, Promotion & Stock Control!!! Online Product, Order &Promotion!!!
Costcutter Nisa Todays Premier
Well over 200 retail, hospitality and cash & carry clients in the UK since 2004 *Offer valid from July 25th 2008 to August 24th 2008.

**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing: Buying and Selling Houses, Flats & Business
- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING: 10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG Tel: 020 8772 4900
COLLIERS WOOD: 2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

**Iyngaran Food & Wine**
இலங்கை இந்திய உணவுப்பொருட்கள், அனைத்துவிதமான மரக்கறி வகைகள், கடலுணவு வகைகள் மற்றும் அனைத்து விதமான மதுபான வகைகள் இங்கே மலிவாகப்பெற்றுக்கொள்ளலாம்.
80 Burlington Road, New Maldon, Surrey KT3 4NU
020 8949 5640

**ABBEY TRAINING.NET**
Off Licence / Restaurant வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் Personal Licence & Premises Licence எடுத்து தருவோம்
வகுப்புகள் NCPLH Certificate Course Life in the UK
NESS & Co.
Immigration, Conveyancing, Licencing, Family Disputes & Others
Call: S.Thavanessan (NESS)
020 8665 2226 / 020 8640 5050 / 07956 913 164
38 London Road, Tooting SW17 9HP

**SANGAMAM JEWELLERY**
இலவசம் மூக்குத்தி / கைக்கடிகாரம்
£ 500க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு
தமிழர்களின் பாரம்பரிய வேலைப்பாட்டை எம் கைவண்ணத்தில் பார்த்து மகிழுங்கள்
OPEN ALL 7 DAYS. 10.00 AM - 7.00 PM.
377A Rayners Lane, Pinner, HA5 5EN Tel: 020 8429 7221

**ADD VALUE TO YOUR PROPERTY**
- Planning- new build, extension, conversion, refurbishment
- Interior and Landscape design
- Building and Property Maintenance

உங்கள் சகல விதமான கட்டிடத் திருத்த வேலைகளுக்கும் நாடவேண்டிய இடம்...
G D S Associates
Contact: Tele: 0208 665 0843
Mobile: Sangeeta : 0772 766 3867
e-mail:gdsassociates@btinternet.com

0870 042 0606
AIRPORT >
BAtransfer.com
British Airport Transfer
Securely book taxi from & to all major UK airports

**FREE Courses @ TR TEC**
Jan2009 முதல் Alperton, Gants Hill & Tooting மூன்று கிளைகளிலும் இலவச
ESOL English, Computers & Computing, Basic Accounting – Classes
பல்கலைக்கழக அனுமதிக்கும் வேலைவாய்ப்பிற்கும்
AAT Courses-Foundation, Intermediate & Technicians Levels
And 11+ Exam, SATS-KS2, Maths, Accounts Classes
மேலதிக விபரங்களுக்கு
020 8554 2963
020 8672 4005 | 020 8903 8121
e-mail: admin@trtec.org
aat
TR TEC பயிற்சித்துறையில் 18 ஆண்டுகள் அனுபவமிக்க தமிழர் நிறுவனம்

**RAJ LAW SOLICITORS**
Criminal Defence Service | Community Legal Service
உங்களுக்கு என்ன இடர் வந்தாலும் சட்டத்துடன் அதனைச் சந்திக்க நட்புணர்வுடன் நாம் இருக்கின்றோம்
This firm is authorised by the legal services commission to provide free legal advice for you for all types of criminal matters.
- Free 24 Hrs Police Station Attendance
- Magistrates, Crown Court & Court of Appeal
- Serious Crime, Murder/Attempted Murder

We speak Tamil, French and Creole
Experts in Criminal Defence Service (UK)
M: 07947 641 876
T: 020 8516 7730/020 3133 0000
Trident Business Centre, 89, Bickersteth Road, Tooting Broadway, London SW17 9SH
24 hour police station emergency service

# SOUTH HARROWவில்

## புதியதோர் உதயம்

30ம் திகதி முதல்

இலண்டனில் முதல்முறையாக VAT இலவச

வாகனத்தரிப்பிட வசதிகளுடன் உதயமாகியுள்ளது

# JAFFNA MARKET

உங்கள் தேவையறிந்து சேவையாற்றக் காத்திருக்கின்றனர்

Jaffna Market நிறுவனத்தார்

- சகல விதமான இலங்கை இந்திய பொருட்கள்
- கடல் உணவு வகைகள்
- பழங்கள் மரக்கறிவகைகள்
- **Frozen Foods** அனைத்தும்

இதுவரை கண்டிராத வகையில்

மலிவு விலையில்

"ஒருமுறை வந்து பாருங்கள்

பலமுறை வரத்தூண்டும் *Customer friendly services*"

தரமாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள உடனே நாடுங்கள்

# JAFFNA MARKET

280 - 282 NORTH HOLT ROAD

SOUTH HARROW, HA2 8EB



## ஊடகங்களில் ஊடுருவல்

நடுநிலையில் நிற்பது போன்றும். தமிழ் மக்களின் கண்ணீர் வெள்ளத்தை துடைக்க உதவுவது போன்றும் பாவனை காட்டும் சில ஊடகங்களில் சிறிலங்கா அரசின் முகவர்கள் ஊடுருவியுள்ளதாக அறிகிறோம். உண்மையா?

சிறிலங்கா அரசின் ஆதரவில் லண்டனில் அசைலம் அடித்துள்ள ஒருவர் ரேடியோ தொடங்கவிருப்பதாகவும் கதை வருகிறது. நீங்கள் இது விடயத்தில் ஆராய்ந்து தகவல்களை வெளியிட முடியாதா?

*- குமரன்*

## உணர்வுக் கவிதை

கடந்த இதழில் வெளிவந்த தாயகக் கவி புதுவை இரத்தினதுரை அவர்களின் வன்னி மண் இன்னொரு திருச்செந்தூர் ஆகட்டும் என்ற இதயக் குமுறல் படித்தவர்கள் அனைவரையும் பாதித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உயர்ந்த இக் கவிதையை உரிய வேளையில் எம்மை வாசிக்கச் செய்த உங்கள் உயர்ந்த உள்ளத்திற்கு நன்றி

அந்தப் பக்கங்கள் என்னிடம் பக்குவமாகப் பதிந்துள்ளது. அவர் எண்ணம் நிறைவேற அனுதினமும் பிரார்த்திப்போம்.

*- உமா மஹாலிங்கம்*

## பெண்ணியத்துக்கு பெருமை

தன்னுடைய மகள் மாயா உலகப் புகழ் பெற்ற விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளார். இது பெண்ணியக்காரருக்கு பெருமை சேர்கிற விடயம் என்று புலம்பித்திரிகிறார் 'லங்கா ராணி' அருளர்.

ஈழத்துப் பெண் ஒருவர் இப்படியான விருதுக்கு தெரிவாவது வரவேற்கப்பட வேண்டிய சங்கதிதான். ஆனால் இதில பெண்ணியத்துக்கு என்ன பெருமை என்பது விளங்கேல்லை. பிறிற்னி பியர்ஸ் இன் தகப்பனை (அப்பிடியொராள் இருந்தால்) கேட்டால் தெரியுமோ?

*- அன்பு*

## ரவி மாஸ்டருக்கு நன்றிகள்

வன்னியில் நான் வாழ்ந்த அழகிய நாட்களை மீண்டும் மீட்டுப் பார்ப்பதற்கு இரவி அருணாச்சலம் எழுதிக் கொள்வது பகுதி ஒரு வாய்ப்பைத் தந்திருக்கிறது. அந்தப் பகுதியை அழகாக எழுதி வரும் இரவி மாஸ்டருக்கு நன்றிகள்

கிராமங்களில் தான் மனிதம் வாழ்கிறது என்பதற்கேற்ப மனிதத்தைத் தாங்கி நின்ற அந்தப் பூமி இன்றைக்கு சிங்கள இனவெறியர்களாய் கொலைக்களமாய் மாற்றப்பட்டிருக்கிறது என்பதை எண்ணும் போது வேதனை கொப்பளிக்கிறது.

*- சாந்தினி*

## எரிச்சல்தான் வந்தது ...

கடந்த ***ஒரு பேப்பர்***ரை பார்த்ததும் எனக்கு உங்களில் எரிச்சல் எரிச்சலாய் வந்தது.

பேப்பரை கொழுத்தவேண்டும் எண்டு ஆத்திரம் வந்தது. ஏனெனில் அது வெளிவந்த காலத்தில் விடுதலைச்சிறுத்தைகளின் தலைவர் தொல் திருமாவளவன் அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தினை மேற்கொண்டிருந்தார். இங்கு வரும் மற்றைய தமிழ்ப்பத்திரிகைகள் எல்லாம் அச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்திருக்க நீங்கள் ஒருவரி கூட எழுதவில்லை.

மூன்று நாள் கழித்து என் மீது எனக்கு கோபம் வந்தது. உங்களின் மீது மிகுந்த மதிப்பு ஏற்பட்டது. நீங்கள் சும்மா சலசலப்புக்கு எல்லாம் அசையிற ஆக்கள் இல்லை. உங்கள் பணி தொடரட்டும்.

*- சிவானந்தம்*

## திருத்தவே ஏலாது

ஆர் என்ன சொன்னாலும் நாங்கள் செய்யிறதைத் தான் செய்வம் எண்ட கொள்கையோடை இருக்கிறியள் போலை கிடக்குது.

தனிநபர் தாக்குதலைத் தவிருங்கோ எண்டுநாங்களும்கத்திப்பாத்திட்டம். ஆனால் நீங்கள் கெடுகிறன் பந்தயம் பிடி எண்டு நிக்கிறியள்.

திருந்தவே மாட்டன் எண்டு அடம்பிடிச்சால் நாங்கள் என்ன செய்யிறது

*- சுகுமார்*

## வெட்கமாக இருக்கிறது

பிரான்சில் எம் இளையவர்கள் நடத்திய வெற்றிகரமான வீதி மறியல் போராட்டம் குறித்த செய்தி ஒரு புறம் மகிழ்ச்சியைத் தந்தாலும் இன்னொரு புறம் வெட்கப்பட வைக்கிறது.

மிகக் குறைந்த தொகையில் வாழ்ந்து கொண்டு அங்குள்ள மக்கள் வீதியில் இறங்கிப் போராடி தமக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தட்டிக் கேட்க படித்தவர்கள் புத்தி ஜீவிகள் என்றெல்லாம் பிதற்றிக் கொண்டு லட்சக்கணக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் இங்கிலாந்துத் தமிழர்கள் நாம் என்ன செய்கிறோம்.

எமது இந்த நிலமைக்குக் காரணமான பிரித்தானியா அரசிடம் நீதி கேட்டு பாராளுமன்ற வீதியிலே வீதிமறிப்புப் போராட்டம் செய்ய முடியாதா? இதற்கு இல்லாதது பலமா? மனமா?

எமது மக்களுக்காக நாமே போராடத் தயாராயில்லாவிட்டால் வேறு யார் தான் போராடுவார்கள்.

காலம் கடக்க முன் எமது கடமையைச் செய்ய வேண்டும் என்பது என்னுடைய அவா

*- சஞ்சீவன்*

## அணிகள் அறிந்தோம்

அணிகள் அறிவோம் என்ற பெயரில் அழகாய் கவிதை இலக்கணத்தை தொடராய் எழுதி முடித்த சபேசனுக்கு நன்றி.

புதுக்கவிதையின் ஆக்கிரமிப்பாலோ என்னவோ இந்த அணிகள் குறித்து எவருமே பேசாத ஒரு நிலையில் அதை மிகவும் இலகு நடையில் யாவருக்கும் விளங்கும் விதத்தில் உதாரணங்களுடன் தந்திருந்தார்.

இது போல தரமான இலக்கிய ஆககங்களைத் தொடர்ந்து பிரசுரிப்பீர்கள் என நம்புகிறேன்.

*- சாந்தி*

## தர்மகுமாரி நாட்டியம் கட்டுரை தொடர்பான விளக்கம்

***ஒரு பேப்பர்*** இதழ் 108 இல் (27 டிசம்பர் - 8 ஜனவரி). 29ம் பக்கத்தில் வெளிவந்த 'தர்மகுமாரி நாட்டியம்' என்ற கட்டுரையில், இந்திய பொதுவுடமைக் கட்சியின் தமிழ் நாடு அணியைச் சேர்ந்த தோழர் மகேந்திரன் மீது அவதூறுகளைத் தெரிவித்த, தென்னாபிரிக்காவினை வசிப்பிடமாகக் கொண்ட தர்மகுமாரி நாகலிங்கம் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

அவற்றுள் அவரது சகோதர, சகோதரிகள் பற்றிய பெயர் விபரங்களும் அடங்கியிருந்தன. அவர் யார் என இனங்காட்டுவதற்காக அவ்விபரங்கள் தரப்பட்டிருந்தனவே தவிர, அவர்களுக்கும் இந்த பெண்ணினது நடவடிக்கைகளுக்கும் எவ்வித தொடர்புமிருப்பதாக அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதனை கவனத்தில் எடுக்குமாறு எமது வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

*- பொறுப்பாசிரியர்*

வாசகர் கடிதம்

# பூட்டப்பட்ட அறைக்குள் தான் போராட்டங்களா?

எங்கள் தமிழ் மண்ணும் தமிழ் மக்களும் சொல்லொணாத் துயரங்களை அநுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சொல்லொணாத் துயரம் என்று சொல்வதை விட மரணத்தின் விளிம்பில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதே உண்மை

எமது மக்களின் நிலை கண்டு ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் எம்மவர்கள் பலவிதமான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு போராட்டங்களைக் கொச்சைப்படுத்துவதோ அல்லது எள்ளி நகையாடுவதோ என்னுடைய கடிதத்தின் நோக்கமல்ல என்றாலும் எங்கள் உழைப்பு விழலுக்கிறைத்த நீராகி விடக் கூடாதே என்ற ஆதங்கத்தில் இதனை எழுதுகிறேன்.

கனடாவிலும் இது போன்ற போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான அறிவிப்புகள் தினமும் வானொலி பத்திரிகை வாயிலாக வெளியிடப்படுகின்றன.

அந்த வகையில் அண்மையில் நடைபெற்ற வரும் சுழற்சி முறை உண்ணாநிலைப் போராட்டம் ஒன்றிற்குச் சென்றிருந்தேன். நான் போன போது அங்கே ஐவர் உண்ணாவிரதமிருக்க மேலும் ஐவர் அங்கு நின்றிருந்தனர்.

ஒரு மூடிய மண்டபத்திற்குள் நடந்த அந்தப் போராட்டத்தை வீதியால் சென்றவர்களால் கூட உணர முடியாமலிருந்தது.

எனது கேள்வி என்னவென்றால் இந்தப் போராட்டத்தின் பலன் என்ன என்பதே? இந்தப் போராட்டத்தினால் சிங்கள அரசு செய்யும் இன அழிப்பை வெளிக் கொணர முடிந்ததா? எமது மக்கள் படும் அவலங்களை வெளி உலகிற்குக் கொண்டு வர முடிந்ததா? மனித உரிமை மீறல்களைப் படம் பிடித்துக் காட்ட முடிந்ததா?

இது போன்ற இன்னொரு போராட்டம் தொடர்பாக வானொலி ஒன்றிற்குப் பேட்டியளித்த ஒழுங்கமைப்பாளரிடம் இங்குள்ள பொதுமக்களிடம் இந்த அவலங்களை எடுத்துச் செல்வதற்கு நீங்கள் என்ன வகையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறீர்கள் எனக் கேட்டதற்கு அவரது பதில் இப்படியாக அமைந்திருந்தது.

'உண்மையில் இந்தப் போராட்டத்தின் மூலம் வெளி மக்களுக்கு பெரிதாக ஒரு தகவலையும் சொல்ல முடியாது தான். அதற்கான போராட்டங்களை எதிர்காலத்தில் நடத்துவோம். இந்தப் போராட்டத்தின் நோக்கம் எமது மக்களை எழுச்சிப் படுத்துவதற்காகத் தான்'

என்னுடைய கேள்வி என்னவென்றால் ஐந்து பேர் மூடிய கட்டடத்திற்குள் அமர்ந்திருந்து உணர்வுகள் மரத்துப் போன தமிழரை எப்படி எழுச்சிப் படுத்தப் போகிறீர்கள் என்பதே.

உண்மையில் எமது மக்களை அவலத்திலிருந்து காக்க நாங்கள் செய்ய வேண்டியது இந்த அவலங்களை வெளியுலகிற்கு எடுத்துச் செல்வதே. அதனை மூடிய கட்டடத்திற்குள் ஐந்தாறு பேர் உட்கார்ந்திருந்து செய்து விட முடியும் என்று நான் நினைக்கவில்லை.


மாறாக பேரணியாய், ஊர்வலமாய் மக்கள் திரள வேண்டும். சிங்கள இன வெறி அரசின் மனிதப் படுகொலைகளை சித்தரிக்கும் பதாதைகளைக் காட்சிப் படுத்த வேண்டும்.

இப்போதெல்லாம் என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்பவர்களை விட எத்தனை பேர் சேர்ந்து சொல்கிறார்கள் என்று பார்ப்பவர்களே அதிகமாகி விட்டார்கள்.

எனவே இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகளில் அனைத்துத் தமிழர்களும் ஒன்றுபட்டுக் கலந்து கொண்டு எம் உறவுகளை சாவின் விளிம்பிலிருந்து காத்திட வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் இத்தகைய நிகழ்வுகளை ஒழுங்கு செய்பவர்கள் இந்த விடயங்களை கவனத்தில் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

*- சதீசன்*



Natural Herbal Medicine

GURUJI
S.L SAHADEVA RAJA (KANNAN)

ஆதிவாசி இயற்கை மூலிகை வைத்தியசாலை கைநாடி பார்த்து உங்கள் சகலவிதமான நோய்களையும் இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்து வைக்கப்படும்.

நாடி பிடித்துப்பார்த்தல் இலவசம்

இந்தியாவில் 8 தலைமுறையாக வைத்தியம் செய்தவர்கள் இப்போது

ஆஸ்த்மா, தோல்வியாதி, புற்றுநோய், நீரிழிவு, இரத்த அலர்ஜி, மாதவிடாய்ப் பிரச்சினை, குடற்புண், மூலநோய், முடி உதிர்தல், மூட்டு நோ, தலைவலி, பக்கவாதம், நரம்பியல், ஞாபகமறதி, தும்மல், அலர்ஜி, எக்சிமா, பயம் மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும் இயற்கை மூலிகை வைத்தியப்படி பக்க விளைவுகள் எதுவுமின்றி குணப்படுத்த முடியும் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்

Come and meet the Group Leader tribal Adivasi Herbal Medical practitioner and get relief from all kinds of diseases, illness diagnoised only by pulse reading, Giving wonderfull natural herbal treatment, Also Herbal Treatment for mor than 360 kinds diseases with out any side effects Asthma, Allergy, Diabetes, Arthritis (Join Pain), Fear, Memory Loss, Menstrual Problem, Ulcer, Dermatitis, All Type Piles, Kidney Stone, Cancer, Paralysis, Neuropathy, Nerous Weakness, Hair Fall, Ezema, Blood Allergy, Headaches.

Evershine Dry Cleaner (Upstairs) 123 Mitcham Road, Tooting, London, SW17 9PE Near By Tesco

MOB: 07918 995 631 & 07529 400 523

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, JANUARY 30, 2009, ISSUE 110

## ஏமாற்றிய இந்தியா

சில காலமாக. இலங்கைத்தீவின் இனமுரண்பாடு விடயத்தில் தலையிடாத கொள்கையை கடைப்பிடித்து வருவதாகக் குறிப்பிட்டு வந்த இந்தியா, சிறிலங்கா அரசின் ஈழத்தமிழர் மீதான போருக்கு, ஆயுத, ஆளணி உதவிகளை செய்து வருவது இப்போது உறுதியாகி விட்டது.

அண்மையில் கூட, தமிழ்நாடு ஈரோட்டிற்கு தொடருந்தில் அனுப்பப்பட்ட கனரக ஆயுதங்களும், இலங்கைக்கு விமான மூலம் எடுத்துச் செல்ல கொண்டுவரப்பட்டவை என்ற செய்திகள் வெளியாகியிருக்கின்றன. வன்னியில் சிறிலங்காப்படைகளுடன் இந்தியப் படைகளும் இணைந்து செயற்படுவதாகவும் சந்தேகிக்கப்படுகிறது. தமிழ் ஒட்டுப்படைகளுடனான அவரது தொடர்பும் முன்பு தெரிய வந்தது.

இந்திய நடுவண் அரசின் அமைச்சர்களும், அரச ஆலோசகர்களும் சிறிலங்கா அரச ஆதரவு நிலைப்பாட்டை, இப்போது வெளிப்படையாகவே தெரிவித்து வருகிறார்கள். முக்கிய அமைச்சுப் பதவியிலிருக்கும், பிராணப் முகர்ஜி போன்றவர்கள், சிறிலங்கா அரசுக்கு சார்பாகவே நடந்து கொள்கிறார்கள் எனின் அது இந்திய நடுவண் அரசின் வெளியுறவுக் கொள்கையாகவே கருதப்படவேண்டும். இந்நிலையில், தமிழ்நாட்டு தலைவர்கள் சிலர், ஈழத்தமிழர் விடயத்தில், மத்திய அரசை நம்பியிருப்பது கோமாளித்தனமாகவே தெரிகிறது.

அண்டைநாடு என்ற வகையிலும், பிராந்திய வல்லரசு என்ற வகையிலும், தவிர்க்க முடியாமல், இந்தியா முக்கியத்துவம் பெறுகின்றது. காலங்காலமாக, ஈழத்தமிழர்கள்,

இந்திய மக்கள் மீதும், அதன் தலைவர்கள் அறிஞர்கள் மீதும் பெருமதிப்பு வைத்து வருபவர்கள் என்ற வகையில், அதன் ஆதரவு தம்பக்கம் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்தது. இந்திய அரசு, பஞ்ச சீலக் கொள்கைகளையோ, அறம் சார்ந்த வெளிநாட்டுக் கொள்களையோ கடைப்பிடிக்கும் என்ற எதிர்பார்ப்பு இல்லாவிட்டாலும், தனது நாட்டு மக்களின் ஒரு தொகுதியான ஏழரைக் கோடி தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவாவது அது நடந்து கொள்ளும் என்ற நம்பிக்கையும் இப்போது தகர்ந்து விட்டது.

இந்நிலையில் இந்திய அரசின் நடவடிக்கைகளினால் விரக்தியுற்று, முத்துக்குமார் என்ற தமிழக இளைஞன் தன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்?. அவரது நடவடிக்கையை நாம் ஏற்றுக் கொள்ளாவிடினும், அந்த இளைஞனின் கோபம் நியாயமானது என்பதனை மறுப்பதற்கில்லை.

## ஒரு பேப்பர்

*வணக்கம் !*

*மிகவும் வேதனை தரும் நாட்களில் உங்களைச் சந்திக்கிறோம். வன்னிப்பெரு நிலப்பரப்பில், எமது மக்கள் படும் துக்கம் எல்லோரையும் துக்கத்தில் ஆழத்தியுள்ளது. ஜனவரி 24ம் திகதி எமது வாசகர்களில் ஒருவரான மயில்வாகனம் ஐயா சாவடைந்தார். போதிய மருத்துவ வசதிகள் இருந்திருப்பின் அவரை காப்பாற்ற முடிந்திருக்கும் என அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். ஒரு பேப்பர் ரை விரும்பிப் படிக்கும் இன்னொரு முக்கியமானவர் பாலகுமாரன் அண்ணா, சிறிலங்கா அரச படைகளின் எறிகணைத் தாக்குதலில் அவரும் படுகாயமடைந்துள்ளதாக அறிகிறோம். இப்படியாக துக்கம் நீண்டு கொண்டு செல்கிறது.*

*சாத்திரி நெடுக பொம்பிளையளைத்தான் கிண்டலடித்து பயோடேற்றா எழுதிறார் எண்டு சில புறணி சொல்லுகினம். சாத்திரி மாதிரி நீங்களும் பயோடேற்றா எழுதலாம். நல்லாய் இருந்தாப் போடுவம். பக்கத்துவீட்டு அக்காவைப் பற்றி (திரும்பவும் பொம்பிளையா?) நீங்கள் எழுத, அவா சண்டைக்கு வராட்டாய் சரி. அப்பிடி எழுதியனுப்பேக்கை உங்கடை தொடர்பு விபரங்களை தெரியப்படுத்துங்கோ. (எல்லாம் ஒரு பாதுகாப்புக்குத்தான்)*

*கனடாப் பதிப்பிலை நாங்கள் அவ்வளவு கவனம் செலுத்திறதில்லை, அதை நேரத்துக்க வரச் செய்யுங்கோ எண்டு கனபேர் கேட்டிருக்கினம். உண்மைதான் கனடாவிற்கான எங்கட பொறுப்பாளர் பல சோலியிளிலை திரியிறதாலை, கொஞ்சம் சிக்கலாயிடுத்து. எண்டாலும் இதை விரைவில் சீர் செய்கிறோம்.*

*நடக்கவிருக்கும் நிகழ்வுகள் பகுதியில் நீங்கள் நடாத்துகிற நிகழ்ச்சிகளை பற்றிய விபரங்களை பிரசுரிக்க விரும்பின் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். அவை நிறுத்தப்பட்டால் அல்லது ஒத்திப் போடப்பட்டால் தவறாது எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

*அறுவைப் பக்கம் என்று சொல்லி ஒரு பக்கத்தை வேஸ்ட் பண்ணாதேங்கோ எண்டு பலர் புத்திமதி சொல்லியினம். அதொண்டுதான் எங்களுக்கு பிடிச்சது அதை நிப்பாட்டினா உங்கட பேப்பர் மாஅரிக்கத்தான் லாயக்கு என்று சிலர் சொல்கிறார்கள். வழமையா மாவரிக்கிறதுக்கு ஒரு பேப்பர் ரை எடுத்துக் கொண்டு போற அக்கா சொல்லிறா அறுவைப் பக்கம் வந்தால் என்ன வராட்டி என்ன மாவரிக்க உங்கட பேப்பர்தான் நல்லது எண்டு. எங்களுக்கு தலையை எங்கை கொண்டு போய் மோதிறது எண்டு தெரியேல்லை. நீங்கள் உங்கடை கருத்தையும் சொல்லுங்கோ.*

*அதிகரிக்கும் வெளியீட்டுச் செலவை கட்டுப்படுத்துவதற்காக பக்கங்களை குறைப்பதாக இருந்தம். ஆனாலும் ஆக்கங்கள் பல வந்து சேர்ந்ததால் குறைக்க முடியவில்லை.*

*ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்*

# An Open Message to the International Community

**By: Eelththamilzan**

**The Slaughter of the Innocents** – the Tamil people within the Vanni and within all of the occupied territories of the homeland of Eelam Tamils, and the Internationalisation of the Sri Lankan Genocidal Terrorism against the people of Tamil Eelam. – **'The Audacity of the Sri Lanka Genocide'.**

## The Western Quagmire

Now it is official. The Sri Lankan government has admitted, it is a recipient of the full support of the governments of the international community, comprising the United Kingdom, India, United States, EU, Norway and Japan. This has not been denied by any of these countries.

If the international community thinks that by eliminating the Tamil peoples' liberation movement they can bring peace and stability to this island, then they will be sadly mistaken. Their hidden agendas based on their geo-political interests in this region, is wholly misplaced. These will never materialise and their motives in supporting Sri Lankan State-terrorism will be crushed by the freedom consciousness of the people of Tamil Eelam. The age-old traditions and practices of Eelam peoples' cultural, linguistic, geographical and ethical foundations will never succumb to the intransigent evil forces that are trying very hard to destroy their peaceful existence in this island.

These same nations gallivanting around the world preaching and propagating their version of 'Democracy' are now busy identifying and sympathising with the pro-government Tamil paramilitary terror groups, now comfortably operating together with these international mercenary missions. It is now well understood by Eelam Tamils, that the western democracies base their fundamental criteria for a democratic system of government solely on the holding of regular elections, whatever the resulting scenario, or under whatever the methodology adopted in the process of the exercise of a free vote, as long as it is conducive to their vision and their perception of an acceptable outcome, especially when it is applied to the island of Sri Lanka.

This has been blatantly evidenced by their response and their reactions towards the return of the Tamil National Alliance Members of Parliament en-block through a free and fair exercise of their vote by Eelam Tamils from the North East regions of the island.

In the General elections held in the year 2001 and later in the year 2004, the TNA were returned on the mandate, that encompassed the democratic political will of the people of Tamil Eelam, and as represented by the Liberation Tigers of Tamil Eelam. These members were returned by overwhelming majorities, over and above the paramilitary rival candidates, who managed to harness a miniscule percentage of votes, from their Sri Lankan military-backed constituency of the islands off the coast of the Jaffna peninsula.

Today the foreign offices, of international community especially that of the United Kingdom, openly aligns itself with the pro-Sri Lanka paramilitary groups, still armed to their teeth and acting in collusion with state armed forces against the people of Tamil Eelam. Where do these nations really stand on the democratic aspirations of Eelam Tamils? It is blatantly obvious that in their greed for their own advancement in economic development and corporate business enterprises, they are prepared to sacrifice the lives of the Tamils of Tamil Eelzam and encourage the evil regimes in Sri Lanka to thrive and flourish towards genocide of the Innocent Tamils.

## Politics of Mischief

The written ministerial statement by the United Kingdom Secretary of State for Foreign and Commonwealth Affairs on 21 January 2009, describing the Liberation Tigers of Tamil Eelam as "a proscribed terrorist organisation with no democratic mandate to represent the Tamil people" is both a very repugnant and loathsome sentiment that cannot be and will not be tolerated by the people of Tamil Eelam.

The human and political conscience of the people of Tamil Eelam, which includes all of the **Tamil Diaspora around the world have not proscribed the Liberation Tigers of Tamil Eelam. The hearts and minds of the Tamil people are and will continue to be entwined with the sons and daughters of their Liberation Movement.**

These nations have repeatedly refused to recognise the democratic mandate of the Tamil people, now for over thirty-two years. First, it was the Indian occupation army that helped, through vote-rigging and banning other candidates from registering, to elect paramilitary group candidates to be elected to the Sri Lanka parliament in 1987/88.

Now it is these same western governments that refuses to recognise the Liberation movement of the Tamil people and the legitimate right of the Tamil people to self-determination, and moreover, helping a Sinhala chauvinist state to decimate the Tamil National identity within their North East homeland.

The deafening silence of the international community on the genocidal war unleashed against Eelam Tamils, by the Mahinda's regime, shows their intransigence of their deceptive diplomacy.

Today the so-called International Community stands obliged to provide a rational and coherent answer to the Tamil Diaspora, now resident within their territories not by choice but by necessity, on the burning question of the Tamil National Issue in the island of Sri Lanka.

The pivotal Era from when Eelam Tamils, their economic, cultural and hard earned personal wealth came to be harassed, raped, murdered, plundered, and subjugated by the Chauvinist Sinhala regimes and their pro-Sinhala Buddhist armed forces, had begun well over twenty years before the present constitution of Sri Lanka came into being, and well over thirty-five years before the beginning of the liberation struggle.

Any decent and impartial person who has followed the Tamil Liberation struggle from its infancy, against repressive and inhuman regimes in power in the island, will understand and appreciate the will and courage of the sons and daughters of the people of Tamil Eelam who had fought valiantly and with honour and sacrifice, to defend the Tamil nation and its people.

**Eelam Tamils will never surrender their Self-respect, their Ethnic foundations and their National Pride. Nor will they surrender their National Sovereignty of their North East homeland regions in the island of Sri Lanka.**

*Courtesy: TamilCanadian*

# நீதி செத்த தேசம் இது என்பதை உயர்நீதிமன்றமே ஏற்கும் நிலை!

உதயன்

## ஆசிரியர் தலையங்கம்

சட்டமும், ஒழுங்கும் நிலைநாட்டப்பட முடியாத தேசம் இலங்கை என்பதை உயர்நீதிமன்றமே பகிரங்கமாக ஒப்புக்கொள்ளும் அவல நிலைக்கு நாடு வந்துவிட்டது.

நாட்டின் பிரஜை ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்படுமானால் அதிலிருந்து மீட்சியும், நிவாரணமும் பெறுவதற்கு அந்தப் பிரஜைக்கு சட்ட ரீதியாக ஒரே யொரு வழிதான் உண்டு. அது, உயர்நீதிமன்றத்திடம் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்து அந்த நீதிமன்றத்தின் மூலம் மீட்சி பெறுவதுதான்.

ஆனால் நாட்டின் முழுப் பிரஜைகளினதும் அடிப் படை உரிமைகளைப் பறிக்கும் ஒரு விடயத்தில், உயர் நீதிமன்றம் தலையிட்டு, நீதி, நியாயத்தை எடுத்துரைத் தும் கூட, அந்த அடிப்படை உரிமை மீறலைத் தன்னால் தடுக்க முடியவில்லை என்பதை உயர்நீதிமன்றமே பகிரங் கமாக ஒப்புக்கொள்ளும் பேரவலத்துக்கு இலங்கை யின் நீதித்துறை வந்துவிட்டது.

எரிபொருள் விலை தொடர்பான 'ஹெட்ஜிங்' ஒப்பந்த முறைகேடு மூலம் பல்லாயிரம் கோடி ரூபாவை அரசு வீணாக விரயமாக இழக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டி, அதனால் மக்களின் தலைமீது எரிபொருள் செலவினக் கணக்கில் பெரும்தொகை நிதி வீணே வரி யாக சுமத்தப் படுகின்றது என்பதை விளக்கி, உயர்நீதிமன் றின் முன்னால் புத்திஜீவிகள் குழுவினால் அடிப் படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டன.

அந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதி மன்றம் அந்த விண்ணப்பங்களில் குறிப்பிடப் பட்ட மோசமான அம்சங்கள் இடம்பெறுவதை ஏற்றுக்கொண்டு, 'ஹெட்ஜிங்' ஒப்பந்தத்தைத் தொடர்வதற்கும் அதனடிப்படையில் வங்கிகளுக் குப் பல்லாயிரம் கோடி ரூபா நிதியை முறை கேடாகச் செலுத்துவதற்கும் எதிராக இடைக் காலத் தடை விதித்தது.

இந்தத் தடைகளின் அடிப்படையில், எரிபொருள் இறக்குமதிக் கொள்வனவின்போது ஏற்படும் விலை வீழ்ச்சியைக் கருத்தில் எடுத்து, நியாய மான விலைக்கு எரி பொருளை மக்களுக்கு விற்பதற்கான விலைச் சூத்திரம் ஒன் றைத் தருமாறு அரசுக்கு திறைசேரிச் செயலாளருக்கு நீதிமன்றம் பணிப்புரையும் விடுத்தது. அரசின் சார்பில் அவர் சமர்ப்பித்த விலைச்சூத்திரத்துக்கு அமைவாகப் பெற்றோலின் விலையை லீற்றர் நூறு ரூபா வீதம் குறைத்து விற்கும்படி நீதிமன்றம் பணிப்புரை விடுத்தது.

**நாட்டின் மிக உயர்ந்த சட்ட ஆயத்தின் கட்டளை யையே, நாட்டின் ஆட்சிப் பீடம் தூசாக மதித்து, தூர வீசும் நிலையில்.**

அடிப்படை உரிமை மீறல் விடயம் ஒன்றை ஒட்டி, அரசுத் தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைச் சூத்திரத் தின் அடிப்படையில் விடயத்தைத் தீர்மானித்து உயர் நீதிமன்றம் விடுத்த இந்த உத்தரவை ஏற்று நடை முறைப்படுத்த அரசே தவறிவிட்டது. அந்த உத்தரவை உதாசீனப்படுத்தி, புறந்தள்ளி, நிராகரித்து விட்டது நாட்டின் நிறை வேற்று அதிகாரம்.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கின் கடைசித் தவணை யின் போது கூட, உயர்நீதிமன்றின் பணிப்புரையை நடைமுறைப்படுத்துவதா என்பது குறித்து அரசுத் தலைமை ஆராய்வதற்கே அரசு சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜென ரலினால் கால அவகாசம் கோரப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது.

பெற்றோல் விலை தொடர்பாக உயர்நீதிமன்றம் விடுத்த உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்குக் கால அவகாசம் கோரப்படவில்லை. நடைமுறைப் படுத்து வதா அல்லது இல்லையா என்று ஆராய்வ தற்குத்தான் மேலும் கால அவகாசம் அரசுத் தரப்பினால் கோரப்பட்டது என்பது கவனிக்கத் தக்கது.

அதாவது, உயர்நீதிமன்றம் இலங்கையின் அதியுயர் நியாயாதிக்கம் கொண்ட நீதி ஆயம் விடுத்த உத்தரவை நடைமுறைப்படுத்தாமல் புற க்கணித்து, உதாசீனம் செய்யும் அதிகாரம் தன க்கு இருப்பதாக நிறை வேற்று அதிகாரமும், அரசும் வெளிப்படையாகவே பிரதிபலித்துக் காட்டும் நடவடிக்கையே இது.

நாட்டின் மிக உயர்ந்த சட்ட ஆயத்தின் கட்டளை யையே, நாட்டின் ஆட்சிப் பீடம் தூசாக மதித்து, தூர வீசும் நிலையில்

தமது அடிப்படை உரிமைகள் ஆட்சித் தரப் பால் மீறப்படுவதற்கு நிவாரணம் கோரி அந்த ஆயத்திடம் சட் டப்படி விண்ணப்பித்த பொது மக்கள், வேறு வழியின்றி தங்கள் விண்ணப் பங்களை முடிவுறுத்திவிட்டு, நடை யைக் கட்ட வேண்டியதாயிற்று.

மறுபுறத்தில், உயர்நீதிமன்றமும், தனது உத்த ரவு களை அரசு நடைமுறைப்படுத்தி ஆகவேண் டும் என்ற சட்ட நியாயத்தை கடப்பாட்டை வெளிப் பேச்சுக்கு ஒரு தடவை கூறி, வழக்குக் கோவையில் அதைப் பதிந்து விட்டு, அடங்கிப் போக வேண்டியதாயிற்று.

உயர்நீதிமன்றக் கட்டளையை நடைமுறைப் படுத்த முடியாது என உதாசீனப்படுத்தி, நீதிமன்ற த்தை அவ மதித்த குற்றத்துக்காக நிறை வேற்று அதிகாரத்தையோ அல்லது அரசின் அமைச்சரவையையோ, தண்டிக்க முடியாத கையா லாகாத் தனத்தில் இருக்கும் உயர்நீதிமன்றத் திற்கு அந்த வழக்கின் விசாரணைகளை அத்துடன் முடிவுறுத்தி, கோவைகளை மூடிக்கட்டி தூக்கிப் போடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பது துலாம்பரமாகியுள்ளது.

நீதி செத்த நாடு இது என்பதை நீதிமன்றமே நாட்டின் உச்ச நியாயாதிக்கம் கொண்ட நீதி ஆயமே பகிரங்கமாக ஒப்புக் கொண்டு இலங்கைத் தீவுக்கும், இதன் அரச நிர்வாக முறைமைக்கும் 'நற்சான்றிதழ்' அளிக்கும் அவலம் இத் தேசத்துக்கு நேர்ந்திருப்பது அதன் துரதிஷ்டமே.

நீதி ஒரு நாள்
எம்மை நிமிர்த்தும்
நெஞ்சு நிமிர்த்தி
நாம் எழுவோம்

ஒரு பேப்பர்
ORU PAPER

A READER'S COMMENT

## Tamil Nadu needs to forge an Eezham front

It is time that like-minded political parties, civil groups, social activists, student organizations and cultural institutions of Tamil Nadu jointly forge a mass movement under one umbrella and aim to achieve independence and sovereignty for Eezham Tamils, urged a large number of mails received by TamilNet from India, Eezham and the Tamil diaspora all over the world in the last ten days in response to the call of TamilNet for opinion. "The front should face the forthcoming elections in Tamil Nadu on the question of achieving an independent and sovereign nation state for Eezham Tamils, in no uncertain terms, and get the mandate from the people", the mails further urged.

The feature presented here is the third of the series of edited compilation of views received from readers in response to the call of TamilNet on 16 January, 2009.

Tamil Nadu needs to forge an Eezham front

Such a move is a positive first step, democratic in means and legal in international precedence to materialize the recognition of India and the international community for the nation state of Eezham Tamils.

The major impediment for a political solution to the crisis in the island of Sri Lanka is the ambiguity in perception on the model for political solution.

The Sri Lankan state, India and the international community miserably failed in the last quarter a century in successfully conceiving and implementing a political solution other than secession.

In their frustration they have now resorted to a brutal military solution of genocide and military subjugation of Tamils, citing the LTTE as an excuse.

They may think that playing the card of the ethnic majority in the island is safe, but they have a wrong notion of the nature of the ethnic majority in the island, cultivated in the colonial and post colonial times, based on psychologically indelible images from history.

In the process of abetting a war against Tamil nationalism in the island, the involved parties have only contributed to the deterioration of democratic institutions, militarization and rise of totalitarianism in the island.

For the first time in the history of modern South Asia, it has so happened that all the authoritarian forces of the world have joined hands in allowing and abetting the military subjugation of a people by their adversaries, without international safeguards and monitoring.

This is virtually enacting scenes of Africa in South Asia. Setting the act of genocide on one of the ancient cultures of humanity by another ancient culture of South Asia is premeditated at creating a catastrophe in the region.

The precarious situation is actually paving way on one hand for a corporate conquest of the island to make further inroads into South Asia, and on the other hand for elements wish to destabilize South Asia to infiltrate.

Obviously Tamil Nadu is in the forefront of affliction and needs to be awakened.

In the given circumstances, for all practical purposes, creation of an independent, sovereign nation state for Eezham Tamils is the only way to diffuse tension in the region.

It is humanitarian and is a historical logic.

Above all, it is the only way to bring back democracy to Eezham Tamils as well as to Sinhalese and to engage them in a healthy competition of 'nationally orientated development'.

It is in fact a move to liberate both Eezham Tamils and the Sinhalese from totalitarianism secretly conceived by elements aspiring for global domination.

As for Tamil Nadu it is not merely an act of Tamil sentiment.

It is a process of awakening the masses for a noble cause, awakening of democracy and human rights, inspiration to the oppressed and elimination of opportunists and elements of vested interests from the mainstream of Tamil politics.

Tamil Nadu and its people will be tremendously benefited by this exercise, which is no less than a political, social and cultural revolution revitalizing the Tamil civilization and its broad humanitarian potent.

Needless to say that this is to protect the interests of the peoples of India, to uphold their righteous prestige in the global community, to eliminate a perpetual blackmailing and to facilitate smooth integration of the region of South Asia.

It is a duty of civilization as well as self-interest of the people of Tamil Nadu to take up the matter into their hands, if the few who have hijacked Indian democracy and sitting in Delhi are misleading the nation and humanity.

*(Courtesy: TamilNet)*

# ஒரு பேப்பர்

ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
சேயோன் - அ.இரவி
அகிலன் - மயூரன்

கனடா
தயா - மணி

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன் - சாந்தி

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
பாலா

விளம்பரம்
கௌரி - குந்தவி

அச்சு
குமார் (ஜெர்மனி)

வடிவமைப்பு
jasmine studio

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
முருகானந்தன்

வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)

லண்டன் 020 7043 4310
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277

தொலைநகல் (Fax)
020 7043 4312

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# நீதி ஒருநாள் எம்மை நிமிர்த்தும்

**சற்று மாறுதலுக்காக**

எழுதுவது: சேயோன்

ஓம். நீதி ஒருநாள் எம்மை நிமிர்த்தும். நெஞ்சு நிமிர்த்தி நாம் எழுவோம். அந்த நாள் வரும். வராமல் எங்கே போவது? இதை எழுதும் இந்தக் கணத்தில் மிக்க துயரம் நெஞ்சை மேவி நிற்கின்றது.

இன்று (26.01.2009 திங்கள்) இருநூற்றிற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் எறிகணை வீச்சில் கொல்லப்பட்டதாக ஒரு செய்தி கூறுகின்றது. நெஞ்சு பதைபதைக்கின்றது. கை கால் நடுங்குகின்றது. ஐந்து மணித்தியாலத்திற்கு மேலாக பதுங்கு குழிக்குள் சீவிக்கின்றனர் நம் வன்னி மக்கள். பதுங்கு குழிக்குப் பக்கத்திலேயே கஞ்சி காய்ச்சிக் குடிக்கின்றனர். கஞ்சி மட்டும் தான் காய்ச்சிக் குடிக்க முடிகின்றது.

இப்பொழுது தான் இந்தத் துயரம். துக்கம் வேதனை. எப்பொழுதுமே இப்படியொரு துக்கத்தை இதுவரை நான் அனுபவித்ததில்லை. எனது பெற்றோர் காலமான போதும் கூட இப்படியோர் கவலை என்னைச் சூழ்ந்ததில்லை. எனக்கு மாத்திரமா இந்தத் துயர்? எல்லாத் தமிழர்களுக்கும் குறிப்பாக உலகில் உள்ள எல்லாத் தமிழ் உணர்வாளர்களுக்கும் இது வேதனை. மகா வேதனை. துயரம் சுடுகின்றது. துவண்டு விழும் சோகம் எழுகிறது. வேதனையும் அது தந்த விரக்தியுமே வாழ்வென்றாகிறது.

வீழ்ந்து குமுறினால் என்ன? விம்மிக் கதறினால் என்ன? சோர்ந்து போன உடலை சோகம் அப்பிக் கவிழ்க்கிறது. ஒருகணமா இரு கணமா? ஒரு முறையா இருமுறையா? ஒரு பொழுதா இரு பொழுதா? ஒரு நாளா இரு நாளா? எப்பொழுதும் எக்கணமும் சோர்தல், துடித்துப் போதல், துவண்டு விழல்.

இப்போதெல்லாம் அனர்த்த நாட்கள் அவல நாட்கள் என்றே நாட்கள் கழிகின்றன. நெருப்பில் குளித்த நாட்கள், நெஞ்சில் வெந்த நாட்கள், என்றே நாட்கள் நகருகின்றன. அடுப்பில் கரிந்த நாட்கள், அவலமாய்ச் சரிந்த நாட்கள் என்றே வாழ்வு இடறின.

அப்போது சமாதான தேவதை வேடம் கட்டிய சந்திரிக்கா காலம். ஒரு நாள் புதுக்குடியிருப்புச் சந்தை கூடிய போது சனக் கூட்டத்தின் மேல் பேரிரைச்சலுடன் கிபிர் குண்டுகளைக் கொட்டின. சாகாமல் தப்பிய ஒரு தந்தை தன் பிள்ளைகளின் உடலங்களைக் கூட்டி அள்ளிக் குவிக்கிறார். அவருக்குத் தெரிகிறது அடையாளம்.

இது இரண்டாவது மைந்தனின் கை. சின்ன மெல்லிய சுட்டு விரல் வளைந்த கை.... இது மூத்தவனின் கால். நடு விரல் சப்பழிந்த தேங்காய்ச் சிரட்டை போல் முழங்கால் மூட்டுப் பெருத்த கால்... இது....., இது ....., இது...... மேலும் எதைச் சொல்ல? எப்படிச் சொல்ல?

ஓம் என்னால் இயலாதிருக்கிறது. தோற்றுப் போகிறேன். வார்த்தைகள் எனக்கு வசப்படவில்லை. இந்தத் துயர்களை எழுத எந்தன் எழுத்துக்கு எந்த வலிமையும் இல்லை. எந்தன் மொழிக்கு எந்தத் திறமையும் இல்லை. எல்லாச் சுமைகளையும் சோகங்களையும் என் நெஞ்சில் ஏற்றி நான் துவண்டு போகிறேன்.

அது தானே இப்போது நிகழ்கிறது. அதிலும் கொடுமையாக, அதிலும் மோசமாக, ஆகக் கூடிய அனர்த்தமாக, அவலமாக அதுதானே இப்போதும் நிகழ்கிறது. ஓடி ஒடித் துடித்துப் போனவர்களையும் துவண்டு வீழ்ந்தவர்களையும் மனக் கண்ணில் கொண்டு வருகிறேன். அப்படிக் கொண்டு வந்து என்ன செய்கிறேன். இதோ எழுதுகிறேன். இது தேவைதானா? இதில் ஏதும் பிரயோசனம் இருக்கிறதா? ஏதும் புண்ணியம் இருக்கிறதா? எழுந்து செய்வதற்கு எத்தனையோ வேலை இருக்கிறது. அதைச் செய்யாமல் ஏன் எழுதுவான்?

தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டிய தருணம் இது. எமக்கு முன் கடமைகள் மலை போல் குவிந்துள்ளன. ஏதாவது செய் ஏதாவது செய் என்று அவை எம்மை இறைஞ்சுகின்றன. இவ்வேளையில் அழுது அழுது நாம் புரளுவதோ? அப்படியே காலத்தைக் கழிப்பதோ? பொழுதை வீணாகப் போக்குவதோ? இல்லை எழுந்து நிற்போம். ஏதும் செய்வோம்.

யுத்தத்தை நாம் விரும்பி ஏற்றோமா? சாவுகளை நாம் வரவேற்கின்றோமா? வன்முறை மீது காதல் கொண்டு அலைந்தோமா? விளையாட்டுப் பந்தென்று துப்பாக்கிக் குண்டை வைத்து நாம் விளையாடுகின்றோமா?

யாவும் எம்மீது திணிக்கப்படுகின்றன. யாவற்றையும் எம்மீது நிர்ப்பந்திக்கின்றனர். அதனால் யாவற்றையும் எதிர்கொள்கின்றோம். முகம் திருப்பவில்லை. மனம் சலிக்கவில்லை.

எங்கள் கடமையை நாங்களே செய்வோம். எவருக்காகவும் நாம் அழலாம். ஆனால் எமது பசிக்கு நாமே உண்ண வேண்டும். எமது தாகத்தை நாமே தீர்க்க வேண்டும். எமக்கு முன்னே இரண்டு பாரிய கடமைகள் உள்ளன. அவலப்பட்டு அலையுற்று இழப்புக்களுடன் இருக்கும் ஏதிலிகளுக்காக நாம் ஏதும் செய்ய வேண்டும். இரண்டாவது எமது போராட்டத் தீ அணையாமல் இருக்க எண்ணெய் வார்த்து திரி தூண்ட வேண்டும்.

இப்போது எமக்கொரு சந்தர்ப்பம் காத்திருக்கிறது. உணர்வுள்ள ஈழத் தமிழர் யாவரும் இலட்சம் இலட்சமாய்க் கூடுவோம். அணி திரள்வோம். எமது கொட்டு முழக்குகளை உலகின் செவிப்பறையில் அதிரச் செய்வோம். ஒன்றாய்க் கூடி கொட்டி முழக்கினோம் என்றால் அதிரச் செய்ய வேண்டும்.

வரும் 31ம் திகதி (31-01-2009) லண்டனில் பேரணி ஒன்று நிகழ உள்ளது. நாம் அனைவரும் அங்குகூடுவோம். கூடுவோமா?

# மனதைக் கட்டுப்படுத்தல்

'என் சிந்தனையை என்னால் எப்போதுமே கட்டுப்படுத்த முடிவதில்லை' என்று பொதுவாக எல்லோரும் சொல்லக் கேட்கிறோம். ஆனால், நிச்சயம் ஒருவரின் சிந்தனையை அவரால் கட்டுப்படுத்த முடியும். மூளையைக் கட்டுப்படுத்துவதை மிகவும் சுலபமாகச் செய்ய முடியும். நமது மூளைக்கு வெளியில் என்ன நடந்தாலும் நமக்கு வலிப்பதில்லை, மகிழ்விப்பதுமில்லை. அந்த மகத்தான உடலுறுப்புக்குள் நடப்பதை நாம் நம் கட்டுக்குள் வைத்திருப்பது என்பது மிகமிக முக்கியம்.

இந்தக் கருத்து மிகப் பழமையானது. ஆனால் இதுதான் முழுமுதல் உண்மை. மனக் குவிப்புக்குத் தேவையான ஆற்றல் தங்களிடம் இல்லை என்று மக்கள் ஆதங்கப்படுகிறார்கள். அவர்கள் நினைத்தால், அந்த அற்புத ஆற்றலை வளர்த்தெடுத்து தன்வசப் படுத்தலாம் என்று அவர்கள் உணர்வதேயில்லை.

இந்த மனக்குவிப்பு எனும் ஆற்றல் இல்லையென்றால், நாம் நம் மூளையை நம் கட்டுக்குள் வைத்திருக்க முடியாது. நமக்கு மூளையை அடக்கியாளும் சக்தி முதன்மையாகிறது. மூளையின் கீழ்படிதல் இல்லாமல் முழுமையான வாழ்க்கை சாத்தியமே இல்லை. முழுமையான வாழ்க்கையின் முதலும் முக்கியமும் ஆன அங்கம் மனக்கட்டுப்பாடு தான்.

ஒருவர் அந்த நாளின் வேலைகளை மூளைக்குள் பதிந்து விடுதல் வேண்டும். பிறகுமூளையை ஒவ்வொரு கட்டமாகக் கவனிக்க வேண்டும். உங்களின் உடலை உள்ளேயும் வெளியேயும் பார்த்துக் கொள்வதில்லையா நீங்கள்?

உங்களின் வயிற்றுக்கு உகந்த உணவை உட்கொள்ள எந்தவிதமான சிரமத்துக்கும் நீங்கள் தயாராக இருக்கிறீர்கள் இல்லையா?

அதேபோல ஒவ்வொரு உடலுறுப்பையும் நீங்கள் கவனித்துக் கொள்கிறீர்கள். ஏன் மூளை எனும் அந்த அரிய உறுப்புக்கும் கொஞ்சநேரத்தை ஒதுக்கக் கூடாது?

வீட்டைவிட்டுக் கிளம்பும்போது, உங்களின் மனதை ஒரு விஷயத்தில் குவியுங்கள். அது எதாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஏதோ ஒன்றில் உங்கள் மனம் குவியட்டும். துவக்கத்தில் இந்தச் சலுகை உண்டு.

பத்து காலடி தூரம் நடந்திருக்க மாட்டீர்கள். அதற்குள் உங்களின் கட்டுப்பாட்டிலிருந்து உங்கள் மனம் உங்களை ஏமாற்றிவிட்டு வழுக்கிக் கொண்டுநழுவியிருக்கும். விலகிவேறொரு விஷயத்தில் நிலைகொள்ளும். விடப்படாது. மீண்டும் இழுத்து வாருங்கள் அந்த அலையும் மனதை. ரயில் நிலையத்தை அடைந்தாயிற்றா? அதற்குள் குறைந்தது முப்பது நாற்பது முறை இந்தமாதிரி நழுவவிட்டு, இழுத்து, போராடியிருப்பீர்களே!

சரி, அப்படியே இருக்கட்டும். கவலையே படாதீர்கள். தொடர்ந்தும் இதே பயிற்சியைச் செய்யுங்கள். விடாதீர்கள். வெற்றி பெறுவீர்கள். விடாமுயற்சியுடன் செய்தால் தோல்விக்கு ஏது இடம்? மனம் குவிகிறது என்று சொல்லி உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்வதில் ஒரு பலனும் இல்லை என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்.

அன்றொரு நாள் ஒரு கடிதம் வந்ததே, நினைவிருக்கிறதா? பதில்போட மிகவும் தேர்ந்தெடுத்த சொற்களில் கவனமாக எழுத வேண்டியிருந்தது, இல்லையா? எப்படி அந்த பதிலில் உங்கள் மனம் குவிந்தது? யோசியுங்கள். எந்தச் சின்னத் தொந்தரவையும் ஏற்காமல் உங்களின் மனம் அன்று குவிந்து யோசித்தது இல்லையா? அலுவலகத்துக்குப் போகும்வரை எழுத வேண்டிய பதிலிலேயே குவிந்தது மனம். அப்புறம் என்ன? அலுவலக அறைக்குள் நுழைந்ததுமே, உட்கார்ந்து கிடுகிடுவென்று துல்லியமாக உங்கள் பதிலை எழுதி முடித்து விட்டீர்கள்!

இதுதான் சூட்சுமம். சூழல் உங்களில் ஏற்படுத்திய துடிப்பும் வேகமும் உங்களை இயக்கின. அவை கொடுத்த ஆற்றலால் நீங்களே உங்கள் மனதை அருமையாகச் செலுத்தினீர்கள். ஒரு சின்னக் குழப்பமோ சலனமோ தயக்கமோ இருந்ததா? இல்லையே. வெகு துல்லியம்! வேலை நடக்க வேண்டும் என்றும் இப்படித்தான் நடக்க வேண்டும் என்றும் தெளிவாக நீங்கள் உங்கள் மனதுக்குக் கட்டளையிட்டீர்கள். வேலையும் வெகுசிறப்பாக நடந்தேறியது.

மனக்குவிப்பு பயிற்சியை விடாமல் தொடர்ந்து செய்துவந்தால் உங்களின் மனதை நீங்கள் அடக்கி ஆளலாம். இதில் எந்தவிதமான ரகசியமும் இல்லை. விடாமுயற்சியின் பலன்தான் இது. எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் எந்த சூழ்நிலையிலும் உங்களின் மனதை நீங்கள் அடக்கிவிடலாம். இந்தப் பயிற்சி மிகவும் பயனுள்ளது என்பதைச் சொல்லவும் தேவையில்லை.

காலையில் ரயிலில் ஏறிடும்போது உங்கள் கையில் தண்டால் எடுக்க எடைக்கற்களோ அறிவைப் பெருக்கிட தலையணை தடிமனுள்ள தகவல் களஞ்சியங்களோ எடுத்துப் போவதாகக் கற்பனைசெய்து பாருங்கள். இதெல்லாம் நடைமுறையில் சாத்தியமில்லை என்பது ஒருபுறம். கேலிக்குள்ளாவீர்கள் அல்லது ஒரு காட்சிப் பொருளாவீர்கள் என்பது இன்னொரு புறம்.

அதுவே நீங்கள் தனியே வீதியில் நடந்து ரயில் பெட்டியில் ஓரத்தில் உட்கார்ந்து வாழ்க்கைக்கு மிகத் தேவையான 'மனக்குவிப்புப் பயிற்சி'யில் ஈடுபட்டால் யாருக்குத் தெரியும். இதில் எந்த நடைமுறை சிரமமும் இருக்காது. யாரும் உங்களைப் பார்த்துச் சிரிக்க முடியுமா?

நீங்கள் எதில் உங்களின் மனதைக் குவிக்கிறீர்கள் என்பதிலெல்லாம் எனக்கு அக்கறையே இல்லை. இது ஓர் ஒழுக்கம். மூளைக்குக் கொடுக்கும் ஓர் ஒழுக்கப் பயிற்சி. ஆனாலும், ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் அடிக்க விருப்பமா? அப்படியானால், ஏதேனும் பயனுள்ள ஒன்றில் நீங்கள் உங்கள் மனதைக் குவிக்கலாம்.

நீங்கள் எதிர்காலத்தில் செய்ய வேண்டிய நடவடிக்கைகள், எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இப்படி எதிலாவது நீங்கள் உங்கள் மனத்தைக் குவிப்பீர்களாயின் பலன் இரட்டிப்பாகும்.

ஒரு மாட்டு வண்டியை ஓட்டிச் செல்லும் போது அந்த மாடு உங்களுடைய முழுமையான கட்டுப்பாட்டிற்குள் இருந்தால் மட்டுமே உங்களால் உரிய இடத்தைச் சென்றடைய முடியும்.

அதே போலே உங்கள் மனம் உங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருந்தால் மட்டுமே நீங்கள் வாழ்க்கையில் அடைய வேண்டிய இடத்தை அடைவீர்கள் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்திருங்கள்.

- ஜெயந்தி சங்கர்

# இரட்டிப்பு வலுவுடன் இருப்போமா?

எழுபரிதி
(ஒரு பேப்பருக்காக)

தொடர்ச்சியான முறையில் தமிழர் பிரதேசங்கள் வல்வளைப்புக்கு உள்ளாகி வருவதனால், தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற துன்ப துயரங்கள் சொல்லும் தரமற்றவை. ஒரு மோசமான ஆக்கிரமிப்பு இராணுவமாக சிறிலங்கா அரச படைகள் நடந்து கொள்கின்றன.

கிளிநொச்சி நகரம், வடமராட்சி கிழக்கு பிரதேசம், முல்லைத்தீவு நகரம் போன்றவை மக்களற்ற சூனியப் பிரதேசங்களாகவே கைப்பற்றப் பட்டாலும், அங்கிருந்துவெளியேறிய மக்கள் இன்று பேரவலத்தை சுமந்தபடியிருக்கிறார்கள். எந்த விதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல், சதா மரணபயத்துடன் வாழும் அந்த மக்களை வைத்து, சிறிலங்கா அரசு அரசியல் நடாத்தி வருகிறது.

வன்னி மக்களுக்கு சென்றடைய வேண்டிய உணவு, மருந்துப் பொருட்கள் என மனிதாபிமான உதவிகளைத் தடுத்தும், அவர்களின் தற்காலிக வதிவிடங்களை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியும், மிலேச்சத்தனமாக நடந்து கொண்டு வருகிறது. காருண்ணியத்தை போதித்த புத்தபகவானை பின்பற்றுவதற்காக கூறிக் கொள்ளும் சிங்கள பௌத்தர்கள் இவ்விடயத்தில் நாசிகள் போல நடந்து கொள்கிறார்கள்.

அனைத்துலக மட்டத்தில் பணியாற்றுகிற தொண்டு நிறுவனங்களோ, மனிதவுரிமை அமைப்புகளோ இவ்விடயத்தில் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. அவை வெறுமனே அறிக்கைகளுடன் அடங்கிப் போய் விடுகின்றன. தகவல் தொழில் நுட்பம் பாரியளவில் வளர்ச்சியடைந்துள்ள யுகத்தில், அங்கு மக்கள் படும் அவலம் பற்றி, வெளியிலிருப்பவர்களுக்கு தெரிய வாய்ப்பில்லை என்று யாரும் கூறி விடமுடியாது.

இங்கு சர்வதேச சமூகம் பாராமுகமாக இருக்கின்றது என்பதல்ல உண்மை, இந்த மானிட அவலம் சகித்துக் கொள்ளப்படுகிறது என்பது தான் உண்மை.

**சிவ்சங்கர் மேனன் போன்றோரும் குறிப்பிடுவது போல், சரத் பொன்சேகாவினதோ, சிறிலங்காப் படைகளினதோ வீரப்பிரதாபம் என்று எதுவும் கிடையாது.**

விடுதலைப்புலிகள் என்கிற தமிழ்மக்களின் போராட்ட சக்தி அழிக்கப்பட வேண்டும் என்பதற்காக, சிறிலங்கா அரசு புரியும் மனிதவுரிமை மீறல்கள் மட்டுமல்ல, ஒரு இனவழிப்பு யுத்தத்தையே அது கண்டு கொள்ள விரும்பவில்லை. மாறாக அதற்கு தம்மாலான உதவிகளை செய்து வருகின்றது.

உலக வல்லரசுகள் தொடங்கி, உலக அமைதிக்கே சவாலாக இருக்கிற முரட்டு அரசுகளாக இருக்கிற ஈரான், இஸ்ரேல் போன்றவை வரை சிறிலங்காவின் போர் முயற்சிகளை ஆதரித்து நிற்கின்றன. உலகமே எங்களை கவனிக்க மறுக்கிறது, ஆதலால் எங்களது போராட்டம் நியாயமற்றதா? என்கிற கேள்வி எம்மிடம் எழக்கூடும்.

இந்த வினாவிற்கு விடை காணுவதற்கு முன்னர், ஒரு கேள்வி ஆப்கானிஸ்தான் மீதும், ஈராக் மீதும் அமெரிக்காவும் நேசநாடுகளும் நடாத்திய தாக்குதல்கள் நியாயமானதா? இப்போது அமெரிக்காவுக்கும், பிரித்தானியாவுக்கும் மோசமான உத்தி எனக் தெரிகின்ற, 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற அடிப்படையில் இந்நாடுகள் மீது தாக்குதல்கள் நடாத்தப்பட்டு, வலுவில், அங்கு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. சில முஸ்லிம் நாடுகளைத்தவிர மற்றெல்லா நாடுகளும் விரும்பியோ விரும்பாமலோ இந்த நடவடிக்கையை ஏற்றுக் கொண்டன. நாகரீக சமூகம், கல்வியாளர்கள், புத்திசீவிகள் என்போர் சிறு விமர்சனத்துடன் ஏற்றுக் கொண்டார்கள். இப்போர்களுக்கு எதிராக லட்சக்கணக்கில் மக்கள் கூடி உலக நாடுகளின் தலைநகரங்களில் எல்லாம் ஆர்ப்பாட்டம் நடாத்தினார்கள். அவை ஊடகங்களுக்கு செய்தியானதே, தவிர சம்பந்தப்பட்ட அரச தலைவர்கள் இவற்றைக் கண்டு கொள்ளவில்லை.

எங்களில் பெரும்பாலானவர்களுக்கு கூட சதாம் ஹுசைனும், தலிபானும் தவறு செய்தவர்களாகத் தோன்றியிருக்கும், அல்லது அதுபற்றி சட்டை செய்திருக்க மாட்டோம். அதே நிலவரம் தான் இப்போதுமிருக்கிறது.

விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்ற பிரச்சாரத்தை ஆராய்ந்து பார்க்காமல் பலர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சாரம் தனித்து சிறிலங்கா அரசினால் மட்டும் நடாத்தப்படும் ஒன்றல்ல, இந்தியா, மேற்குலக நாடுகள் போன்றவற்றாலும் முன்னெடுத்து செல்லப்படுகின்றது என்பது இங்கு கவனிக்கத்தக்கது. அதனால், ஈழத்தில் பெரும் மனித அவலம் தொடர்கின்ற இன்றய நிலையிலும், சிறிலங்கா அரசை பலப்படுத்துகின்ற செய்திகளே பல்வேறு தரப்பினரிடமிருந்தும் வெளியிடப்படுகின்றன.

இங்கு ஒரு விடயத்தில் நாங்கள் உடன்பட வேண்டும், அதாவது சிறிலங்கா அரசாங்கம் போரை நன்கு திட்டமிட்ட முறையில் நடாத்தி வருகின்றது. தேதி குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமளவுக்கு பலம் கொண்டிருக்கிறது. அதற்கேற்ப பிரச்சாரங்களையும் மேற்கொண்டு வருகிறது. இது தனித்து சிறிலங்கா அரசாங்கத்தின் கைங்கரியம் போன்று தோற்றம் காட்டினாலும், பலநாடுகளின் வலுவான ஆதரவுடனேயே சிறிலங்கா போரை முன்னெடுத்து வருகிறது என்பது தெளிவாகி விட்டது. இதில் சிறிலங்கா அமைச்சர்களும், சிவ்சங்கர் மேனன் போன்றோரும் குறிப்பிடுவது போல், சரத் பொன்சேகாவினதோ, சிறிலங்காப் படைகளினதோ வீரப்பிரதாபம் என்று எதுவும் கிடையாது.

**சர்வதேச சமூகம் பாராமுகமாக இருக்கின்றது என்பதல்ல உண்மை, இந்த மானிட அவலம் சகித்துக் கொள்ளப்படுகிறது என்பது தான் உண்மை.**

இராணுவ வழியிலான தீர்வில் தங்களுக்கு நம்பிக்கையில்லை, பேச்சுவார்த்தை மூலமான தீர்வினையே தாம் விரும்புவதாக தெரிவித்து வந்த, அத்தனை தனிநபர்களும், குழுக்களும், நாடுகளும் இப்போது சிறிலங்காவின் போர் வெற்றிகளையிட்டு ஆறுதலடைந்திருக்கின்றன.

இதுவரை எல்லாமே, அவர்களது நிகழச்சித் திட்டத்தின் அடிப்படையில் நடந்தேறி வருவதனால் அவர்கள் மகிழ்ச்சி கொள்வதில் அர்த்தமிருக்கிறது. அந்த நிகழ்சி நிரலை தொடர்ந்து நிறைவேற்ற விடாமல் தடுப்பதிலேயே ஈழத் தமிழர்களின் இருப்பு தங்கியுள்ளது.

தமிழ் மக்கள், அவர்கள் உலகின் எப்பகுதியில் வாழ்ந்தாலும், தற்போதைய நிலவரத்தால் அவர்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையிலான போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையிலிருந்த பெரும்பான்மையான ஈழத் தமிழர்கள் உடைந்து போயிருக்கிறார்கள்.

இத்தனை அர்ப்பணிப்புகளும், இழப்புகளும் அர்த்தமற்றதாகப் போய் விடுமா என்ற அச்சம் பெரும்பான்மையான ஈழத்தமிழர்களை விரக்தியின் விளிம்பில் கொண்டு போய் விட்டிருக்கிறது.

அவர்களது உறுதிப்பாட்டை உடைத்து விடுவதில் ஊடகங்களும் போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகின்றன. செய்திகளும், வதந்திகளும் அவர்களை குழப்புவதில் கவனம் செலுத்துகின்றன.

ஈழத் தமிழர் வரலாற்றில், மிகவும் இக்கட்டான இன்றைய நிலையில், அதனை வாய்ப்பாகக் கருதி சிலர் திட்டமிட்டு இயங்கி வருகிறார்கள். கனடாவிலிருந்து வெளிவரும் தமிழ் சஞ்சிகை ஒன்று தேசியத்தலைவர் அவர்களது படத்தை அட்டையில் பிரசுரித்து, 'முடியுமானால் பிடித்துப் பார்' என்று தலைப்பு போட்டு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தினையும் அதன் தலைமையையும் கொச்சைப்படுத்தியுள்ளது.

இத்தனைக்கும் இந்தா புலி வருகுது, இதுதான் போர்வியூகம் என்று புருடா விட்டு விற்பனையில் பரபரப்பை ஏற்படுத்தி வந்த பத்திரிகை இது.

இப்போதைய நிலவரம் மிகுந்த நெருக்கடியாக இருக்கிற போதும், ஒரு விடயத்தில் நாங்கள் ஆறுதல் கொள்ள வேண்டியிருக்கிறது. ஈழத்தமிழர்களின் நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? மானிட நேயம் கொண்டவர்கள் யார்? வேடதாரிகள் யார்? என்பன எல்லாம் தெளிவாகத் தெரிகிறது.

**தமிழ் மக்களை நிரந்தரமாக இரண்டாந்தரப் பிரசைகளாக ஆக்குவதற்கான முனைப்பினை சிறிலங்கா அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். அவ்விதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளா விட்டால், பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவை அது இழந்து விடும்.**

எங்களை காக்க வெளியிலிருந்து எந்த ஆபத்பாந்தவனும் வரப்போவதில்லை என்பதும் தெரிகிறது. விடுதலை என்பது இறைஞ்சிக் கேட்கின்ற ஒன்றல்ல, போராடிப் பெற்றுக் கொள்கின்ற ஒன்று என்பதும் தெரிகிறது. தமிழீழ தேசம் வல்வளைப்புக்கு உள்ளாகியிருந்தாலும், தமிழ்த் தேசிய இனமும், சிங்களத் தேசிய இனமும் முன்னெப்பொழுதும் இல்லாதளவுக்கு ஆழமாக பிரிந்திருக்கிறது.

இதனிடையே, போர் முடிவுக்கு வந்து விட்டது என்றும் போருக்கு பின்னான நடவடிக்கைகள் பற்றியும் சிறிலங்கா அரசியல் தலைவர்களும், அவர்களது எடுபிடிகளும் பேசவும், எழுதவும் தொடங்கி விட்டார்கள். தமிழ் மக்களுக்கு 13ம் திருத்தச் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில், அரசியல் அதிகாரம் வழங்கப்படும் என்றும் சிறிலங்கா அரச தலைவர்கள் கூறி வருகிறார்கள்.

இச்சட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட மாகாண சபைகள் முறையான அதிகாரப் பரவலாக்கத்தை கொண்டிருக்கவில்லை என சிங்களப் பகுதிகளிலுள்ள மாகாண சபைகளின் தலைவர்களே ஒப்புக் கொண்டுள்ளபோதும், இந்த முறையிலான அதிகாரப் பரவலாக்கமே மேற்குலகையும், இந்தியாவையும் திருப்திப்படுத்த போதுமானதாக இருக்கும்.

தமிழ் மக்களை நிரந்தரமாக இரண்டாந்தரப் பிரசைகளாக ஆக்குவதற்கான முனைப்பினையே சிறிலங்கா அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். அவ்விதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால், பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவை அது இழந்து விடும்.

சிங்கள பௌத்தர்களை திருப்திப்படுத்துவதே சிறிலங்கா அரசுகளின் நோக்கமாக இருக்கின்ற போது, அந்த ஒற்றை அம்சத்தை வைத்தே, மகிந்த அரசும் அதன் கூட்டணிக் கட்சிகளும் ஆட்சி நடாத்துகின்றன. அவசர அவசரமாக மேற்கொள்ளப்படும் மதமாற்றத்தினை தடைசெய்யும் சட்டத்தினை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.


நிலப்பரப்புகள் இழக்கப்பட்டுள்ள போதும், தமிழ் மக்களின் போராட்ட சக்தி, பெருமளவில் தக்க வைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பேணுவதிலும், எமது அரசியல் அபிலாசைகள் விடயத்தில், சமரசம் செய்யாத மனோபலமும் தான் எதிர்வரும் நாட்களை தீர்மானிப்பதாக அமையும். அதுவரை கொக்கரிப்புகளை பொறுத்துக் கொண்டு, இழப்புகளை தாங்கிக்கொண்டு, தமிழ் மக்கள், குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், இரட்டிப்பு வலுவுடன் செயற்பட வேண்டும்.

*வீழ்ந்தே*
*அழிந்திட நாம்*
*விட்டில்கள்*
*இல்லையடா!*

*வீறாய்*
*பணி செய்தே*
*விண்ணதிர*
*எழுவோமடா!*

ஒரு பேப்பர்
ORU PAPER

# ஏ.ஜே பற்றிய குழப்பம்



கோபி
(ஒரு பேப்பர்)

சில நாட்களுக்கு முன்னர் எனக்கு மின்னஞ்சலில் ஒரு நூல் வெளியீட்டு விழாவிற்கான அழைப்பு வந்தது. "A.J. Rooted Cosmopolitan" என்பது அங்கு வெளிவிடப்படவிருந்த புத்தகத்தின் தலைப்பு.

ஏ.ஜே. என்கிற அலோசியஸ் ஜெயராஜ் கனகரத்ன பற்றியதான நூல் இது. அவரைப் பற்றி மற்றவர்கள் எழுதியவையும், அவரது ஆக்கங்களும் அத்தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வெகுசனப்பரப்பில் அறியப்பட்ட மனிதராக ஏஜே இல்லாதபோதும், அவர் மொழிபெயர்த்த ஆக்கங்கள் சிலவற்றை, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'அலை', 'மல்லிகை' போன்ற சஞ்சிகைகளில் வாசித்திருக்கிறேன். இது இருபது, இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அக்காலத்தில் எனக்கு மொழி பெயர்ப்பு ஆக்கங்கள் மிகவும் அந்நியமாக இருந்தமையால், விரும்பிப் படித்தேன் என்றும் சொல்ல முடியாது.

பிற்காலத்தில், ஏஜே பற்றி, ஒரு பேப்பரின் ஆசிரிய பீடத்தின் ஆலோசகராக இருந்த சிவநாயகம் ஐயா, இரவி அருணாசலம், சேரன், போன்றோர் மூலம் அறியக் கிடைத்தது. அதனால் அவர் பற்றி மேலும் அறிவதில் எனக்கு நாட்டமேற்பட்டது.

நூல் வெளியீட்டு விழா ஜனவரி 24 சனிக்கிழமை மாலையில், கிழக்கு லண்டனில் உள்ள ஈஸ்றகாம் ரிறினிற்றி சென்ரர் மண்டபத்தில் நடைபெற்றது. விழாவுக்கு மாதவி சிவலீலன் தலைமை வகித்தார். மு. நித்தியானந்தன் வெளியீட்டுரையை நடாத்தினார். நிர்மலா, நாகர்ஜுனன், கரிகர சர்மா ஆகியோர் உரையாற்றினர். நான் சற்று தாமதமாகவே சென்றமையால், மாதவி மற்றும் கரிகரசர்மா ஆகியோர் உரையாற்றி முடித்து விட்டனர்.

நிர்மலாவும், நித்தியானந்தனும் ஏஜே உடனான தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அதுபோலவே நாகர்ஜுனனும், பத்திரிகையாளர் ஏ.எஸ். பன்னீர்செல்வத்தினூடாக, தான் ஏஜே உடன் மேற்கொண்டிருந்த தொடர்புகள் பற்றியும், ஏஜே இன் மொழிபெயர்ப்புகள், அவரது ஆக்கங்கள் பற்றியும் உரையாற்றினார். இந்த மூவரும் ஒன்றை நிறுவ முனைந்தது தெரிந்தது. ஏ.ஜே. தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கவில்லை என்பது இவர்களது அபிப்பிராயமாகவிருந்தது.

ஏ.ஜே, அல்பிரட் துரையப்பா கொலை செய்யப்பட்டமையை எதிர்த்ததாக நிர்மலா கூறினார். மானிட நேயமுள்ளவர் என்ற வகையில் அவர் அதனை ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். போகிற போக்கில் நிர்மலா தன்னைப் போன்றவர்கள், அக்கொலையை சரியென அப்போது ஏற்றுக் கொண்டதாகச் சொல்லாமல் சொல்லிப் போனார்.

தற்போதுள்ள ஈழத்து நிலையை காரணங் காட்டி தமிழ்த்தேசியம் விளிம்பு நிலையில் இருப்பதாகவும். அது மார்க்சிசத்தை போல் தோற்று விட்டதாகவும் நாகார்ஜுன் குறிப்பிட்டார். அந்த வாதம் சரியானால், அதே நில வரங்களை கருத்தில் கொண்டு, (சிங்கள) இன வாதம் வென்றுவிட்டதாகக் குறிப்பிடலாமா? கருத்துச் சுதந்திரம் கழுவேறிவிட்டது என்றும் குறிப்பிடலாமா என அவரை கேட்க வேண்டியிருந்தது.

நித்தியானந்தன் தனது உரையில், யாழ்ப்பாணத்து மக்களுக்கு வாசிக்கும் பழக்கம் இல்லை அதனால் அவர்கள் புத்தகங்களை வாங்குவதில்லை என்ற முடிவுக்கு வந்தார். விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு கருத்து தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டபோது, குலசபாநாதன் இதனை ஆதாரங்களுடன் மறுதலித்தார்.

ஏ.ஜே. அதிகம் எழுதாமையால், அவர் எப்படியான கருத்துக்களைக் கொண்டிருந்தார் என்பதனை அவருடைய நண்பர்களிடமிருந்தே (நண்பர்களிலிருந்து அல்ல) அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அவர்களில் குரலாழுமை கொண்டவர்கள், தங்களுடைய சொந்தக் கருத்துக்களை ஏஜே இன் கருத்துக்களாக சொல்ல விழைகிறார்களோ என்ற ஐயம் ஏற்படுகிறது.

ஏஜே விடுதலைப்புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் முதற்கொண்டு பலதமிழ்த் தேசியவாதிகளுடன் நெருங்கிப்பழகியவர். இறுதிவரை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர். தமிழீழத் தேசியப் போராட்டம் வெற்றிபெற வேண்டும் என விரும்பியவர். இவற்றினை வைத்து பார்கிறபோது, ஏஜே இன் உண்மைத் தோற்றம் இருட்டடிப்பு செய்யப்படுகிறதோ என எண்ணத் தோன்றுகிறது.

இந்த விழாவை அரும்பாடுபட்டு சிறப்பாக நடாத்தியவர் பத்நாப ஐயர். அதற்காக அவரை பாராட்ட வேண்டும்.

ஐயரிடம் ஒரு சிறு வேண்டுகோள், ஏஜே பற்றிய தகவல்களை அவருடன் அண்மைக் காலத்தில பழகியவர்களிடமிருந்தும் பெற்றுப் பிரசுரியுங்கள்.

நானறிந்தவரை விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் பாலகுமாரன் பல சந்தர்ப்பங்களில், பொது மேடைகளில், ஏஜே பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இன்னும் பலரும் இருக்கலாம்.

## ஏன் பாவம் கடவுளுக்குப் பிடித்திருக்கிறது

நெல் மணிகள் விதைத்து விளைந்த
வன்னி விளைநிலங்கள் தோறும்
துப்பாக்கி ரவைகளும் செல்களும்
விதைக்கப்படுகின்ற காட்சிகள்
அரங்கேறுகின்றன...

அப்பாவிச் சனங்களின் பிணங்களின் மீது
எழுதப்படுகின்ற வெற்றிச் செய்திகள்
வெடி கொளுத்தி மகிழ்தல்களுக்கு
அப்பாலும் நீண்டு செல்கிறது
கொடிய போர்...

மீண்டும் பெருநகரை
விழுங்கி ஏப்பம் விட்டபடி நகர்கின்றன
படைகள்

நவீன உலகில் குண்டுகள் விதைக்கும்
பரிசோதனைக் கூடமாகத்
தெரிவுசெய்யப்பட்ட
தமிழர் இருப்பிடங்கள் மீது
வேட்டை விமானங்கள்
மீண்டும் புதியவகைக் குண்டுகளை வீசி
பரிகசிக்கின்றபோது மறுபடியும்
உருக்குலைந்து சின்னாபின்னமாகின்றனர்
மனிதர்கள்

நாளாந்தம் பலியுறுவோர் காயமடைவோர்
பட்டியலில்
உறவுகளின் பெயர்களைத்
தேடி அலையும் அவலம் நிறைந்த
பயமனத்துடன் நீள்கிறது
புலம்பெயர்ந்தோர் இருப்பு

குருதி தெறித்து உடல்கள் சிதைந்து
நாளும் நீளும்
மரண ஓலங்களின் நடுவில்
இன்னும் வாழ்தல் வேண்டி
நடக்கிறது சீவியம்.

- தியா

"Weakness Gone.. Energy On.."
இது உறுதி - இன்றைய இரவ இனிமையானது - இனிவரும் இரவுகளும்
மூலிகையில் தயாரிக்கப்பட்ட மாத்திரை ஆண்மை விருத்திக்கான தைலம் இது.
"Recharge Your Life" ஆண்களின் நண்பன் Performance Enhancer for Men
Mascula Massage Oil for Men
மஸ்குலா மசாஜ் ஒயில்
எண்ணெய் Massage மூலம் ரத்த ஓட்டத்தை அதிகரித்து புத்துயிரூட்டி மீண்டும் சக்தி கொடுத்து ஆண்மையைப் பெருக்கி இளமையாக்கும் அரிய மருந்து.
£ 20
To Tone Up The Under-developed Penile Muscles & Nerves of Male Sex Organ For Improved Performance
Herbal 1-Top Capsules
கேர்பல் வன் டொப் கப்சியூல்ஸ்
உலகத்தின் அனைத்து ஆண்களாலும் விரும்பப்பட்ட ஆண்மை அதிகரிக்கும் ஒரே நிவாரணி.
£ 30
• ஆண்மைக் குறைவு • உடலுறவு பலவீனம் • அனைத்தும் ஒரே மருந்தில்
Herbal 1-Top Capsules for Male Problems & Impotence Management
HEART CARE
£ 10 கார்ட் கெயார் கப்சியூல்ஸ்
அனைத்து இதய கவாச நோய்களை கட்டுப்படுத்த
• இதயத்தை பலப்படுத்த
• இதய அழுத்தத்தை சீராக்க
• இரத்த ஓட்டத்தை சீராக்க உடன் அனுகுங்கள்
AVAILABLE FROM YOUR LOCAL CHEMIST NATIONWIDE
Bristol 80 Almavale Road, Clifton, Tel: 0117973144
Birmingham
1. Spark Hill, 491 Startford Road, Tel: 0121 4780174
2. 115 Soho Road, Handsworth, Tel: 0121 5512444
Bradford 127, Great Horton Road, Tel: 0845 257 0181
Coventry
1. 5 Station St. West, Tel: 0871 [illegible]
2. 304, Walsgrave Road, Tel: 02476 454523
Derby 299 Normanton Road, Tel: 01332 366644
Gravesend 2 Living Stone Rd, Tel: 01474 365140
Glasgow 405 Great Western Rd, Tel: 0141 3395979
Hayes 788 Uxbridge Road, Tel: 020 8848 4612
Hounslow 322 Great West Road, Tel: 020 8577 7436
ILFORD:
1. Eden Pharmacy, 79-85 Goodmayes Rd. Tel: 020 85973477
2. Munro Pharmacy, 305 Green Street, Tel: 020 8471 2575
3. Weston Pharmacy 3 St Stephen Parade (Near Post office), Green Street, Tel: 020 8470 5858
Kingsbury 511 Kingsbury Road, Tel: 020 8204 8731
London 82A Baker Street, Marylebone, Tel: 020 7935 3667
Leyton 694 High Road, Tel: 020 8558 5415
Leeds 255-257 Roundhay Road, Tel: 0113 2490557
Leicester 68 Harding Road, Tel: 0116 253 7985
Luton 453 Dunstable Road, Tel: 01582 57 2521
NORBURY - 301 Northborough Road Tel: 020 8764 1629
NorthHampton 4 Kingsley Park Terrace, Tel: 0160 471 3207
Reading 104a Oxford Road, Tel: 0118 9572687
Slough 400 Farnham Road, Tel: 01753 517263
SouthHall
1. Gill Chemist, 31-33 King Street, Tel: 020 8571 1555
2. Dakal Cash & Carry, 133-135, Southall Broadway, Tel: 020 8574 1647
Tooting 246 Upper Tooting Rd, Tel: 020 8672 5417
Wembley
1. 282 Ealing Road, Tel: 020 8902 5047
2. 182 Ealing Road, Tel: 020 8902 0173
3. 210 Ealing Road, Tel: 020 8902 4698
WolverHampton 311 Dudley Road, Tel: 01902 842 000
டயானில் பென்டா கப்சியூல்ஸ்
Dianil Penta Capsules
இனிப்பு சிற்றுண்டிகளை ஏன் தவிர்க்க வேண்டும்?
சர்க்கரை வியாதிக்கோர் அரிய இயற்கை மூலிகை மருந்து
கணைய சுரப்பிகளை தூண்டி இன்சுலின் ஓமோனை சுரக்க வைப்பதன் மூலம் சர்க்கரை நோயினால் வரும் அனைத்துப் பாதிப்புகளிலிருந்தும் விடுபட ஒரு புதிய நிவாரணி.
£ 10
LIVER CARE
£ 10
லிவோ் கெயர் கப்சியூல்ஸ்
• ஈரல் வீக்கம்
• hepatitis (A & B) virus இன் தாக்கத்தால் ஈரல் பெரிதாகல்
• அதிக குடிப்பழக்கம்
• மலக் கடுப்பு
• ஜீரண சக்தியில் குழப்பம்
• ஈரல் தொழிற்பாட்டில் பிரச்சனை இருந்தாலும் சிறந்த நிவாரணி
BRAIN CARE
£ 10 செரபிக்ஸ் கப்சியூல்ஸ் (பிரெய்ன் கெயர்)
• ஞாபக சக்தியைக் கூட்டவும்
• மன அழுத்தத்தைக் குறைக்கவும்
• மனப் பயத்தைத் (anxiety) தவிர்க்கவும்
• இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தவும்
கிமாலயன் வொண்டர் கார்லிக்
Himalayan Wonder Garlic
உங்கள் உடம்பில் கொழுப்பைக் குறைத்து கலங்களுக்கு புத்துயிர் அளிக்கும். இமய மலையின் இயற்கை சூழ்நிலையில் விளைந்த மாசடையாத பூண்டு.
இதயநோய், கொழுப்பு நோய் நிவாரணி.
£ 10
Supports anti-clotting mechanism in arteria and veins.
Pentax Hair Tonic
பென்ரக்ஸ் கெயர் டொனிக்
வழுக்கைத் தலையர்களுக்கு ஒரு வழி.
• தலை வழுக்கை
• தலை முடி உதிர்தல்
• தலைமுடி சன்னமாதல்
• அலோபேசியா (alopecia) நோய் அனைத்தும் குணமாக்கலாம்
£ 10
PURE SHILAJEET
WELL-BEING
£ 10
Contact: Mr. J.B. Singh 0781 541 9103 * Dr. R.N. Sharma (B.A.M.S. M.D. (Ayurvedic)
Pentavox (UK) Ltd, 10, Park Avenue, South Hall, UB1 3AQ. Tel 020 8843 0330, 07815 419 103
e-mail: info@pentavoxuk.com * Online Shopping: www.pentavoxuk.com
Postage & Packaging Free over order worth £30
"Distributors/Stockist required all over UK & Europe"

# தமிழக எழுச்சி பற்றிய சில உண்மைகள்

**அநபாயன்**
*(ஒரு பேப்பருக்காக)*

இந்த வாரத்திற்கான பத்தியை எழுதுவதற்கு முன்னர் கணனியில் சிறிது நேரம் செய்திகளை வாசித்தபடி யோசித்துக் கொண்டு இருந்தேன். மேலும் பல ஈழத்தமிழ் உறவுகள் வன்னியில் உயிரிழக்கும் செய்திகள் தான் பெரும்பாலான செய்திகளாக உள்ளன. நேற்று முழுவதும் Westminister பாராளுமன்றச் சதுக்கத்தில் மழையிலும், குளிரிலும் பதாகையைப் பிடித்த வண்ணம் நின்றதைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியாத கையறு நிலை.

ஒபாமா, காசா பொருளாதாரச் சரிவு என்று ஓடிக் கொண்டிருக்கும் பிரித்தானிய அரசும், அரசியல்வாதிகளும் ஒன்றும் கிழிக்க மாட்டார்கள் என்று உறுதியாகத் தெரிந்தும் எனது கடமைக்கு நான் அங்கே நின்றேன்.

நான் இங்கு எழுத வருவது புலம்பெயர் தமிழர்கள் இங்கே முன்னெடுக்கும் போராட்டங்கள் பற்றியோ அல்லது அவர்கள் எவ்வாறு எல்லாம் போராட்டங்கள் நடாத்த வேண்டும் என்று பாடம் எடுப்பதோ அல்ல, அதை நிறையப் பேர் எழுதித் தள்ளிக் கொண்டு இருக்கின்றார்கள். எனவே எனது நேரத்தையும் உங்கள் நேரத்தையும் வீணடிக்கும் உத்தேசம் எனக்கு இல்லை.

ஈழத்தமிழரின் சுயாட்சிக்கான அல்லது சுய நிர்ணய உரிமையை நிலை நிறுத்துவதற்கான போராட்டத்தில் இந்தியா தான் இறுதி முடிவெடுக்கும் காரணி (Factor) என்று இன்னும் தெரிந்துவைத்திருக்காதவர்கள் யாரும் இருக்க முடியாது. அந்த வகையில் இந்திய அரசின் நிலைப்பாட்டில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக தமிழக மக்களும் அவர்கள் தெரிவு செய்யும் தமிழக அரசியல்வாதிகளும் தான் என்பது அனைவருக்கும் தெரியும்.

நான் மேற்கொண்டு எழுதப் போகும் விடயத்தை சுருக்கமாகச் சொல்வதானால் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் சுயநல அரசியலுக்கு அப்பால், அவர்களைத் தெரிவு செய்கின்ற, நாம் எல்லோரும் தொப்புள்கொடி உறவு என்று கூறுகின்ற தமிழக மக்களின் நுகர்வுக் கலாச்சார சுயநலத்தையும், தமிழீழப் போராட்டம் தொடர்பான அறியாமையையும் பற்றிய ஓர் சுருக்கமான குறிப்பு ஆகும்.

இன்றைய தமிழகமானது இந்தியாவிலேயே மிகவும் முன்னேற்றம் அடைந்த முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

அந்த வகையில் தமிழக மக்கள் அதன் பலன்களை அநுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். பெருகி வரும் மத்தியதர வர்க்கத்தின் வாழ்க்கைத் தரமானது இதனைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

தொண்ணூறுகளிலிருந்து நடைமுறையிலிருக்கும் திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக தமிழக மக்கள் சகலவிதமான பல்தேசியக் கம்பனிகளின் நுகர்வுக் கலாச்சாரத் தாக்கத்திற்கு உட்பட்டு வந்துள்ளனர்.

முன்பெல்லாம் தமிழக வணிக சஞ்சிகைகளுடன் இலவச இணைப்பாக பற்பொடி தூள் பக்கெற் வழங்கப்பட்ட காலம்போய் தற்போது செல்லிடத் தொலைபேசி 'சிம்கார்ட்' வழங்கப்பட்டு வருகின்றது. இந்த 'சிம் கார்ட்' தனக்கு இலவச இணைப்பாக கிடைக்காததையிட்டு வருத்தப்பட்டு ஓர் தமிழக இளைஞன் தனது வலைப்பதிவில் எழுதியிருக்கின்றார். (அந்த இளைஞரின் வலைப்பதிவில் ஈழத்தமிழர் தொடர்பான எந்த விதமான ஓர் பதிவும் காணப்படவில்லை.)

உண்மையில் மேற்கூறிய தமிழக இளைஞன் போன்று இலட்சக்கணக்கான இளைஞர்கள் தமிழகத்தில் உள்ளனர். பாதிப்பேர் ஈழத் தமிழர் போராட்டம் தொடர்பான அறியாமையிலும் மீதிப்பேர் தெரிந்திருந்தும் அக்கறையெடுக்க மனம் இல்லாமலும் இருக்கின்றனர்.

## ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டம் தொடர்பான சரியான அறிவூட்டல் தமிழகத்தில் ஒரு திட்டமிடப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அப்படியென்றால் தற்பொழுது தமிழகத்தில் ஈழத்தமிழர்கள் சார்பாக நடாத்தப்பட்டு வரும் போராட்டங்கள் யாரால் நடாத்தப்பட்டு வருகின்றன? தீவிர தமிழ் தேசியவாதத்தை முன் வைக்கின்ற சிறு தொகையான உறுப்பினர் தொகையைக் கொண்ட குழுக்கள், முற்போக்கான, இடதுசாரிச் சிந்தனைச் செல்வாக்கிற்கு உட்பட்ட மாணவர் அமைப்புக்கள், சுயமாகவே தமிழ்தேசியப்பிரக்ஞை கொண்ட கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஒடுக்கப்பட்ட மக்களும் அவர்களின் உரிமைகளுக்காகப் போராடும் அமைப்புக்களும் ஆகும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தமிழகமே கொந்தளிக்கின்றது என்ற பிரமையைக் கொடுக்கின்ற வகையில் தமிழக வெகுசன ஊடகங்கள் (வணிக சஞ்சிகைகள் முதல் இலத்திரனியல் ஊடகங்கள் வரை) மிகத் தாராளமாக ஈழத்தமிழர் தொடர்பான போராட்டங்கள், நிகழ்வுகள் பற்றிய செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இதே ஊடகங்கள் ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்திலிருந்து மிகச் சமீபகாலம் வரை முற்றிலும் வேறுபட்ட நிலைப்பாட்டையே கொண்டிருந்தன.

உதாரணமாக ஆனந்தவிகடன் சஞ்சிகை 1999 ஆம் ஆண்டு 'குருவி தலையில் பனங்காய்' என்று ஓர் ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தது. அன்றைய தமிழக அரசை ஈழத்தமிழர் தொடர்பாக எந்த முடிவையும் எடுக்க வேண்டாம் என்றும், சிக்கலான இந்த விடயத்தை மத்திய அரசே கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் எழுதியிருந்தது.

தேசியத் தலைவர் பிரபாகரனின் 2002 ஆம் ஆண்டு சர்வதேச பத்திரிகையாளர் மாநாட்டைக் கிண்டலடித்து குமுதம் சஞ்சிகை கேலிச் சித்திர அட்டைப்படம் ஒன்றை வெளியிட்டிருந்தது.

புலம்பெயர் தமிழர்களிடம் சந்தைப்படுத்த வேண்டிய காரணத்தாலும், உண்மையிலேயே சில ஊடக நிறுவனங்கள் தமது தவறை உணர்ந்த காரணத்தாலும் தான் தற்போது தமிழக வெகுசன ஊடகங்கள் ஈழத்தமிழர் தொடர்பாக அதிக அக்கறை எடுக்கின்றன.

### ஈழத்தமிழர்கள் தொடர்பாக அக்கறையற்று இருப்பவர்கள் யார்.

தமிழகத்தில் திராவிட அரசியலின் தேய்வு பற்றியும் தற்போதைய அரசியல் வங்குரோத்து நிலை பற்றியும் நிறையவே முன்னர் எழுதியுள்ளேன்.

அண்மையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் பரபரப்பாக நடந்து முடிந்தது அனைவரும் அறிந்ததே.

தமிழகத் தேர்தல் வரலாற்றில் இதுவரை நடந்திராத ஓர் சாதனை இந்த இடைத்தேர்தலில் நடந்தேறியுள்ளது. அதாவது 90% வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது. இவ்வளவு தொகையான வாக்காளர்கள் வாக்களித்ததன் காரணத்தை ஆராய்ந்தால் மிகவும் அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளிவருகின்றன.

திமுகவும் அதிமுகவும் தமக்கு ஆதரவாக வாக்களிக்கத் தூண்டும் வகையில் பெருமளவு பணத்தை வாக்காளர்களுக்கு வழங்கியுள்ளன. சராசரியாக ஒரு வாக்காளருக்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர செல்போன், கிரைண்டர், மிக்சி என்று பொருட்களும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒரு கட்சி கொடுக்கும்போது மற்றைய கட்சி புகார் செய்தால், புகார் செய்த கட்சிக்கு எதிராக மக்கள் கொதித்தெழுந்த சம்பவங்களும் நடைபெற்று உள்ளன. இதுதான் தமிழ் நாட்டின் ஜனநாயகம்.

திராவிட அரசியலில் எம்.ஜி.ஆரின் எழுச்சி காரணமாக திராவிடம், தமிழ்தேசியம் போன்றவற்றிற்கு நிகழ்ந்த பாரதூரமான பாதிப்பு கொஞ்ச நஞ்சமல்ல. எம்.ஜி. ஆர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்தவர் என்பதற்காக அவர் ஒரு தூர நோக்குள்ள தெளிவான அரசியல் பிரக்ஞை கொண்ட ஒரு அரசியல்வாதி என்று போற்றுவது பாரிய தவறாகும்.

உயர் சாதி இந்துக்களின் பிற்போக்குத் தனங்கள் தமிழக சமூகத்தில் வளர்வதற்கும் ஓர் நிரந்தர வாக்கு வங்கியை கொண்ட அதிமுக வானது தமிழக அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதற்கும் எம்.ஜி.ஆரின் கொள்கைகளே காரணமாகும்.

இறுதியாக 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அதிமுக பெற்ற வாக்குகளின் சதவீதம் 32.52 ஆகும். ஜெயலலிதா என்ற ஒரு சீவராசியைத் தலைவியாகக் கொண்ட ஒரு அரசியல் கட்சிக்கு ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு தமிழக வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். அவர்கள் தொடர்ந்து அடுத்த தேர்தலில் அதிமுகவுக்கு வாக்களிக்கப் போகின்றார்கள். இதுவே கலைஞர் கருணாநிதி தொடை நடுங்குவதற்கு காரணமாகும்.

## தமிழகமே கொந்தளிக்கின்றது என்ற பிரமையைக் கொடுக்கின்ற வகையில் தமிழக வெகுசன ஊடகங்கள் எழுதித் தள்ளுகின்றன.

ஈழத்தமிழருக்கு ஆதரவாக மாணவர்கள் போராட்டம் என்று செய்திகள் வரும்போது நாம் தெளிவாக இருக்க வேண்டியது என்னவென்றால், ஆங்கிலத்தையே நடைமுறை பேச்சுமொழியாகக் கொண்ட உயர்தர, உயர் மத்திய தர தமிழ் குடும்பங்களிலிருந்தும், பிராமணக் குடும்பங்களிலிருந்தும் வருகின்ற மாணவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட உயர்மட்டக் கல்லூரிகளிலிருந்து ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஒருவரும் குரல் எழுப்பவில்லை.

### யார் தவறு?

நிச்சயமாகத் தமிழகத் தலைவர்களும், எழுத்தாளர்களும் புத்திஜீவிகளும் மிக முக்கியமாக தமிழீழத் தமிழர்களும் தற்போதைய தமிழகத்தின் அறியாமைக்கு காரணமாகும்.

ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டம் தொடர்பான அறிவூட்டல் எவையும் ஒரு திட்டமிடப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.


இன்னும் பல தமிழகத் தமிழர்கள் ஈழத் தமிழரை 'சிலோன்காரன்'/ 'சிலோன் பிரச்சினை' என்றுதான் குறிப்பிடுவார்கள்.

நிலைமை இவ்வாறிருக்க 'வைகோ சீற்றம்', 'திருமா சூளுரை', 'நெடுமாறன் சவால்' என்று செய்தி வெளியிட்டுத் திருப்தி கொள்வதில் எந்த விதப் பயனுமில்லை. ஒவ்வொரு தமிழகக் கிராமத்திலும் தமிழீழப் போராட்டம் தொடர்பான அறிவூட்டல் நடைபெற வேண்டும்.

உண்மையிலேயே தமிழகத் தமிழர்கள் கிளர்ந்தெழ வேண்டும் என்று எதிர்பார்ப்போமானால், தமிழகத்திலுள்ள முற்போக்கான சக்திகள், தமிழின உணர்வாளர்கள், தமிழ்த் தேசியம் சார்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்கள் ஓர் பரந்து பட்ட கூட்டணி மூலமாக தொடர்ச்சியான பரப்புரைப்போர் நடாத்துவதன் மூலமே தமிழகத்தை கிளர்ந்தெழச் செய்யலாம்.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.

**SRI MUTTU MARIYAMMAN JYOTHIDA NILAYAM**
Astrology Center



ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஜோதிடம்


ஜோதிடர் :பரத்ராஜ் சாஸ்திரிகள்
Astro-Palmist

RRR Cash & Carry
309-311 London Road, West Croydon, Surrey, CR0 3PA

Opening Hours: 9.00 a.m - 8.00 p.m all 7 days.
SPOKEN LANGUAGES: TAMIL, HINDI, & ENGLISH.
Your Secret matters will be maintain confidently

உலகத்தில் உள்ள சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை, தீமைகள் பற்றிய விபரங்களைக் கூறுவார். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்லுவார். கணவன் மனைவி சண்டை, பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள், பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது, படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது, வேலை, தொழில், உத்தியோகம், விசா பிரச்சனைகள், இப்படி பல்வேறான பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். செய்வினை, பில்லி, சூனியத்தால் பாதிப்பு, பொறாமையில் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் ஓட்டப்படும். கண் திருஷ்டியினால் வாழ்வின் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் எப்போதும் கொழிக்க உதவும் லட்சுமி பூஜை செய்து தருகிறோம்.

An expert pandit at service. Past, Present and Future of your life, will be read over to you from your Numerology, Face reading, Palm reading & Horoscope reading Prediction in Business, Education, Job, love, Marriege, Family problem children, Divorse, Court problems, Visa requirements, Sickness, Promotion, abroad Money, Removal All types of black magic and evil things by performing prayers.



**Contact :- 0794 6599472 / 0794 6599402**

# தயவு செய்து வாருங்கள்!



ஐயன்
*(ஒரு பேப்பருக்காக)*

இதுதான் காலம், இதுதான் நேரம் .இப்பொழுது இயலாது எனில் இனி எப்போழுமே இயலாது போய்விடும். இந்த நாளில், இந்த நேரத்தில், நாம் எல்லோரும் அணி திரள வேண்டும். இது பனிக் காலம் தான். பகலும் குளிர் தான். ஆயினும் அநியாயம் அல்லவா நிகழ்கின்றது. கடும் குளிர் தான், கை கால் எல்லாம் விறை க்கும் தான். ஆயினும் கொடுமையல்லவா நிகழ்கின்றது.

ஈழத்தில் எமது மக்கள் இன்னலுக்குள்ளா கின்றார்கள். சுமார் ஐந்து இலட்சம் மக்கள் நாள் தோறும் சாவுக்கு முகம் கொடுக்கின்றார்கள். தாய் தந்தை, மக்களை இழக்கின்றார்கள். மக்கள் தாய் தந்தையரை இழக்கின்றார்கள். யாவரும் யாவரையும் இழக்கின்றனர். யாவரினதும் வாழ்வுக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஒரு நேர உணவு கூட இல்லை.

உலகில் எந்த மனித உயிர்களுக்கும் இத்தகைய அவலம் நேர்ந்திராது. யாரும் இத்தனை இடர்ப்பாடு அடைந்திருக்கப் போவதில்லை. ஆனால் எம் தமிழ் உறவுகள் இத்தனை இன்னல் படுகையில் நாம் என்ன செய்யப் போகின்றோம். எம் தமிழ் உறவுகளை அழிய விட்டு விட்டு நாம் வாளாதிருக்கப் போகின்றோமா? இது தான் இப்பொழுது எம்முன் உள்ள முக்கியமான கேள்வி.

உலக நாடுகள் யாவும் எம் மக்களைக் கைவிட்டு விட்டன. இவ்வளவு கொடுமை நிகழ்ந்த போதும் ஒரு நாடும் ஏன் என்று கேட்கவில்லை. ஏறெடுத்துப் பார்க்கவும் இல்லை. ஐ.நா சபையோ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமோ ஏனைய தொண்டு நிறுவனங்களோ ஒன்றும் செய்ய முடியாது கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றன.எதற்கும் ஒரு வழியைத் தானும் சிங்கள அரசு விட்டு வைக்கவில்லை. நிர்க்கதியான நிலையில் நிற்கின்றார்கள் நம் மக்கள்.

எங்கள் ஈழ தேசத்து மக்களுக்கு யாரும் இல்லை என்றாலும் நாங்கள் இருக்கின்றோம் தானே? ஈழ தேசத்தை விட்டு நாம் புலம் பெயர்ந்தாலும் வேரும் வேரடி மண்ணும் எங்கள் நிலத்தில் தானே? அங்குள்ளோர் ஐயோ என்று குழற ஆருமில்லையோ என்று கதற நாங்கள் பார்த்துக் கொண்டு சும்மாவா இருக்கப் போகின்றோம். உதவிக்கு ஒரு கரம் நீட்ட வேண்டாமா? நாங்கள் இருக்கிறோம் பார்த்துக் கொள்ளுவோம் பயப்பட வேண்டாம் என்று அபயம் கொடுக்க மாட்டோமா?

உலகெங்கும் எட்டுக் கோடித் தமிழர்கள் இருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் எழுந்து நின்று ஒருமித்த குரலில் ஏன் என்று கேட்டால் எங்கள் உறவுகளைக் காப்பாற்றுங்கள் என்று கத்தினால் உலகம் ஒருகணம் அதிரும். அதன் பின் உலகம் வாய்மூடி மௌனியாக இருக்க முடியாது. எங்கள் பலத்தைப் பார்த்த பின் உலகம் பயப்படும்.

எங்கள் மக்களைக் கொல்ல இந்தியா, சீனா, பாகிஸ்தான், யப்பான், ஈரான், அமெரிக்கா, பிரித்தானியா, இஸ்ரேல் என்று பல நாடுகள் சிங்கள அரசுக்கு ஆயுதம் வழங்க வரிந்து கட்டிக்கொண்டுநிற்சிகன்றன. இந்தியாவுக்கும் சீனா பாகிஸ்தானுக்கும் பிரச்சினைகள். ஈரானுக்கும் அமெரிக்கா பிரித்தானியாவுக்கும் பிரச்சிசனைகள். ஆனாலும் அவைகளுக்குள் எத்தனையோ பிரசச்னைகள் இருந்தாலும் தமிழர்களக் கொல்வதற்காக அவைகள் தமக்குள் கூட்டிணைகின்றன. ஒரு நாடு பீரங்கியை வழங்கினால் அதற்குரிய எறிகணையைமற்றைய நாடு வழங்குகின்றது. கொழும்புத் துறைமுகத்தில் சீனா 160 கவச வாகனங்களை இறக்கிய மறுநாள் இந்தியா 200 பீரங்கிகளை இறக்குகின்றது. அவைகளே அத்தனை ஒற்றுஜமயா க நிற்கையில் நாங்கள் வேறுபட்டு நிற்பதா?

நண்பர்களே நாங்கள் என்ன செய்யப் போகின்றோம். ஒரே மூச்சாக ஒரே குரலாக ஒரே உணர்வாக ஒரே ஓர்மமாக நாங்கள் ஓங்கிக் குரல் கொடுக்க வேண்டிய தருணம் இது. அந்த வேலை இருக்கு இந்த வேலை இருக்கு என்று பின்னடிக்க வேண்டாம். ஆயிரம் வேலைக்ள இருக்கட்டும். அவற்றை புறம் தள்ளுவோம். யாவரும் பங்கேற்போம். யாவரும் அணி திரள்வோம். ஒரே கொடியின் கீழ் நாங்கள் கொட்டு முழக்குவோம். நண்பர்களே எனக்கென்ன என்று இருந்து விடாதீர்கள். நமக்கு வேலைகள் இருக்கு என்று ஒதுங்கி விடாதீர்கள். எமது மக்களுக்காக நாம் ஒன்று திரள்வோம். தமிழ் மக்களுக்காக தமிழ் மக்களாகிய நாம் தமிழ் மக்களாகிய உங்களை தயவு செய்து வாருங்கள் என்று கெஞ்ச வைக்காதீர்கள். இது உங்கள் பணி உங்கள் கடமை. நாம் கை கோர்ப்போம். ஒரே குரலில் உலகை உலுக்குவோம்.

## வெற்றிகள் உனதே!

நல்லதே நடக்கும் நம்பிக்கை ஜெயிக்கும்
தடைக்கற்கள் யாவும் வெற்றியின் தொடக்கம்
கலங்காதே எதற்கும் உறுதியே உயர்த்தும்
தளராத மனமே இலக்கினை அடையும்!

வீண்சொற்கள் எல்லாம் காலிற்கு கீழே
தள்ளிடு தோழா நிமிர்த்து உன் தோளை
முன்னுக்குப்பின்னாய் பேசுதல் கோழை
சொல்சுத்தம் கொண்டு வென்றெடு மாலை!

நன்னெறி கொண்டு வாழ்வினை வென்று
எப்போதும் உள்ளத்தில் பணிவது கொண்டு
பெற்றவர் சொல்லை மதிக்கனும் நன்று
நீயே நாளைய வரலாற்றின் சான்று!

## உன் எண்ணம் உன் வாழ்க்கை!

எண்ணங்கள் வானை நோக்கி!
எழுத்துக்கள் உயர்வை நோக்கி!
கண்ணிமைக்கும் காலம் கூட
எடுத்து "வை" இலக்கை நோக்கி!
நாளை என்று நாளைத் தள்ளி
வைக்காதே உயர்வைத் தள்ளி!

"இன்று" ஒன்றே உண்மை தம்பி
உயர்வாய் நீ உன்னை நம்பி!.
தடுமாற்றம் வந்து உன்னை
தடம் மாறச்செய்யக் கூடும்!
கொள்கையில் உறுதிகொண்டால்
தடையது திரும்பி ஓடும்!
கண்களில் தெளிவு கொண்டு
எண்ணத்தில் வலிமை கொண்டு!
உழைப்பினில் மகிழ்வு கொண்டு!
வென்றிடு வாழ்க்கை நன்று!

**- அஞ்சனா**

ELC Solicitors Understanding your needs...

சட்டத்தரணிகளின் அடிப்படைத் தகைமைகள் என்ன?

- வாடிக்கையாளர்களின் நலனில் முதற் கவனம்.
- பல மொழிகளில் தேர்ச்சி.
- எப்போதும், எவரிடத்தும் பாரபட்சம் பாராத நேர்மை.
- தகுதி, திறமை, மதிப்புமிக்க உயர்தரம்.
- வெற்றி ஒன்றைத் தவிர வேறொன்றும் அறியாதவர்கள்.

இத்தனைத் தகைமைகளும் கொண்ட சட்டத்தரணிகள் இருக்கும் ஒரு நிறுவனம்.

**Don't just take our word for it ...**

"...This is to say a big thank you for your fast and professional way of dealing with my case. I think the service was excellent - I will definitely use you in the future and recommend the company to family & friends."
- Karen Sommers

As a well established firm whose reputation precedes us, superior client care is at the heart of our philosophy.

Our highly skilled, multi-lingual team provide honest and impartial advice, seeking always to act in your best interests.

We are Law Society Lexcel accredited, an honour bestowed on only 4% of law firms nationwide.

அனைத்து விதமான immigration பிரச்சனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

SPECIALISTS IN:

- Residential Conveyancing
- Re-mortgages
- Commercial Conveyancing
- Family Law
- Debt Recovery
- Civil Litigat ion
- Immigration

COMPETITIVE PRICES - EXPERT ADVICE - QUALITY SERVICE

CALL US TODAY!

0800 027 8977

ELC Solicitors
Understanding your needs...

St James House
105-11 3 The Broadway
West Ealing, London W13 9BE

www.elcsolicitors.com

# ஒரு நாட்டுப் பற்றாளர் காலம் ஆனார்



கோபி
*(ஒரு பேப்பருக்காக)*

மயில்வாகனம் ஐயா என அன்பாக அழைக்கப்பட்ட திரு. கந்தையா மயில்வாகனம் ஜனவரி 24ம் திகதி, வன்னி புதுக்குடியிருப்பில் காலமானார் என்ற செய்தியை மிக்க துயருடன் ***ஒரு பேப்பர்*** வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

அவர், நாம் ***ஒரு பேப்பர்*** ஆரம்பித்த காலத்திலிருந்து, அதன் வாசகராகவும், எமக்கு வன்னிச் செய்திகளை வழங்குபவராகவும், ***ஒரு பேப்பர்***ரின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவராகவும் இருந்தார். வன்னியிலிருந்து அவர் எமக்கு மின்னஞ்சலில் அனுப்பிய பல கட்டுரைகளை நாம் பிரசுரித்து வந்தோம்.

2002ம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து லண்டனிலிருந்து, வன்னிக்குச் சென்ற அவர், கிளிநொச்சி, திருநகரில் வசித்து வந்தார். அங்கிருந்து கடந்த வருட இறுதியில் இடம் பெயர்ந்து வேறு இடத்திற்கு செல்லும்வரை எங்களுடன், மின்னஞ்சல் வழியாகவும், Facebook மூலமாகவும் தொடர்புகளை வைத்திருந்தார்.

இடையறாத இடப்பெயர்வுகளுக்கு மத்தியில் அவருடன் தொற்றிக் கொண்ட நோய்க்கு போதிய சிகிச்சை பெற வசதிகள் இல்லாத நிலையில், தான் நேசித்த மண்ணில் அவரது உயிர் பிரிந்திருக்கிறது.

யாழ் கந்தர்மடத்தில், 1932ம் ஆண்டு ஜூலை 8ம் திகதி பிறந்த மயில்வாகனம் யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றார். பின்னர் உயர் கல்வியை பேராதனை விவசாயக் கல்லூரியில் பெற்றார். கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராக 1972ம் ஆண்டு வரை கடமையாற்றினார். 1974ல் நோர்வே நாட்டுக்குச் சென்ற அவர், ஆரம்பத்தில் ஒரு படகு தயாரிக்கும் நிறுவனத்திலும், பின்னர் அங்குள்ள அமெரிக்க எண்ணை நிறுவனமொன்றில் கணக்காளராகவும் பணிபுரிந்தார்.

நோர்வேயில் வாழ்ந்த காலத்தில், 1977ம் ஆண்டு இனக்கலவரத்தினை தொடர்ந்து, நோர்வே தமிழ்ச்சங்கம் என்ற அமைப்பை ஆரம்பித்து அதனூடாக தாயகம் நோக்கிய பணிகளில் அவர் மிகுந்த சிரத்தையுடன் செயற்பட்டார்.

1997ல் லண்டனுக்கு வந்து குடியேறிய அவர் ஈலிங் தமிழ்ச் சமூக நடுவத்தின் தலைவராகவிருந்து, உள்ளூர் தமிழ் மக்களுக்கு பணியாற்றினார்.

2002ல் வன்னிக்குச் சென்ற அவர் அங்கேயே தங்கிவிட்டபோதும், அங்கும் ஓய்வெடுத்துக் கொள்ளாமல், பல்வேறு பொதுப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி கொண்டார். அதனால் அங்குள்ள மக்கள், போராளிகள் போன்றோரின் நன்மதிப்பை பெற்றார். தமிழீழ தேசியத் தலைமை அவர் மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்தது.

அவர் லண்டனில் வாழும் காலத்தில் ஓரிரு தடவைகள் நான் அவரைச் சந்தித்திருக்கிறேன். ஆனால் ***ஒரு பேப்பர்*** வாயிலாக, அவர் வன்னியில் வாழுகின்ற காலத்திலேயே, அது ஒரு நட்பாக மலர்ந்தது. அவர் ***ஒரு பேப்பர்***ரின் தீவிர வாசகன். பேப்பர் சற்று தாமதமானாலும், அவரிடமிருந்து மின்னஞ்சல் வரும். அவருக்கு போய்ச் சேர்கிற பிரதியை மற்றவர்களுக்கும் படிக்கக் கொடுப்பார். அவ்விதம் அவரிடம் ***ஒரு பேப்பர்***ரை வாங்கி வாசிப்பவர்களின் விபரங்களை, ஒரு தடவை எனக்கு எழுதினார். அதில் பல முக்கியத்தவர்களின் பெயர்களும் இருந்தமையினால், ***ஒரு பேப்பர்*** குழுவினர் மெய்சிலிர்த்துப் போனார்கள்.

அவரை மயில்வாகனம் ஐயா என்றுதான் நான் அழைத்து வந்தேன், ஆனால் தன்னை மயில் அப்பா என்றுதான் வன்னியிலுள்ளவர்கள் அழைக்கிறார்கள் எனவே தன்னை அப்பா என்று அழைக்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். 'எனது அப்பா உங்களிலும் 6 மாதங்கள் மூத்தவர் ஆகையால் எனக்கு உங்களை அப்பா என அழைப்பதில் எந்த ஆட்சேபனையுமில்லை' என பதிலளித்திருந்தேன். அதற்கு அவரோ 'உன்னுடைய தந்தை உன்னைப்போல் ஒருவரை மகனாகப் பெற்றமைக்காக, அவருக்கு பெருமைப்பட்டுக் கொள்ள உரிமையிருக்கிறது. என்பதை அவருக்கு சொல்' என்றார். அதை நான் என் தந்தையாருக்கு சொல்லவில்லை. அது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாக எனக்குத் தோன்றினாலும், அந்தப் பாசத்தை என்னால் மறக்க முடியவில்லை.

அவரது இழப்பு தமிழீழ தேசத்து மக்களுக்கு ஒரு பேரிழப்பாக அமைகிறது. அந்த தேசப்பற்றாளருக்கு எமது இறுதி வணக்கத்தை தெரிவிக்கும் அதேவேளையில், அவரது இழப்பினால் வேதனையுறும் எமது மக்களது சோகத்தில் ஒரு பேப்பரும் பங்கெடுத்துக் கொள்கிறது.

மயில்வாகனம் ஐயாவிற்கு, விஜயலட்சுமி, சீதாலட்சுமி என இரண்டு பெண்பிள்ளைகளும் நடேசன், குமரேசன், சுரேந்திரன் என்று மூன்று ஆண்பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவரது மனைவி இராசலட்சுமி தற்போது லண்டனில் வசிக்கிறார். அவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## என் பாவம் கடவுளுக்குப் பிடித்திருக்கிறது

நான் பாவப்பட்டவனா?
புனிதப்பட்டவனா?
புனிதங்களின் பாவத் தோற்றம்
உன்
உணர்வுப் பிழையே
உனக்குப் பாவம்
எனக்குப் புனிதம்
பாவத்தின் சம்பளம்
என்ன வேண்டுமானாலும்
இருக்கட்டும்
ஒவ்வொரு குளியலும்
என்னைப் புனிதமாக்கிவிடும்
மெல்ல ஊடுருவும்
பேய்களோடும் சிலநேரம்
போராட வேண்டியிருக்கிறது
என்னைப் பாவம் செய்யவிடாமல்
பாவம் செய்து விடாதே
என் பாவம் கடவுளுக்குப்
பிடித்திருக்கிறது

*- ரசிகவ் ஞானியார்*



# ST COURIER

## INTERNATIONAL LTD

1600க்கும் மேற்பட்ட முகவர்களை கொண்ட இந்தியாவின் முதன்மை ஸ்தாபனம்.

இந்தியாவின் அனைத்து கிராமங்களுக்கும் வீட்டுக்கு வீடு விநியோக சேவை.

நம்பிக்கை, உத்தரவாதம்,குறைந்த கட்டணம், உன்னத சேவை.

எமது சேவையை ஒருதடவை உபயோகித்தால் உண்மை புரியும்.

ST COURIER INTERNATIONAL LTD
28, LONDON ROAD SM4 5BQ
Tel: 078 7296 5353 / 0208 685 9385
Web : Yaaal Group : www.yaaal.com

இறக்குமதி செய்யப்பட்ட நவ நாகரீக ஐரோப்பிய ஆடைவகைகள், குழந்தைகளுக்கான **Party Dresses & Suits**, அலங்காரப்பொருட்கள் என்பனமிகப் பிரமாண்டமான காட்சி அறையில்...



**குறைந்த விலையில்**

**கூடிய தரம்**

வியாபாரிகளுக்கு விசேட விலை

**Timmy's Trendz**
*Whole Sale and Retail*

28, LONDON ROAD, MORDEN, SM4 5BQ
Tel: 078 7296 5353
020 8685 9385
Web : Yaaal Group : www.yaaal.com

# ஹேர்பா நேச்சுரலின் புதிய உணவுத் தயாரிப்புக்கள்

எமது உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய சக்திக்கும், உயிர் சத்துக்களுக்கும், நாம் உண்ணும் உணவில்தான் தங்கியிருக்கின்றோம். அத்துடன் எமது உடலானது உணவை உண்டு சீரணித்து அகத்துறிஞ்சி அதனை சக்திக்காகவும் ஏனைய உடல் செயற்பாடும் தேவைகளுக்காகவும் பயன்படுத்துவதாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. எனவே எமது உடல், உள ஆரோக்கியம் நாமுண்ணும் உணவில் தான் தங்கியிருக்கிறது. உடலுக்கு தேவையானவற்றை நாம் உணவூடாக எடுக்கும் பொழுது உடல் அவற்றை தேவைக்கேற்ற விதமாக பயன்படுத்தி உடலுக்கு ஆரோக்கியத்தைத் தருகிறது. வேண்டிய உணவுக் கூறுகள் கிடைக்காத பொழுது, உடலானது செயற்பாட்டு திறனில் நலிவடைந்து இறுதியில் நோய்நிலையைக் காட்டுகிறது.

எமது வழமையான உணவில் உடலுக்கு வேண்டிய:

- மாப்பொருள்
- புரதம்
- கொழுப்பு
- உயிர்ச்சத்துக்கள்
- கனியுப்புக்கள்
- ஊட்டச்சத்துக்கள்
- நோய் தடுக்கும் மூலிகைகள்

போன்ற கிடைக்கின்றனவா என்பதை ஒவ்வொருவரும் கவனித்துக் கொள்ள வேண்டும். இவற்றை உள்ளடக்கிய முழு உணவு தயாரிப்புக்கள் இப்போது கிடைக்கின்றன.




**புதிய முகவரி**

**Herba Health Centre**
**351A, Whitehorse Road,**
**Croydon CR0 2HS, UK**
**Tel: 044 (0) 208 664 8720**

இத்தயாரிப்புக்கள் ஏனைய தமிழ் கடைகளிலும் கிடைக்கும்.

ஆரோக்கிய வாழ்வுக்கு ஆதாரமான உடலுக்கு உணவாகவும், நோய்க்கு மருந்தாகவும், ஊட்டச்சத்து நிறைந்த பல நோய் நிலைகளுக்கு பயன்படும் மூலிகைகளையும் கொண்ட ஆகாரத் தயாரிப்புக்கள்.

- மூன்றே நிமிடத்தில் தயாரிக்கலாம் (Prepared in Three Minutes).
- குறைந்த வெல்ல அளவு (Low G I Index)
- குறைந்த கொழுப்பு (Low Fat)
- குறைந்த நிரம்பிய கொழுப்புக்கள் (Low Saturated Fat)
- உப்பு இல்லை (No Sodium)
- அதிக அளவு கனியுப்புக்கள் (Rich in Minerals)
- நிறைந்த சக்தி (Source of Energy)
- மேலைத்தேய தர நிர்ணய தயாரிப்புக்கள் (Manufactured to Western Standards)

வாசகர் கடிதம்

# ஒரு பேப்பர் இல் வெளியாகிய 'மரணத்துள் வாழ்வு' நாடக விமர்சனம்

புலம்பெயர் தமிழர்களால் நடாத்தப்படும் தமிழ் ஊடகங்களில் ஒரு அநியாயம் நடைபெற்று வருகிறது. இந்தப் பத்திரிகைளை நடாத்துபவர்களில் சிலர், இந்த ஊடகங்களுக்கு ஆக்கங்கள் சமர்ப்பிப்போர் சிலர், ஏதோ தங்களுக்கு அனைத்து விடயங்களிலும் அரசியல், ஆன்மீகம், சமயம், சமூகம், சினிமா, நாடகம், சங்கீதம் ஆகிய சகல துறைகளிலும் தாங்கள் மெத்தத் தெரிந்த மேதாவிகள் என்று எண்ணிக் கொண்டும், தங்களுக்குள் தாங்களே சிருஷ்டித்துக் கொண்ட மாயையிலும் கற்பனாவஸ்தையிலும், என்னென்னவோ எழுதியும் பேசியும் வருகிறார்கள்.

யார் என்ன வேண்டுமென்றாலும் எதைப் பற்றியும் எழுதி விடலாம் அது வெளிவந்து விடும். தராதரம், தகுதி, உண்மை, நேர்மை, நம்பகத்தன்மை ஒன்றும் வேண்டியதில்லை என்றாகி விட்டது.

தனிமனித சார்பு நிலைப்பாடுகள், தனிமனித காழ்ப்புணர்வுகள், ஆழ்ந்த ஆராய்ச்சியற்ற மேலாழ்ந்தவாரியான தனிப்பட்ட அனுமானங்கள், ஏதோ முடிவான கருத்துக்கள் போல் பரவலாக்கம் பெற்று விடுகின்றன.

இத்தகைத் தன்மைகள் கொண்ட கருத்துக்கள் தனிமனிதனால் பேசப்படும் போது பாதகம் ஒன்றும் அதிகம் இருக்கா. அது ஒன்றோ இரண்டு பேருடன் வலுவிழந்து விடும். ஆனால் அவையே எழுத்துருவம் பெற்றுப் பலரால் வாசிக்கப்படும் பத்திரிகை ஒன்றில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வெளிவரும் பட்சத்தில் எழுத்தாளனின் பின்புலம் நோக்கங்கள் தெரியாத வாசகர்களால் மெய்யானவையாக ஏற்றுக்கொள்ளும் சாத்தியக்கூறின் துர்விளைவுகள் கொடுமையானவை.

இந்த நிலைமைக்கு ஒரு பேப்பர் பத்திரிகையும் உள்ளாவது, உள்ளாக்கப்படுவது துரதிருஷ்டமானதே. இதற்கு உதாரணமாக, சமீபத்தில் ஒரு பேப்பர் இல் வெளியான தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தினரால் சென்ற ஜனவரி 2ந்திகதி வின்ஸரன் சேர்ச்சில் அரங்கில் மேடையேற்றப்பட்ட 'மரணத்தில் வாழ்வு' என்ற நாடகத்தைப் பற்றிய அ.ரவி எழுதிய விமர்சனத்தைக் குறிப்பிடலாம்.

நாடகத்தை பார்க்க வர முன்னரே அதைப் பற்றி என்ன எழுத வேண்டும் என ஏற்கனவே தீர்மானித்து விட்டவர் போல் அமைந்தது அவரது விமர்சனம்.

நாடக விமர்சனத்தைச் சாக்காக வைத்து, தனதோ அல்லது வேறு சிலரின் தனி மனித காழ்ப்புணர்வுகளின் வடிகாலாகத்தான் அதனை எழுதியுள்ளார் என்பது நாடகத்தை அன்று பார்த்த எனது எண்ணம். அதற்கான காரணங்களையும் கூற விழைகிறேன்.

அ.ரவி எழுதுகிறார்: 'அந்நாடகத்தின் பிரதி ஒரு வானொலி நாடகத்துக்கேற்ற பிரதியேயன்றி மேடைக்கு ஏற்றதல்ல' என்று.

ஒரு வானொலி நாடகத்திற்கு உரையாடல்கள் தொடர்ந்து இடைவிடாது இருத்தல் வேண்டும். உரையாடல்களில் ஏற்றத் தாழ்வு இருந்தாலே போதும். முகபாவனைகள் தேவையில்லை. பார்வைக்கு அங்கு இடமில்லை. இந்த நாடகத்தில் பல இடங்களில், ஒரு நல்ல மேடை நாடகத்துக்கு இலக்கணமான, வசனங்கள் எதுவுமில்லாது முகபாவங்களால், நடிப்பால் மட்டுமே காட்சிகள் நகர்த்தப்படுகிறதே! பல இடங்களில் மௌனமே கதை சொல்கிறதே! இதனையெல்லாம் அலட்சியம் செய்து, திறமையாக நாடக இலட்சணங்களுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட இந்நாடகப் பிரதியை வானொலிக்கு மட்டுமே சரியானது என்று எழுதியிருப்பது எவ்வளவு அபத்தம்!

மேலும், அந்த நாடகத்தில் தங்கள் பாத்திரங்களை வெகு கச்சிதமாகச் செய்து அவற்றின் குணாதியங்களை முகபாவனைகளால், பார்வைக்கு மட்டுமே உரிய, பார்வையால் மட்டுமே அனுபவிக்கக்கூடிய அவர்களது வெளிப்பாடுகள் முக்கியமாக பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட மாலினியாகவே மாறிய ஆனந்தராணியின் நடிப்பு, அவருடைய கண்களுக்குத் தெரியவில்லையா?

ஒருவேளை உண்மையிலேயே தெரியாதிருந்திருக்கலாம். அதற்கான சாத்தியக்கூறு இருப்பதுவும் அவரது விமர்சனத்தில் வெளியாகிறது.

மேடையில் ஒளியமைப்பு போதாமையினால் அவர்களது நடிப்பைப் பார்க்க முடியவில்லையாம். ஒரு நாடகத்தின் ஒளியமைப்பு என்றாலும் சரி, இசையமைப்பு என்றாலும் சரி, அந்த நாடகத்தின் களத்தையும், கையாளப்படும் கதையின் மைய மனோநிலையையும் பிரதிபலிப்பதாக இருப்பது நல்லதோர் நாடகத்தின் அம்சமாகும். இதனை நல்ல கலைத்துவம் கொண்ட சினிமாக்களிலும் பார்த்திருக்கின்றோம். இங்ஙனம் இந்த நாடகத்தின் ஒளியமைப்பும் அந்த வகையிலேயே அமைக்கப்பட்டமை நாடகத்தின் ஒரு நல்ல அம்சமாக இருக்க, அதையே நாடகத்தின் குறையாக தனது விமர்சனத்தில் குறிப்பிட்டிருப்பது நாடகத் திறனாய்வுகளை அவர் எழுதுவதற்கு அருகதையோ, தகுதிகளோ கொண்டவரா என்ற ஐயங்களை எழுப்புகின்றன.

இந்த நாடகத்தின் விமர்சனத்தை தன்னுடையதோ அல்லது வேறு யாருடையதோ காழ்ப்புணர்ச்சியை வெளியிட பயன்படுத்தியிருக்கின்றார் என்று ஊகிப்பதற்கு அந்த விமர்சனத்திலேயே வெளிப்படையான சான்று ஒன்று இருக்கின்றது.

அந்த நாடகத்தைப் பார்க்கும்போது இப்பொழுது லண்டனில் ஒரு வானொலியை இயக்கும் முன்னர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு அட்டூழியங்கள் பல செய்த ஒருவருக்குத் தான் 'டொக்டர்' என்ற பட்டத்தைக் கொடுத்து மூடி மறைக்கப் பார்த்திருக்கிறாரோ பிரதி ஆசிரியர்' என்ற கேள்வியும் தனக்குள் எழுந்ததாம்.

உயர்ந்த கல்வி பெற்றிருந்தும், பண்பாக இருந்தும் சந்தர்ப்ப சூழ்நிலையால் மனிதாபிமானமற்ற செயல்களில் ஈடுபட உந்தப்பட்டமையிட்டு டொக்டராக வரும் கதாபாத்திரம் ஒரு கட்டத்தில் கழிவிரக்கம் கொள்வதாக நாடக உரையாடலில் வருகிறது. இந்தக் கதாபாத்திரம் எங்கே, விமர்சகர் குறிப்பிடும் நபர் எங்கே? - அட! மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் என்னமாய் முடிச்சுப் போடுகிறார் அ.ரவி!- இதெல்லாம் அப்பட்டமான விஷமத்தனம்!

போதாதற்கு நாடகத்தின் தலைப்பிலும் அ.ரவி கை வைத்திருக்கிறார். நாடகத்திற்கு 'மரணத்தில் வாழ்வு' என்ற தலைப்புச் சரியில்லையாம். இலங்கையில் அதிகார அராஜாகங்களின் வன்முறைகளால் எத்தனை எத்தனை இளந்தளிர்கள் பாரதுாரமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எத்தனை எத்தனை இளம் பெண்களின் வாழ்வு பாலியல் வன்முறைகளால் சிதைக்கப்பட்டிருக்கின்றது. அந்த வன்முறைகளின் விளைவாக பாதிக்கப்பட்டு இறக்காதோர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் தான். ஆனால், நடைப்பிணங்களாக, பாரிய மன உளைச்சல்களுடன், தங்களுக்கு நடந்தவற்றை வெளியே சொல்ல முடியமாலும் மறக்க முடியாமலும், பாதகர்கள் பழிவாங்கப்பட வேண்டும், தண்டிக்கப்பட வேண்டும், நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என ஏங்கிக் கொண்டு நிறைவேற்ற முடியாமலும் நிவாரணமில்லாமலும், எப்பொழுதோ செத்துவிட்ட இவர்கள் மரணத்துள்தானே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பெண்ணை மையப் பாத்திரப் படைப்பாகக் கொண்டிருக்கும் நாடகத்திற்கு மிகவும் பொருத்தமான 'மரணத்தில் வாழ்வு' என்ற பெயரைக் கூட அநிச்சையாகத் தனது விமர்சனத்தில் அ.ரவி சாடியிருக்கறாரே.

இவையெல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இந்த விமர்சகர் தகுதியோ திறமையோ, கலைத்துவமோ இல்லாத ஒரு பேர்வழி என்றோ அல்லது தனது சொந்த அல்லது மற்றையோரின் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளுக்குச் சோரம் போய்விட்டார் என்றோ அந்நாடகத்துக்குப் போன என் போன்றவர்கள் அந்த விமர்சனத்தை வாசித்தபோது கருதுவதில் என்ன தவறு?

இத்தகையோரின் இத்தகைய விமர்சனங்கள், நலிந்திருக்கும் தமிழ் நாடகத்துறைக்கு அவ்வப்போது தரமான நாடகங்களால் உயிரூட்டிக் கொண்டிருக்கும் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தை ஈனப்படுத்தவில்லை. மாறாக, இவர்கள் தங்களைத் தாங்களே ஈனத்துக்குள்ளாக்குகிறார்கள்? பரவலாக படிக்கப்படும் ஒரு பேப்பர் என்ற பத்திரிகையை தங்களுக்கு அதில் எழுத கொடுக்கப்படும் வசதியை துஷ்பிரயோகம் செய்து அந்தப் பத்திரிகையை ஈனத்துக்குள்ளாக்குகிறார்கள்?!


*- அ. அரவிந்தன்*

## வெல்வோம்

நேற்றுக் கிடைத்த மகிழ்வையும்
நாளை கிடைக்கப் போகிற மகிழ்வையும்
நினைத்து
இன்றைய துக்கத்தை
எளிதாய் வெல்வோம்

*- வந்தியத்தேவன்*


AJ Accountancy
Auditors & Accountants




Specialist in accounts Preparation
- Auditing
- Self Assessment Returns
- Tax Planning
- Tax investigation
- VAT & PAYE
- Company formation
- Cash flow & Business plans
- Business start up loans
- Mortgages

An efficient, practical service for small to medium size Companies, partnerships and Sole traders with over

25 years experience in public practice.

Contact: Mr.C.K.Vasan
43 Anerly Road, London SE 19 2AS
Tel: 020 8778 8666
Fax 020 8778 8999


Info@ajaccountancy.co.uk
www.ajaccountancy.co.uk



சுத்தம்

சுகாதாரம்

சுவை





பிரித்தானிய சுகாதார முறைப்படி
உணவு தயாரிக்கும் நிறுவனம்
UKB5052EC

S.Devanath **(Devan)**
*The Managing Director*

Product of UK


# Blue Sky Fresh Foods Ltd.

S.I.S Sri Lankan Caterers.

We cater for parties and special occasions, big or small.

Food Prepared by Blue Sky Fresh Foods Ltd.

'Your Satisfaction is Our Pleasure'.



# Sri Sithi VINAYAGA

## PARTY SERVICES



Includes attractive
**'Package Deals"**

***Marquees:** (Tents of various sizes), **Folding type Tables & Chairs, Food Warmers, and other Catering Equipment.***

Tel: **020 8451 3777**
Mob. **07782 251 947**

Unit 6-7, Artesian Close Industrial Estate,
Stonebridge Park, London. NW10 8RW

# தமிழர்களின் உயிரைக் காப்பாற்றக் கோரி தன்னுயிரை மாய்த்துக் கொண்ட தமிழக இளைஞனின் உள்ளக் குமுறல்



*ஈழத்தமிழர்கள் சிங்கள அரசினால் கொன்று குவிக்கப்படுவதையிட்டு மனம் நொந்து போன கு. முத்துக்குமார் என்ற தமிழக இளைஞன் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார்.*

*அவர் தீக்குளிப்பதற்கு முன்னால் விநியோகித்த பிரசுரித்தில் அடங்கியிருந்த விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.*

**விதியே விதியே என்செய் நினைத்திட்டாய் என் தமிழ்ச் சாதியை?**

அன்பார்ந்த உழைக்கும் தமிழ் மக்களே,

வணக்கம். வேலைக்குப் போகும் அவசரத்திலிருக்கும் உங்களை இப்படி சந்திக்க நேர்ந்ததற்கு நான் வருந்துகிறேன். ஆனால் வேறு வழியில்லை. என் பெயர் முத்துக்குமார். பத்திரிகையாளர் மற்றும் உதவி இயக்குநர். தற்சமயம் சென்னையில் உள்ள பத்திரிகை ஒன்றில் வேலை செய்து வருகிறேன்.

உங்களைப்போல் தான் நானும். தினமும் செய்தித்தாளையும், இணையத்தையும் பார்த்துப் பார்த்து, தினம் தினம் கொல்லப்பட்டு வரும் எம் சக தமிழர்களைக் கண்டு சாப்பிட முடியாமல், தூங்க முடியாமல், யோசிக்க முடியாமல் தவிக்கும் எத்தனையோ பேரில் ஒரு சாமானியன்.

வந்தாரை வாழ வைக்கும் செந்தமிழ் நாட்டில் சேட்டு என்றும், சேட்டனென்றும் வந்தவனெல்லாம் வாழ, சொந்த ரத்தம் ஈழத்தில் சாகிறது. அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று குரல் கொடுத்தால், ஆம் என்றோ இல்லை என்றோ எந்தப் பதிலும் சொல்லாமல் கள்ள மௌனம் சாதிக்கிறது இந்திய ஏகாதிபத்தியம்.

இந்தியாவின் போர் ஞாயமானதென்றால் அதை வெளிப்படையாகச் செய்ய வேண்டியது தானே.. ஏன் திருட்டுத்தனமாக செய்ய வேண்டும்?

ராஜீவ்காந்தியைக் கொன்றார்கள் என்ற சொத்தை வாதத்தை வைத்துக்கொண்டு, சில தனிநபர்களின் பழிவாங்கல் சுயநல நோக்கங்களுக்காக ஒரு பெரும் மக்கள் சமூகத்தையே கொன்று குவிக்கத் துடிக்கிறது இந்திய அதிகார வர்க்கம். ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப்புலிகள் மட்டும் குற்றம் சாட்டப்படவில்லை. தமிழக மக்களையும் குற்றவாளிகள் என்று குற்றம்சாட்டியது ஜெயின் கமிஷன் அறிக்கை. அப்படியானால் நீங்களும் ராஜீவ்காந்தியைக் கொலை செய்த கொலைகாரர்கள் தானா?

ஜாலியன் வாலாபாக்கில் வெள்ளையன் கொன்றான் என்றார்களே, இவர்கள் முல்லைத் தீவிலும் வன்னியிலும் செய்வதென்ன? அங்கு கொல்லப்படும் குழந்தைகளைப் பாருங்கள். உங்கள் குழந்தைகள் நினைவு வரவில்லையா? கற்பழிக்கப்படும் பெண்களைப் பாருங்கள். உங்களுக்கு அதுபோன்ற வயதில் ஒரு தங்கையோ, அக்காவோ இல்லையா? ராஜீவ் கொல்லப்பட்டபோது காங்கிரசின் முக்கிய தலைவர்கள் ஏன் அவருடன் இல்லை, கூட்டணிக் கட்சித் தலைவியான ஜெயலலிதா, தமிழ் நாட்டில் ராஜீவ் கலந்துகொள்ளும் ஆகப் பெரிய பொதுக்கூட்டத்தில் ஏன் பங்கெடுக்கப் போகவில்லை என்பது போன்ற கேள்விகள் கேட்கப்படாமலும், இவர்களால் பதில் சொல்லப்படாமலும் கிடக்கின்றன. மக்களே யோசியுங்கள். இவர்கள்தான் உங்கள் தலைவர்களா?

கலைஞரா? நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்வார்கள் என்று அப்பொழுதும் அவர் அறிவிப்பார். பிறகு, மத்திய அரசைப் புரிந்து கொள்வார்(?!). பிறகு மறுபடி சரியான முடிவை எடுக்க வேண்டி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுவார். இந்த மாசம், இந்த வாரம், இதுவரைக்கும் என்ன எவனும் தொட்டதில்ல என்கிற வின்னர் பட வடிவேல் காமெடியைப் போல. காகிதம் எதையும் சாதிக்காது மக்களே!

இப்பொழுது, உலகத் தமிழினத் தலைவர் என்ற பட்டப்பெயரைச் சூடிக்கொள்ளவும், தமிழ் நாட்டில் இருக்கும் பணத்தையெல்லாம் தன் குடும்பத்திற்கே உரித்தாக்கவும் விரும்புகிற தேர்தல் காலத் தமிழர் கலைஞர் மக்களின் கோபத்தை எதிர் கொள்ளப் பயந்து மருத்துவ மனையில் போய் ஒளிந்து கொண்டுள்ளார்.

தனது மந்திரிகளுக்கு அவசியப்பட்ட துறைகளுக்காக சண்டப்பிரசண்டம் செய்து சதிராடிய இந்தச் சூரப்புலி உண்மையில் தமிழுக்காகவோ, தமிழருக்காகவோ செய்ததென்ன? ஒரு முறை அவரே சொன்னார், 'தேனெடுத்தவன் புறங்கையை நக்காமலா இருப்பா'னென்று. இவருடைய பம்மலாட்டத்தையெல்லாம் பார்த்தால் ரொம்பவே நக்கியிருப்பார் போலிருக்கிறேதே?

பட்டினிப் போராட்டத்தின் மூலம் களம் இறங்கியிருக்கும் சட்டக்கல்லூரி மாணவர்களே? உங்கள் போராட்டம் வெற்றிபெற சக தமிழனாக நின்று வாழ்த்துகிறேன். உலகம் முழுக்க மக்களுக்கான புரட்சிகரப் போராட்டங்களில் முன்கையெடுப்பவர்களாக இருந்தது மாணவர்கள் என்கிற ஜாதிதான். அதேபோல், தமிழ்நாட்டிலும் உங்களுக்கு முந்திய தலைமுறையொன்று இதுபோன்ற ஒரு சூழலில், இதுபோல் குடியரசு தினத்திற்கு முன்பு களம் கண்டுதான் காங்கிரஸ் உள்ளிட்ட தேசியக் கட்சிகளைத் தமிழ் மண்ணிலிருந்து விரட்டியடித்தது.

ஆக, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணம் உங்கள் கைகளுக்கு மறுபடியும் வந்து சேர்ந்திருக்கிறது. பொதுவாக உலக சரித்திரத்தில் இப்படியெல்லாம் நடப்பதில்லை. கடந்த முறை நடந்ததுபோல், உங்கள் போராட்டத்தின் பலன்களை சுயநலமிகள் திருடிக் கொள்ள விட்டு விடாதீர்கள். போராட்டத்தின் பலன்களை அபகரித்து ஆட்சிக்கு வந்த தி.மு.க. முதலில் செய்த விசயம் மாணவர்கள் அரசியல் ஈடுபாடு கொள்ளக் கூடாது என சட்டம் போட்டது தான்.

ஆட்சிக்கு வந்த அது, தமிழின உணர்வுகளை மழுங்கடித்து, ஒட்டுமொத்த தமிழினத்தையும் மகஜர் கொடுக்கும் ஜாதியாக மாற்றியது. அந்த மரபை அடித்து உடையுங்கள். மனு கொடுக்கச் சொல்பவன் எவனாக இருந்தாலும், அவனை நம்பாதீர்கள். நமக்குள்ளிருக்கும் ஜாதி, மதம் போன்ற வேறுபாடுகளை எரித்துக் கொள்ள இதுதான் தருணம். உண்ணாவிரதத்தையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு களம் காணுங்கள்.

உண்மையில், இலங்கையில் இந்திய ராணுவ நடவடிக்கை என்பது தமிழர்களுக்கெதிரானது மட்டுமல்ல. ஒட்டுமொத்த இந்தியர்களுக்குமே எதிரானது. சிங்களச் சிப்பாய்களிடம் கற்றுக்கொள்கிற பாலியல் நுணுக்கங்களைத் தானே அவர்கள் அசாமில் அப்பாவிப் பெண்களிடம் பரிசோதித்துப் பார்த்தார்கள்.

விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்கான சிங்கள வன்முறை நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டு வடகிழக்கு மாநிலப் போராளிகளிடம் பயன்படுத்திக் கூர் பார்த்தார்கள். போதாதற்கு ஹைட்டியில் சமாதானப் பணிக்காக அனுப்பப்பட்ட ஐ.நா.வின் ராணுவத்திலிருந்து இந்திய மற்றும் இலங்கை ராணுவம் அவரவர்களுடைய பாலியல் நடவடிக்கைகளுக்காக அடித்துத் துரத்தப்பட்டிருப்பதிலிருந்து என்ன தெரிகிறது? இந்தக் கூட்டணி கொள்கைக் கூட்டணியல்ல பாலியல் கூட்டணி என்றல்லவா? ஆக இந்திய - இலங்கை இராணுவக் கூட்டு என்பது இந்தியர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கும் கூட எதிரானதாக இருப்பதால், அகில இந்திய அளவில் மாணவர்கள், ஜனநாயக அமைப்புகளையும் உங்கள் பின்னால் திரட்டுங்கள்.

இதையெல்லாம் மக்களே செய்ய முடியும். ஆனால், அவர்கள் சரியான தலைமை இல்லாமல் இருக்கிறார்கள். உங்கள் மத்தியிலிருந்து தலைவர்களை உருவாக்குகள். உங்கள் போராட்டத்தை சட்டக்கல்லூரி மாணவர்கள்என்ற இடத்திலிருந்து அனைத்து மாணவர்கள் என்று மாற்றுங்கள். உங்களிடமிருக்கும் வேகமும், மக்களிடமிருக்கும் கோபமும் இணைந்து தமிழக வரலாற்றை அடியோடு மாற்றட்டும். ஆள்பலம், பணபலம், அதிகார வெற்றியை உடைத்து எறியுங்கள். உங்களால் மட்டுமே இது முடியும்.

'நாங்கள் தமிழ் மாணவர்கள், தமிழ் நாட்டின் உயிரானவர்கள், இங்கு தமிழினம் அமைதி கொண்டிருந்தால் ஏடுகள் தூக்கி படிப்போம். எங்கள் தமிழர்க்கின்னல் விளைந்தால் எரிமலையாகி வெடிப்போம்'என்ற காசி ஆனந்தனின் பாடலை ஓர் அறிவாயுதமாக ஏந்துங்கள்..

| E | U | A | M | A | N | J | A | L | R |
| S | M | R | D | K | V | F | T | N | G |
| E | N | Q | Y | A | Z | A | I | U | W |
| V | E | P | S | R | O | H | I | B | N |
| E | E | A | J | U | E | U | O | P | C |
| L | L | C | X | P | T | U | K | A | R |
| L | A | H | S | U | O | P | C | X | T |
| A | M | A | U | K | L | M | R | D | V |
| I | F | I | T | N | G | U | F | U | N |

**Hidden Words:**


**Subject: Colours**

KARUPU, SIVAPU, NEELAM, MANJAL, PACHAI, VELLAI

*Submitted by:*
*Mathumitha Sasikaran (Age 9) Norbury.*

## DOT... TO... DOT...





### It's raining, it's pouring

It's raining, it's pouring
The old man is snoring
He went to bed and he bumped his head
And couldn't get up in the morning

### THE BIG SHIP SAILS ON THE ALLY-ALLY-OH

The big ship sails on the ally-ally-oh
The ally-ally-oh, the ally-ally-oh
Oh, the big ship sails on the ally-ally-oh
On the last day of September.

The captain said it will never, never do
Never, never do, never, never do
The captain said it will never, never do
On the last day of September.

The big ship sank to the bottom of the sea
The bottom of the sea, the bottom of the sea
The big ship sank to the bottom of the sea
On the last day of September.

We all dip our heads in the deep blue sea
The deep blue sea, the deep blue sea
We all dip our heads in the deep blue sea
On the last day of September.

### Knock Knock Jokes!

Knock knock!
Who is there?
Oru!
Oru who?
Oru Paper!

Knock knock!
Who is there?
Tamil!
Tamil who?
Tamil Naadu

Knock knock!
Who is there?
Come on
Come on who?
Come on! Be a good boy and open the door!


Knock knock!
Who is there?
Mars!
Mars who?
Mars tastes nice

*From Sathursan Sasikaran (Age 5)*

## MIDAS TOUCH

King midas was very greedy. Gold was more important to him than his own family. King Midas met a ginie. "you may have one wish" said the genie. What do you think King Midas wished for? King Midas wished that everything he touched would turn into gold & His wish came true. King Midas became very rich but he was not happy. He couldn't smell gold flowers from his garden. He couldn't eat gold food! King's was very sad. He gave her a hug and she turned into gold! King midas asked the genie: "Please take back my wish My daughter is worth more than gold!" The genie said "I will" Now king midas was happy. He had learned the LOVE not gold, REALLY makes a person rich!

THE END!






லனிடனி கெள்ரன் அகிலன் 7வயது

### நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்

பத்தின் அடுக்குகள்

தமிழின் வரிசை ஒழுங்கில் பத்தின் அடுக்குகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பத்து | 10 | அற்புதம் | 19 | மகாக்ஷோணி | 28 | அத்தியந்தம் |
| 2 | நூறு | 11 | நிகற்புதம் | 20 | க்ஷிதி | 29 | அனந்தம் |
| 3 | ஆயிரம் | 12 | கர்வம் | 21 | மகாக்ஷிதி | 30 | பூரி |
| 4 | பத்தாயிரம் | 13 | மகாகர்வம் | 22 | க்ஷோபம் | 31 | மகாபூரி |
| 5 | நியுதம் | 14 | பதுமம் | 23 | மகாக்ஷோபம் | 32 | அப்பிரமேயம் |
| 6 | பிரயுதம் | 15 | மகாபதுமம் | 24 | பரார்த்தம் | 33 | அதுலம் |
| 7 | கோடி | 16 | சங்கம் | 25 | சாகரம் | | |
| 8 | தசகோடி | 17 | மகாசங்கம் | 26 | பரதம் | 34 | அகம்மியம் |
| 9 | சதகோடி | 18 | க்ஷோணி | 27 | அசிந்தியம் | 35 | அவ்வியத்தம் |

| | | | |
|---|---|---|---|
| 1 | $1,000^2$ | ($10^6$) Million | பிரயுதம் |
| 2 | $1,000^3$ | ($10^9$) Billion | சதகோடி |
| 3 | $1,000^4$ | ($10^{12}$) Trillion | கர்வம் |
| 4 | $1,000^5$ | ($10^{15}$) Quadrillion | மகாபதுமம் |
| 5 | $1,000^6$ | ($10^{18}$) Quintrillion | க்ஷோணி |
| 6 | $1,000^7$ | ($10^{21}$) Sextrillion | மகாக்ஷிதி |
| 7 | $1,000^8$ | ($10^{24}$) Septrillion | பரார்த்தம் |



அகிலன் தேவராஜா 7வயது
மினோடன் கௌசிகன் 7வயது

### Jokes

What kind of sweets do aliens like?
Marshan mellows
What planet is married?
Saturn, because it has a ring.

### Amazing Facts

From the moon the only thing you could see on earth is the Great Wall of China.
The snakes smell with their tongue.

### Riddles

**I am on top of something at Christmas. I am bright yellow and I live in the sky at night. What am I?**

Star

**I am there for you when you get cold. You plug me in and press a button. What am I?**

Electric radiator

### Tongue Twisters

White Rose, Red Rose.
Peter Pecker Pickled Pepper and put it on Paper.
Spider Man, Bat Man

*From Mathumitha Sasikaran (Age 9)*

**Sri Kanth & Co.**
**Solicitors**
**We practise in the following areas of Law**

- Immigration
- Wills & Probate
- Conveyancing – Residential
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Family & Matrimonial
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

T: **020 8795 0648** F: **020 8795 0649** Mob: **07831 195 979**
557 High Road, Wembley, Middlesex. HA0 2DW.

**SHOP FOR SALE**
**MANCHESTER**
**WEEKLY TAKING £14500.00**
OFF LICENCE & NEWS AGENTS
2 BED ROOMS OWNERS ACCOMMODATION
SAME OWNERS FOR 8 YEARS
FRESH LEASE AVAILABLE
**ASKING PRICE - £75000.00**
**CONTACT – 07985250019**
**07939597345**
Email:rochdale14@hotmail.com

**First Indian Guru Rishi Ji From India**
In the Spirit of true Spiritualism
who writes your problems before you speak.
A classical fantasy in the spiritual world
**Doctrine in Tantra Practising**
since 1973 world-wide.
(No Consultation Fees)
By using the tools of Ancient Indian Tantra:
Juju, Black Magic, Evil effects of any kind etc. are removed.
Financial, love, health problems etc. are rectified.
பார்வையொன்றே போதும் உங்கள் ஜாதகத்தை கணிப்பதற்கு...
To give this message worldwide we requested Rishi Ji to allow his followers to advertise
For appointment ring: **020 8518 2201 / 020 8554 2177**
50 Vaughan gardens, Gants Hill, Ilford, Essex IG1 3PD

**BEAUTICIAN - தேவை**
CROYDONல் புதிதாகத் திறக்கப்படவுள்ள BEAUTY CENTER க்கு THREADING AND FACIALS செய்யக்கூடிய அனுபவம் உள்ள BEAUTICIAN தேவை
தொடர்புகளுக்கு :
**020 8684 1026 | 079 6076 1606**

**PERMA**
**INTERNATIONAL SHIPPING LTD**
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்
**தொடர்புகளுக்கு: சிவம்**
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: **020 8646 5222**, Mobile: **07939 550397**

# NEW LONDON COLLEGE

New London College





ஐக்கிய ராச்சியத்தில் உள்ள மிகவும் பிரசித்தமானதும்,
அதிக சித்திகளை பெற்றதுமான கல்லூரி.

பிரித்தானிய பிரஜா உரிமைக்கும், நீண்ட நாட்கள் தங்கி
படிப்பதற்கும், ஏற்ற பாடத் திட்டம்

நீங்கள் ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழி பேசுபவர்களா ?

You will have to pass the ESOL Citizenship Test and submit the Certificate along with your application to the Home Office

**We are an authorised Test Centre with proven track record**

## WE TRAIN UNTIL YOU PASS

- ACCA / CIMA / CAT
- SAGE Accounting/Payroll
- Business Management
- Human Resource
- Hotel Management
- Tourism Management
- Travel Agency Management
- Air Ticketing
- IT - ORACLE
- English Language (ESOL)

**1 Martindale Road, Hounslow, London, TW4 7EW**
**(Opp. HOUNSLOW WEST Tube Station)**
**www.newlondoncollege.co.uk**

**Call Now**
**020 8570 7766**

virgin atlantic abe CIMA ACCA City & Guilds IAM BAC ACCREDITED ilm ncfe ORACLE WORKFORCE DEVELOPMENT PROGRAM



# Had an accident? Not your fault?


## Don't suffer in pain!

- ✓ Personal injury
- ✓ General information
- ✓ Accidents at work
- ✓ Financial benefits
- ✓ Slips, trips
- ✓ Convenient ar repair
- ✓ Replacement vehicles
- ✓ Safe storage, recovery

### CALL US – we can help

We offer FREE expert advice and if we agree that you have a case, our lawyers will fight for you every step of the way. We offer a fast and simple service by phone and a unique compensation cliam protection plan. This means making a claim requires NO MONEY and ensures there is absolutely NO RISK!

We also offer fast and simple taxi replacement 24 hours a day on 07943 43 43 42 and a 24 hours recovery service


call 0800 808 7786

www.help4uformations.com

Help4u formations is a member of the Claims Standards Council and is regulated by the Ministry of Justice in respect of regulated claims management activities; its registration is recorded on the website www.claimsregulation.gov.uk

NO WIN NO FEE!

Help4u

Suite44, trinity house, heather park drive, Wembley, HA0 1SU
Company Registered in England and Wales. Company number 6661637

0800 634 5426 free for a demo
079 857 856 36

# Maximise your profits today!

- Benefits of our EPOS solution:
- Save Time : Save time by using short cut
- Easy to use :Very easy to and manage
- CCTV Link: Link the EPOS & CCTV to prevent fraud
- Instant Support: We offer a dedicated 24/7 support
- Remote Management: Manage your system from home
- Reports: Numerous reports to control sales, staff and stock

*** Free CCTV integration with selected systems***

**Tel 0800 634 5426 www.London EPOS.com**
**London EPOS,UnitD6, East Lane,**
**North Wembley London HA9 7XX**

**POS 15 Package**
Touch Computer
Barcode Scanner
Cashdraw
Customer Display
Receipt Printer
TouchPOS Software
7000 item Database
Stock Control

**POS 60 Package**
Same as POS 1
+
Quantum Scanner
Label PrinterHandHeld
Scanner
CCTV Link
Newsround Module
Backoffice Module






## சுவையான உணவு! நிறைவான மனது!!

இந்திய இலங்கை மற்றும் சீன உணவு வகைகள்
200 பேர்வரை அமர்வதற்கேற்ற இடவசதி
பிறந்த நாள் மற்றும் இதர கொண்டாட்டங்களுக்கு ஏற்ற சகல வசதிகளும் செய்து தரப்படும்
குடும்பத்தினரோடு அமர்ந்து உண்பதற்கேற்ற இதமான சூழல்
அகில இந்திய புகழ் பெற்ற சமயற்கலை நிபுணர்களின் உயர்தர சேவை

sathiyams
A tasteful promise

## Classical Indian & Chinese Restaurant

Incomparable setting and superb food
We serve Tandoori, South & North Indian,
and Indo-Chinese and Sri Lankan dishes.
Mouth watering dishes uniting to satisfy your taste buds.
For the complete dining experience dine at *'Sathiyams'*.

Open: Tuesday to Sunday 10.00 am till late.
Mondays, Open only for bookings over 100.
Open on bank Holidays


Seats 200 Ground Floor + 50 Basement

## Booking for Functions Welcome

Call: 020 8552 0777

379 – 381 High Street North, Manor Park, London. E12 6PG


2 for 89p
49p Each
Made using milk powder imported from New Zealand
Niru BRAND
Lemon Puff
WITH
REAL LEMON
CREAM
சுவைத்துப் பாருங்கள் உண்மையான
லெமன்கிறீம் சுவையை.
SGS
SGS




# NO WIN NO FEE

# WWW.GEORGECLAIMS.COM

(PERSONAL INJURY SPECIALIST)

## WE CAN HELP YOU MAKE A CLAIM FOR :

**MOTOR ACCIDENT ACCIDENT AT WORK**
**MEDICAL NEGLIGENCE SLIP & TRIP CRIMINAL INJURIES**

HAD AN ACCIDENT IN THE LAST 3 YEARS?
CLAIM AS A DRIVER AND/OR A PASSENGER INVOLVED IN ANY ACCIDENT (MINOR/MAJOR)

**E-mail:- contact@georgeclaims.com**

உங்கள் அனைத்து பாதுகாப்பு தேவைகளுக்கும் எங்கள் உடனடி சேவை !

24 hours
For free advice **Office: 01782 444264**
and home visit **Mob: 07957108339**

www.georgeclaims.com

# அதானே பார்த்தேன்....

பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு செல்லுங்கள் இலங்கைக்கு செல்லுங்கள் என தமிழகத்திலிருந்து வற்புறுத்திக் கொண்டே வந்தார்கள். போய்....? என்பது கேள்விக்குறியாகவே இருந்தாலும் முதலில் போகட்டும் என அனைவரும் வற்புறுத்தி வந்தார்கள்.

பிரணாப்போ போவேன்.. ஆனா போகமாட்டேன் என என்னத்த கன்னயா போல இழுத்துக் கொண்டிருந்தார். போர் நிறுத்தம் பேச்சு அரசியல் தீர்வு என்ற இலக்குகளை விட்டுவிட்டு - காவலருக்கு பிரணாப்பின் பயணமே இறுதித் தீர்வு போலானது.

இறுதியில் திடீரென்று இன்று பிரணாப் கொழும்புக்கு விரைந்தார். போவதற்கு முன் காவலரிடம் பேசியுமிருக்கிறார். நமது கே?ரிக்கையை இறுதி வேண்டுகோளை கவனத்திற்கொண்டு பிரணாப் கொழும்பு விரைகிறார் என்ற கடிதம் நாளை வருவதற்கிடையில் இன்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சு உண்மையை போட்டு உடைத்தது.

வந்து சந்திக்கவும் என்ற தமது அழைப்பை ஏற்று பிரணாப் தம்மைச் சந்திக்க வந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. அது உண்மையில்லாதும் இருக்கலாம். ஆனால் அவ்வாறு சொன்னால் இந்தியா வழமைபோலவே ஹசொங்கி? த்தனத்தோடு மறுப்பேதும் தெரிவிக்காமல் பல்லிளிக்கும் என்பது இலங்கைக்கு நன்றாகவே தெரியும்.

புலிகளை ஒழித்து விட வேண்டும் என்ற ஒரேயொரு விருப்பத்திற்காக இலங்கையின் எல்லா ஆணைகளுக்கும் வாலாட்ட வேண்டிய நிலை..

இதெல்லாம் ஒரு பொழைப்பு....

0 0 0

இலங்கையின் அழைப்பு கிடைக்காமல் எப்படி செல்வது என்று காங்கிரஸ் ராஜா கொஞ்ச நாட்களுக்கு முன்னர் சொல்லியிருந்தமை நினைவிருக்கலாம்.

0 0 0

எங்களிடம் ஒரு நாய் இருந்தது. ஞ்ஞ்சு.... வா என்றால் வரும். போ என்றால் போகும். வராதே என்றால் வராது. நன்றியுள்ள நாய் அது.

*- கொழுவி*

# இந்தியத் துடுப்பாட்ட அணிக்கு எச்சரிக்கை!

இலங்கை நமது முக்கிய நட்பு நாடு என்பது தாங்கள் அறிந்ததே...

இலங்கைத் துடுப்பாட்ட அணி வெற்றி பெற நாம் உதவாவிட்டால், பாகிஸ்தான், சீனா உட்பட்ட நமது எதிரி நாடுகளின் உதவியை இலங்கை அணுகக்கூடும். எனவே இலங்கை அணி வெற்றிபெற நாம் கட்டாயம் உதவியாகவேண்டும் என்பதை நினைவில் கொண்டு துடுப்பாட்டம் ஆடவும்...

இலங்கை நமது நட்பு நாடு என்பதால், இலங்கை அணி அடையும் தோல்விகள் நமது தோல்வியாகவே நாம் கருத வேண்டும். அதே போல் இலங்கை அணியின் வெற்றி நமக்கும் வெற்றியே. எனவே, நீங்கள் இலங்கையில் விளையாடப் போகும் அனைத்து ஆட்டங்களிலும் தோல்வியடையவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இலங்கை அணியின் தோல்வி நமது தோல்வி என்பதை நினைவில் கொண்டு ஆடவேண்டும் என எச்சரிக்கிறேன்!

*- ஜெகதீசன்*

# இந்திய -இலங்கை ஒருநாள் போட்டியை கண்டுகளிக்க பிரணாப் கொழும்பு விஜயம்

நாளை முதல் தொடங்க இருக்கும் இந்திய இலங்கை அணிகளுக்கு இடையேயான ஒருநாள் தொடரை கண்டுகளிக்க இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும்பு விரைகிறார். துடுப்பாட்டம் குறித்த ஆலோசனைகளை அணித்தலைவர் மகி க்கு அளித்துவிட்டு திரும்பும் போது அவருக்கு சென்னைத் தீவுத்திடலில் உலகின் ஒரே தமிழின தலைவர் தலைமையில் வரவேற்பு நிகழ்வுக்கும் கவியரங்கிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய தமிழர்களே தமிழனின் பிணங்களின் மீதமர்ந்து கண்டு களியுங்கள்!

*- முத்துகுமரன்*

# தமிழக இந்திய அரசியல்வாதிகளுக்கான இழவுப் பத்திரிகை



அன்புக்குரிய எமது தொப்புள்கொடி உறவுகளின் தலைவர்களே!

பல காலம் இம்சைப்பட்டு நோய்வாய்ப்பட்டு உங்களுக்கு பலமுறை சொல்லியனுப்பியும் உங்களை பார்க்க கடைசிவரை பார்த்திருந்து இன்று மீளா தூக்கத்தில் ஆழ்ந்த எம் உடன் பிறப்புக்களின் மரண செய்தியை இந்த இழவுப் பத்திரிகையை வைத்து எம்முறவுகளின் துயரில் பங்கு கொள்ள உரிமையுடன் அழைக்கிறோம்.

தாங்களும் தங்கள் சமூகங்களும் முடியுமானால் உடனடியாக எமது துயரில் வந்து பங்கு கொள்ள அழைக்கிறோம்.

உங்களால் இன்னோரென்ன காரணங்களால் வர முடியாத நிலமையாயின் முதலே சொல்லியனுப்புக. பிப்ரவரி 15 தான் வரமுடியுமாயின் நேரடியாக இடுகாட்டுக்கு வந்து எமது சொந்தங்களை தரிசித்து செல்லவும்.

நேரடியாக எல்லோரையும் தனிப்பட சந்திக்கமுடியாத காரணத்தினால் இந்த பத்திரிகையின் ஒரு நகலை திருமதி சோனியா அம்மையாருக்கும் அனுப்பிவிடுங்கள்.

இதய ஆப்ரேசன் காரணைமாக மருத்துவமனையில் தங்கியிருக்கும் திரு மன்மோகன் சிங்கிற்கு எமது உறவுகளின் இழப்பு தகவலை தயவு செய்து சொல்ல வேண்டாம்..அது அவரது உடல் நிலையை மேலும் மோசமாக்ககூடும்.

இப்படிக்கு

தமிழ் ஈழ தேசம்

மற்றும்

இலங்கை தமிழர்

லேபிள்:- தொப்புள் கொடியும் அறுநாக்கொடியும்!

*- தீவு*

# நானும் நாகரட்ணம் சேரும்.

கெமிஸ்றி நாகரட்ணம் சேரெண்டால் யாழப்பாணத்தில காலில விழுந்து கும்பிடுவாங்கள். அந்தளவு பெருமை வாய்ஞ்ச மனுசன். இரசாயனவில் அறிவு எக்கச்சக்கம். ஆள் கருகரு. தலை வெள்ளை வெளேர். அன்பான மனுசன் ஆனா கோவம் வந்தால் கிழிஞ்சுது கிருஷ்ணகிரி. கழுசான கழட்டிக் காஞ்ச மிளகாய் தடவிரும். நானும் கெமிஸ்ரி படிக்க அவற்ற வீட்ட நடக்கிற குறுப்கிளாசுக்குப்போனன்.

நானொண்டும் இரசாயனவியல் படிச்சு ஏ எடுக்கோணுமெண்டு போகேல்ல. அங்க நல்ல வடிவடிவான பயோ படிக்கிற பெட்டயள் வாறதாமெண்டு கேள்விப்பட்டுதான் போனனான். போனாப் பிறகுதான் விளங்கிச்சு அங்க நமக்கு சங்குதாணெண்டு. அப்பாவை அவருக்கு தெரியுமாம். ஒழுங்காப் படிக்கோணும் கேள்விகேட்டாச் சொல்லோணும் எண்டு உத்தரவு வேற.

அடக்கடவுளே! அந்தாளுக்கு பொதறிவுப் பனி. இங்கிலீசுப் பைத்தியம். அடிக்கடி முதல்நாள் வாசிச்ச இங்கிலிசுப் பேப்பரிலருந்து கேள்வி கேட்டு தன்ட இங்கிலிசுப் புலமைய காட்டுவார். ஆப்பில ஏறி இருந்திட்டமே எண்ட வேதினையோட மாசங்கள் ஓடிச்சு. பெரிசா வாயக் குடுக்காம என்ட வாலை ஒடுக்கி வைச்சு எப்பிடியோ சமாளிச்சுட்டன். அப்பதான் ஒருநாள் வந்தது விலங்கம்.

'தம்பி யாரிங்க பயோ படிக்கிது?' நக்கல் சிரிப்புடன் ஒருகேள்வி. விளங்கிவிட்டது ஏதோ கேக்கப் போகுது சிங்கம்.

'நான் நேற்று பேப்பரில ஒரு விசயம் படிச்சனான் ஓமோனுகளைப் பற்றி. இந்த றிபுரடக்சன் றிலேட்டட் ஓமோன்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமே?'

பெண்டுகள் எல்லாம் வெக்கப்பட பெடியங்களுக்கு ஒரே கிளுகிளுப்பு.

'ஒரு அறுவது வயசு மனுசி பிள்ளைப் பெத்திருக்காம். மனுசனுக்கு 70 வயசாம். அமெரிக்காவில நடந்ததாம். ஏதேதோ ஓமோன் கிலான்ஸ் றிபிளாண்டேசன் நடந்ததாம். இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள்?'

ஓவராப்படிச்ச பெண்டுகள் ஏதோ ஒக்ஸிடோசின் ஈஸ்டோசின் எண்டு கெட்ட வாரத்தையால வைய, நாகரட்னத்தார் இல்லை இல்லை எண்டு மண்டைய ஆட்ட எனக்கு விசரே பிடித்து விட்டது.

அடச் சே ஒரு கிளுகிளு மாட்டர இப்பிடி சப்பென்று முடிந்து விட்டாரே என்று.

ஆனால் கொள்ளிக் கண் மனுசன் நான் ஏதோ புறுபுறுப்பதை கண்டுவிட்டது.

தம்பி! என்ன சொன்னனீர்.........!

இல்ல சேர் ஒண்டுமில்ல.......!

பரவாயில்ல சொல்லும்...... நீர் சொன்னது சரி.!

இல்ல சேர்... வந்து...!

சொல்லடா கெரியன......!

இல்ல சேர்... விடா முயற்சி வெற்றி தரும் .. எண்டு....!

என்னது? விக்கித்து நின்ற மனுசன் அருகிலிருந்த டஸ்டரை தூக்கி என்மீது நக்கல் சிரிப்புடன் எறிய நான் லாவகமாகத் தப்பி ஓட பெட்டைபெடியேல்லாம் விழுந்து விழுந்த சிரிக்க... நான் முழிந்து கொண்டு நிற்க...

சேர் சிரித்துக் கொண்டு சொன்னார் 'வந்து இரடாப்பா'!..

அன்றிலிருந்து பாண்டியின் காமெடியில் வகுப்பு கலகலத்தக் கொண்டேயிருந்தது...

- புல்லட் பாண்டி

## வில்லு விஜய் எஸ் எம் எஸ் ஜோக்.....

சின்ன தம்பி படத்துல வர்ர குயிலப் புடிச்சி பாட்டை வடிவேல் அழுதுக்கிட்டே பாடறா போல பாடனும் என்ன புரிஞ்சுதா.....

குயில புடிச்சு கூண்டுல அடிச்ச கூவ சொல்லுகற உலகம்,
விஜய புடிச்சு காசு கொடுத்து நடிக்க சொல்லுகிற உலகம்.....
அது எப்படி நடிக்குமைய்யா? அது எப்படி ஒடுமைய்யா?

ஓ ஓ ஓ ஓ.....

*- ஜாக்கிசேகர்*




NAG & Co.
SOLICITORS

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line




# National Legal Services



## Wills

## Estate Planning

- Lifetime tax planning
- Life time tax planning through the use of trusts
- Making regular gifts out of income
- Utilising annual allowances
- Shared accomadation

## Client Welfare and Lasting Powers of Attorney

- Enduring / Lasting Powers of Attorney
- Court of Protection receivership
- Statutory wills

## Probate

We will take time to fully understand your particular circumstances and advise with sympathy and understanding.

Best service with your best interest in heart.

**So why not ask us for a no obligation consultation in the comfort of your own home?**

**நாம் கீழே குறிப்பிட்டுள்ள பிரச்னைகளுக்கு தகுந்த ஆலோசனை வழங்குகிறோம்.**

உங்கள் முதுமையின் நீண்டகால கவனிப்பிற்காக உள்ளூராட்சி உங்களது வீட்டினை அபகரித்தல்

எதிர்பாராத விதமாக மனநோய் பிரச்சனை ஏற்பட்டால் ஒரு நிலையான வருவாயை உண்டாகுதல்

உங்கள் பிள்ளைகளுக்கு அளவுக்கு மிஞ்சிய வருமானத்தைத் தவிர்த்தல்

உயில் இல்லாது மரணம் சம்பவிப்பதால் உண்டாகும் மன உளைவுகளையும், பணப் பிரச்சனைகளையும் தவிர்த்தல்.

அங்கவீனமான, மனநோயால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை பணப்பிரச்சனைகளிலிருந்து காப்பாற்றல்

உங்களது வாரிசுகளுக்கு இறைவரித் திணைக்களத்தினால் விதிக்கப்படும் வரிகளைக் குறைத்தல்

Call Us:

**020 8952 2410**

**National Legal Services**

150 Cheyneys Avenue
Edgware, Middlesex
HA8 6SE

t: **020 8952 2410**
m: **07931 794 809**
e: info@national-wills.co.uk
w: www.national-wills.co.uk

# ஒரு காலம் உருவாகும்

எதையும் எழுதுகிற மன நிலையில் இன்று நான் இல்லை. GTV தொலைக்காட்சியில் வன்னியின் அவலத்தைக் காட்டுகிறார்கள். சோகம் கப்பிப் போய் இருக்கிறேன். எல்லாரையும் நானாக உணர்கிறேன். எல்லாப் பிள்ளைகளையும் இவர்கள் என் பிள்ளைகளாக இருந்தால் என்று யோசிக்கிறேன். யாரும் வயதுபோனவர்களாக இருந்து அவர்கள் எறிகணை வீச்சுக்குப் பயந்து ஓடிக் கொண்டிருக்கையில் அவர்கள் என் தாய் தந்தையராக இருந்தால்.... யாவற்றுக்கும் துடித்துப் போகிறேன். அலமலர்ந்து போகிறேன். ஒன்றும் எனக்கு நிகழவில்லை. எனது நெருங்கிய உறவு என்று எவருக்கும் ஒன்றும் நடக்கவில்லை.

ஆனால் எனது நெருங்கிய நண்பர்கள் என்ற சிலர் அந்த அவலத்துக்குள் அகப்பட்டுப் போயிருக்கிறார்கள். என் நெருங்கிய நண்பன் என்ற விந்தன், கவிஞரும் நண்பருமான கருணாகரன், நிலாந்தன், மு. திருநாவுக்கரசு, புதுவை அண்ணன், முல்லைக் கோணேஸ்... இன்னும் பெயர்கள் இருக்கின்றன. வெறும் பெயர்களாக அல்ல. உயிர்களாக இருக்கின்றனர். இவர்கள், இவர்களில் யாரும் குடும்பத்துக்கு ஏதும் நிகழ்ந்து விடுமா?

**மார்க்சியம், மாஓசிசம், காந்தியம், அகிம்சாவாதம், ஜனநாயகம் ஆகிய எந்தச் சொல்லும் எங்கள் வாழ்வுக்கு எந்த அர்த்தமும் தரவில்லை. வதைபுரியவே பயன்படுகின்றன.**

இவர்கள் எனக்குத் தெரிந்த முகங்கள் என்பதனால் துடிக்கிறேன். தெரியாத ஐந்து லட்சம் மக்களையும் எம் தமிழ் உறவுகள் என்ற வகையில் துடிக்கிறேன்.

இங்கு என்னுடன் பணி புரிகின்ற கமலினி, மோகனா இருவரும் வன்னியைச் சேர்ந்தவர்கள். கமலினி, மோகனா இருவரினதும் பெற்றோர் சகோதரர்கள் வன்னியில். அவர்களுக்கு என்ன நடந்ததோ ஏது நடந்ததோ என்று இருவரும் ஒவ்வொரு நாட் காலையிலும் அங்கலாய்க்கிறார்கள். அவர்கள் முகத்தைப் பார்க்க என்னால் முடியவில்லை. அவர்களுக்கு எப்படி ஆறுதல் சொல்வது? எதை ஆறுதலாகச் சொல்வது?

இப்பொழுது எல்லாம் இரவுகளில் நித்திரை வருவதில்லை. வந்தாலும் ஒரே நீட்டுக்கு கனவுகள். தொடர்ந்த கனவுகள். கனவுகள் என்றால் சிங்களப் படைகள் துரத்துகிற கனவுகள். சாவுக்குப் பயந்தோடுகிற கனவுகள். என் சாவுக்கு மாத்திரமல்ல எல்லோரின் சாவுக்குமாகப் பயந்தோடுகிற கனவுகள். விடிகிற வரை கனவுகள்

எங்கள் நாட்கள் நாசமாகிப் போகின்றன கருகிப் போன பொழுதுகள். புன்னகை இல்லாத முகங்கள். தெரிந்த முகத்தைக் கண்டாலும் கைத்துப்போன புன்னகை. 'பாலும் கசந்ததடி சகியே படுக்கை மிக நொந்ததடி' என்ற பாரதியாரின் வரி ஒன்று உண்டு எமக்கும் உணவும் உள்ளே செல்ல மறுக்கிறது. எல்லாம் கசப்பாக இருக்கிறது.

என் பற்றிய புலம்பல் எதற்கு இங்கு? இறந்த உறவுகளையும் கைவிட்டு விட்டு தம் உயிர் காக்க ஓடுகிறார்கள் வன்னியில் மக்கள். உயிரற்ற உடல்களை அடக்கம் செய்யக் கூட உயிர்ப் பயம் விடவில்லை. வீதியோரங்களிலும் பற்றைகளிலும் உடலங்கள் கிடக்கின்றன.

மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன என்று சொல்ல முடியவில்லை. இருந்த இரண்டு மருத்துவமனைகளும் சிதைந்து போயிற்று. காயம் பட்டோர் ஆயிரக்கணக்கில். காயம் என்றால் சும்மா காயம் அல்ல. அவையங்களை இழந்த காயமும் அல்ல. உயிர் போகிற காயம். மருந்திட முடியாமலே உயிர்கள் மடிகின்றன.

உலகங்கள் யாவுமே எங்களை கைவிட்டு விட்டன. இதுதான் நிலமை. இதுதான் யதார்த்தம். இந்த இடத்தில் நாங்கள் எங்களை மாத்திரமே நம்பியாக வேண்டும். உலகில் எட்டுக்கோடி தமிழர்கள் இருக்கின்றனர். அது ஒன்றே எங்களது பலம்

## இரவி அருணாசலம்

### எழுதுவது என்னவெனில்

புதிய ஜனநாயகப் புரட்சி புரிந்த மகத்தான தலைவர் என்று நாங்கள் நம்பிய மாசே துங்கின் மக்கள் சீனம் எங்கள் மக்களைக் கொல்ல ஆயுதங்களை அள்ளி வழங்குகின்றது.

மகாத்மா என்று எங்கள் மக்கள் வணங்கிய காந்தியின் இந்தியா, ஈழத் தமிழ் மக்களை கொத்து கொத்தாய் அழிக்கிறது.

மார்க்சியம், மாஓசிசம், காந்தியம், அகிம்சாவாதம், ஜனநாயகம் ஆகிய எந்தச் சொல்லும் எங்கள் வாழ்வுக்கு எந்த அர்த்தமும் தரவில்லை. வதைபுரியவே பயன்படுகின்றன.

இவற்றினிடையே ஊடகவியலாளர் எனப்படுவோர் தம் சுதந்திரம், தம் ஜனநாயகம் பற்றியே பேசிக்கொண்டு இருக்கிறார்கள். மக்களின் சிதைவு, அழிவு பற்றி எந்த அக்கறையும் அற்றவர்களாக இருக்கிறார்கள். சுதந்திரப் போராளிகளான விடுதலைப்புலிகளையும் கொலைவெறி மிக்க இனவாத அரசான சிங்கள அரசையும் ஒரே தராசிலேயே நிறுக்கப் பார்க்கிறார்கள் இந்த ஜனநாயக ஊடகவியலாளர்.

சமீபத்தில் கொல்லப்பட்ட ஜனநாயக ஊடகவியலாளரான சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமசிங்க 'விடுதலைப் புலிகள் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டியவர்கள்' என்று எழுதுகிறார். இந்த லசந்த விக்கிரமதுங்க என்ற இனவாத ஜனநாயக ஊடகவியலாளருக்கு ஒரு தொலைக்காட்சி அஞ்சலி நிகழ்ச்சி நடாத்துகிறது. அதில் சில ஜனநாயக ஊடகவியலாளர்கள் சிங்கள இனவாத அரசையும் விடுதலைப் புலிகளையும் ஒரே தராசில் நிறுத்து விட்டுப் போகிறார்கள்.

இவர்களை விடுவோம். தமிழர் என்ற ஒரே ஒரு உணர்வுதான் எங்களது பலம். அதனை நாங்கள் கட்டி வளர்ப்போம். தமிழ்நாட்டில் இப்போது சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கிறார்களே தமிழ் மாணவர்கள். அவர்களிடம் இருப்பது தமிழன் என்ற உணர்வு ஒன்றுதான். நாம் தமிழர் என்று அனைவரும் ஒன்று திரள்வோம். அதுவே நமது வெற்றிக்கு வித்தாகும்.

'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தனர்.
இங்குள்ள தமிழர் ஒன்றாகக் கண்டே'

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

### நீர்த்தேக்கம்

நீர்த் தேக்கம் என்ற சொல், ஓடும் ஆற்றுக்கு அணை கட்டி நீரைத் தேக்கும் நீர் நிலைகளைக் குறிக்கும் சொல். ஆறு ஓடும் பாதையில் இவற்றின் அணைகள் கட்டப் படுவதால் அணைக்குக் கீழே உள்ள நிலங்கள் நிச்சயம் அணை உள்ள இடத்தைவிடப் பதிவானவையாகவே அமையும். இதனால் தேக்கிய நீரை வாய்கால்கள் மூலம் தேவைக்கொப்ப அதற்கென்று அமைக்கப்பட்ட கதவுகள் ஊடாகத் திறந்து வழங்கலாம். இவற்றை குளம் என்றும் கூறலாம், மழை காலத்தின்போது நிரம்பும் பள்ளங்களையும் நாம் குளம் என்று அழைக்கும் வழமை உள்ளதால் சில வேளைகளில் சிறிது தெளிவின்மை உருவாகலாம். ஆனாலும் பரவலாக நீர்த் தேக்கங்கள் குளம் என்ற சொல்லுடன் இணைத்தே அழைக்கப் படுகின்றன. எடுத்துக்காட்டிற்கு இரணைமடு நீர்த்தேக்கம் இரணைமடுக் குளம் என்றே அழைக்கப் படுகிறது.

ஒரு குளத்தின் நீர் கொள்திறன் அதன் அணைக் கட்டின் உயரம், நீர் தேங்கி உள்ள பரப்பளவு ஆகிய இரண்டினதும் அடிப்படையிலேயே அமைகிறது. நீரின் அளவை ஏக்கர் அடியிலும் சொல்லலாம் கன மீட்டரிலும் சொல்லலாம். ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு அடி உயரத்திற்கு நிற்கும் நீரின் அளவுதான் ஒரு ஏக்கரடி. ஒரு மீற்றர் நீளம், ஒரு மீற்றர் அகலம், ஒரு மீற்றர் உயரம் கொண்ட நீரின் அளவுதான் ஒரு கன மீற்றர். அதாவது ஆயிரம் லீற்றர். இரண்டு அலகுகளையும் மாறி மாறி உபயோகிக்காது நான் ஏக்கர் அடி என்ற சொல்லை மட்டுமே இனிப் பயன் படுத்துவேன். ஒரு ஏக்கரடி 1233 கன மீற்றர் என்பதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

அணை உயர நீரின் அளவும் கூடும். ஆனால் அணையின் உயரம் பல தரவுகளின் அடிப்படையில்தான் நிர்ணயிக்கப் படுகிறது. உயரம் கூடுவதால் அணைக்கு மேலே உள்ள விளை நிலங்களை கிராமங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். தேவையற்று அணையை உயர்த்தவும் தேவையில்லை.

இலங்கையின் பாரிய நீர்த் தேக்கமான சேனநாயக்க சமுத்திரம் (கல் ஓயாக் குளம்) 7,70,000 ஏக்கரடி நீர் கொள்ளக் கூடியது. 88 அடி உயரம் வரை நீரைத் தேக்கலாம். அதாவது நீர் விநியோகம் செய்யும் கதவின் அடிமட்டத்திலிருந்து நிறைந்த பின் நீர் வழிந்தோட அமைக்கப்பட்டிருக்கும் வானுக்கும் இடையில் 88 அடி உயர வேறுபாடு உண்டு.

இரணைமடுக் குளத்தை எடுப்போமானால், அதுவும் ஒரு பாரிய நீர்த் தேக்கம்தான். அதன் கொள் திறன் ஒரு இலட்சம் ஏக்கரடி. உயரம் 29 அடி. ஒரு ஏக்கர் நெற்பயிர்ச் செய்கைக்கு 6 ஏக்கரடி வரையிலான நீர் தேவைப்படும். இதனால், ஒரு இலட்சம் ஏக்கரடி நீர் கொண்ட இக்குளம் 15 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான வயல்களை தனக்குக் கீழே கொண்டுள்ளது.

அண்மையில் உடைந்த கல்மடுக் குளம் ஒரு சிறிய நீர்த் தேக்கம். அதன் கொள்திறன் 3,000 ஏக்கரடி மட்டும்தான். அதன் கொள் திறன் எவ்வளவு என்ற தெரியாததால் பலர் ஆயிரக் கணக்கில் ஆட்களை அந்த நீர் அடித்துச் சென்றிருக்கும் என்று நம்பினார்கள். அந்தச் சம்பவத்தின் போது எத்தனை பேர் இறந்தார்கள் என்பது வேறு கதை. ஆனால் நீரால் அடிக்கப்பட்டோர் தொகை குறைவு.

அடுத்ததாக மன்னாரில் உள்ள கட்டுக்கரைக் குளம் சற்று வித்தியாசமானது. கூடுதல் பரப்பளவைக் கொண்டது. குறைந்த உயரம் கொண்டது. கொள் திறன் நாற்பது ஆயிரம் ஏக்கரடிதான். ஆனால் இரணைமடுவுக்குப் போட்டியாக 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட வயல்களுக்கு நீர் வழங்குகிறது. அது எப்படிச் சாத்தியப் படுகிறது? அதற்கு நீர் வளம் அளிக்கும், மல்வத்து ஓயா என்று சிங்களப் பகுதிகளில் அழைக்கப் படும் அருவி ஆறுதான் காரணம். வற்றாத ஆறான அது பயிர்ச் செய்கையின்போது ஐந்துக்கு மேற்பட்ட கதவுகள் வழியாகத் திறந்து வழங்கப்படும் பாரிய அளவான நீரை ஈடு கட்டும் வகையில் குளத்துக்குள் நீரைச் செலுத்திக் கொண்டே இருக்கும். கட்டுக்கரைக் குளத்திற்கு கீழேயும் நூற்றுக்கு மேற்பட்ட சிறு குளங்கள் உள்ளன. இவையும் கணிசமான நீரைச் சேமிக்க வல்லவை. இந்தப் பகுதியின் இன்னொரு சிறப்பு கிளிநொச்சியில் இரண்டு ஏக்கர் நிலம் தரும் விளைச்சலை இங்குள்ள ஒரு ஏக்கரிலிருந்தே பெறலாம். அவ்வளவுக்கு நெற் செய்கைக்கு ஏற்ற வளம் கொண்ட களி மண் நிலம் இங்குள்ளது.

**யா கரவட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பழையமாணவா சங்கம் (பிரித்தானியக் கிளை)**

**வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்**

எதிர்வரும் **8ம்** திகதி மாசி மாதம் **(08/02/09)**
**பி.ப 3** மணிக்கு வருடாந்த பொதுக்கூட்டமும்
புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெற உள்ளது.
பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன்
அழைக்கிறோம்

**மேலதிக விபரங்களுக்கு:**
- வே.லீலாரத்தினம் - 0787 9400533
- இ.பத்மசிறீ - 0793 9456143
- ஈ.இராசேஸ்வரி 0774 3663149
- சி.கர்ணன் 0790 8207513
- ஜெ.கேசவன் 0774 7606203

# வவுனியாவில் புளொட்டின் வதை முகாம்

சாந்தி ரமேஷ் வவுனியன்
(ஒரு பேப்பருக்காக)

வவுனியா கோவில் குளத்தில் உமாமகேஸ்வரன் வீதியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) இரகசிய வதை முகாமொன்றைப் பாதுகாத்து வருகின்றனர்.

கோவில் குளம் பகுதியில் உள்ள சிவன் கோவில் நிர்வாகத்தினர் ஆதரவற்ற பெற்றோரை இழந்த சிறுவர்களைப் பராமரிக்கும் ஆதரவில்லம் ஒன்றை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கோவிலின் பின்பக்க மதிலுக்குப் பின்னால் அமைந்திருக்கும் இவ்வதை முகாமானது புளொட் இயக்கத்தினரால் இரகசியமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் புளொட் இயக்கத்தின் மயானம் அமைந்துள்ளது. இம்மயானத்தில் வருடாவருடம் தமது இயக்கத்தினரின் நினைவுநாள் மற்றும் தங்களின் நிகழ்வுகளை நடாத்தி வருகின்றார்கள். இங்கு ஆறு முதல் பத்துவரையான தனித் தனி அறைகள் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வறைகள் றெயில் தண்டவாளங்களால் பலமானதாக அமைக்கப்பட்டு வெளியில் யாரும் காணாத முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தற்போது வவுனியா மாவட்டப் பொறுப்பாளராக உள்ள சூரி என்பவரின் கவனிப்பிலேயே இம்மனித வதைமுகாம் இயங்கி வருகிறது. இவ்வதை கூடத்தோடு ஒட்டி நவீன வசதிகளுடன் சூரிக்கான பாதுகாப்பறை அலுவலகமும் அமைக்கப்பட்டுள்ளது. வெளியில் உலாவும் நேரங்கள் தவிர சூரி அதிகம் இருப்பது இந்த நவீன வசதிகள் மிகுந்த அறையில் தான்.

புளொட்டால் கடத்தப்படும் நபர்கள் முதலில் ஒருவாரம் முதல் 10 நாள் வரையில் இவ்வதை முகாமில் தடுத்து வைக்கப்படுவார்கள். இங்கு கடத்தி வரப்படுவோர் புலிகளின் பகுதிக்குள்ளிருந்து வந்து வவுனியாவுக்குள் குடியேறியோர், மற்றும் கப்பம் கேட்டுக் கடத்தி வரப்படுவோர் போன்றோரரே இங்கு சித்திர வதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். புலிகள் எனச் சந்தேகிப்போர் எனப் புளொட்டினரால் பிடிக்கப்படும் பலர் இவ்வதை முகாமில் கொல்லப்பட்டும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் வருகின்றனர்.

வதை கூடத்திற்குக் கொண்டு வரப்படும் கைதிகள் முதலில் ஆடைகள் உரியப்பட்டு நிர்வாணப்படுத்தப்படுவார்கள். இரண்டு கைகளின் பெருவிரல்களும் சணல் போன்றதொரு நூலால் பலதரம் சுற்றிக் கட்டப்படும். பின்னர் விரல்களைப் பின்னிய நூலின் முடிச்சுக்குள் நைலோன் கயிற்றைச் செருகிக் கட்டி கால் விரல்கள் நிலத்தில் பட்டும் படாமலுமாக அங்கு பொருத்தப்பட்டிருக்கும் இரும்புகளில் கட்டித் தொங்க விடப்படுவார்கள். பெற்றோல் நிரம்பிய சொப்பிங் பை முகத்தில் கட்டப்பட்டு கிறிக்கெட் விக்கெட் கட்டைகள், இரும்புக் கம்பிகள் போன்றவற்றால் கிட்டத்தட்ட அரை மணிநேரம் தாக்கப்படுவார்கள். கைதி தனது சுயநினைவை இந்த அரைமணிநேரத்தில் இழந்துவிடுவா(ள்)ன். தினமும் இந்த வதை தொடரும். புலியுடன் தொடர்பு உண்டென கைதி ஒத்துக் கொள்ளும் வரை இது தொடரும்.

புலியென்று வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் 7-10 நாள் கழிந்த பின்னர் இவர்கள் இராணுவ புலனாய்வுத் துறையினரிடம் கையளிக்கப்படுவார்கள். இராணுவப் புலனாய்வாளர்களின் கையில் போய் சேர முதலே பலர் இந்த வதைமுகாமில் செத்துவிடும் சம்பவங்களும் அதிகமாக நடைபெறுகிறது. இங்கிருந்து இராணுவப்புலனாய்வாளர்களின் கையில் போய்ச் சேர்ந்தால் நிலக்கீழ் அறைகளில் அடைக்கப்பட்டு வதை தொடரும். ஓர் இருண்ட உலகின் வாழ்வு போலானதொரு நிலமையில் கைதிகள் வதைபடுவார்கள். அங்கும் விசாரணை செய்ய வருவோர் இந்தப் புளொட் கும்பலும் மற்றும் புலனாய்வாளர்களும் தான்.

சில சமயம் இம்முகாமுக்கு பொலிசார் வருகிறார்கள் என அறிந்தால் உடனடியாக கைதிகள் வெளிக்கொண்டு வரப்பட்டு தடயங்கள் எதுவுமின்றி ஆடைகளை அணிவித்து சென்றிகளுடனும் மற்றும் புளொட் உறுப்பினர்களுடனும் அவர்களின் ஆட்கள் போல் மாற்றி விடப்படுவார்கள். பொலிசின் வருகையை இவர்களுக்கு அறிவிக்க பொலிசாருக்குள் ஆட்களை வைத்திருக்கிறார்கள்.

வவுனியாவிலுள்ள சகல வர்த்தகர்களும் கட்டாயமாக புளொட்டிற்கு மாதந்தக் கப்பம் வழங்க வேண்டும். மாதாந்தம் குறைந்தது ஆயிரம் ரூபா முதல் பதினையாயிரம் ரூபா வரையில் பெறப்படுகிறது. மாதாந்தம் அனைவரும் புளொட்டின் முகாமுக்குச் சென்று பணத்தைக் கட்ட வேண்டும். பணம் செலுத்தப் போகின்றவர்கள் வெளியில் புளொட் முகாம் பற்றிய எந்தத் தகவலையும் வெளியிடக்கூடாது. அப்படி நிகழின் அவர்களுக்குச் சாவு நிச்சயமாகும்.

கப்பம் செலுத்தத் தவறுவோர் ஏதாவது ஒரு காரணம் சொல்லிக் காணாமற் போவார்கள் அல்லது கொல்லப்படுவார்கள். அச்சம் காரணமாக வர்த்தகர்கள் முதல் தனிமனிதர்கள் வரை கப்பம் செலுத்துவது வவுனியாவில் வாடிக்கையாகியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சக்தி தொலைக்காட்சியின் மின்னல் நிகழ்ச்சியில் அந்நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திரு.ரங்கா அவர்கள் வுனியாவில் புளொட் கட்டாயப்படுத்தி வாங்கப்படும் கப்பம் பற்றி கேட்ட கேள்விக்கு சித்தார்த்தன் கூறியிருந்தார், தமக்கு வர்த்தகர்கள் அன்பளிப்பாகப் பணம் தருவதாக. ரங்கா அடுத்தடுத்த கேள்விகளை சித்தார்த்தன் தடுக்கி விழாதபடிக்கு கேட்டிருந்தார் என்பது வேறு கதை.

தொலைபேசி ஊடாக மிரட்டிக் கப்பம் பெறுவதும் இக்கூட்டத்தினால் அதிகமாக நடைபெற்று வருகிறது. நேரடியாகத் தமது பெயரைப் பாவிக்காமல் தொலைபேசியில் கருணா குழு சீலன் என்ற பெயரில் வெளிநாட்டிலுள்ளவர்களிடம் மற்றும் வியாபாரிகளிடம் நாற்பது ஐம்பது லட்சமெனப் பெற்றுக் கொள்கிறார்கள். கருணா குழுவினரே கப்பம் கேட்பதுபோன்றதொரு மாயையை உருவாக்கி இவர்களே இந்நாடகத்தை நடாத்துகிறார்கள்.

கருணாகுழுபோலஒருபுறம்நடந்துகொண்டு மறுபுறம் புளொட் குறைந்த தொகையைப் பெறுவது போன்றதொரு தோற்றத்தை உண்டாக்கியுள்ளார்கள். புளொட் என்ற உறுதியுடன் கப்பம் கேட்கும் போது தொடர்புபட்டவர்களை தமது முகாமுக்கு அழைத்துப் பேசி பெரிய தொகை இல்லையென்போரிடம் பத்து எட்டு ஏழு ஆறெனக் குறைத்துத் தருகிறோம் என்பவர்களிடமிருந்து பெறப்படுகிறது. இத்தகைய நேரில் அழைத்துப் பேசுதல் கருணாவைவிட நாங்கள் நல்லவர்கள் பேசித் தீர்த்து மக்களின் நிலமையைப் புரிந்துள்ளோம் என்ற தோற்றப்பாட்டை மக்கள் மத்தியில் பரப்பி விடுகின்றனர்.

இத்தொலைபேசி மிரட்டல்களுக்கு மிரளாமல் யாராவது முரண்டுபிடித்தால், நீ புலி இதோ உனது வீட்டுக்கு யோசெப் முகாமிலிருந்து வாகனம் வருகிறது வா விசாரணை என மிரட்டுகின்றார்கள். மற்றும் இவர்களால் கொல்லப்பட்டவர்களின் பெயர்களைச் சொல்லி அதே நிலைதான் உனக்கும் நடக்கும் என்ற மிரட்டலில் இருப்பதைக் கொடுத்துவிட்டு வாழுவோம் என்ற நிலையில் இன்று வவுனியா மக்கள் உள்ளார்கள். செத்தவர்களின் பெயர்களையும் அவர்களுக்கு நிகழ்ந்த கொரூரங்களையும் அறிந்தவர்கள் அவர்கள் கேட்கும் தொகையை தங்களை அடமானம் வைத்தாவது கொடுத்து விடுகிறார்கள்.

கருணா குழுவினர் யோசெப் முகாமுக்கு கடத்திச் செல்வது தொலைபேசியில் மிரட்டி யோசெப் முகாமுக்கு அழைத்துக் கப்பம் பெறுகிறார்கள். பெரிய முதலாளிமாரைக் கடத்திக் கப்பம் வாங்குகிறார்கள். ஒரு சிலரை மட்டக்களப்பில் கொண்டு போய் கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள். பலரது நிலமை இதுவரையும் வெளியில் தெரியாத மர்மங்களாகவே இருக்கின்றது.

ஆண்கள் வெளிநாட்டிலிருந்தால் தலைக்கு ஒரு லட்சம் ரூபாவும் பெண்களென்றால் ஐம்பதாயிரம் ரூபா என்ற முறையில் பெறப்படுகிறது. ஒரு வீட்டில் 3 பிள்ளைகள் (வெளிநாட்டில்) என்றால் தலைக்கு அவர்கள் நிர்ணயிக்கும் தொகையைக் கட்டாயமாக் கொடுத்தே ஆக வேண்டும். அரச உத்தியோகம் மற்றும் மாதாந்த வருமானம் உள்ளவர்கள் யாவரும் பத்தாயிரம் முதல் ஐம்பதினாயிரம் வரை செலுத்தும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

வவுனியாவிற்குள் இனி எந்த இயக்கத்தாலும் பிரச்சனை வராது நாங்களே இங்கு எல்லாம் எனவும் வவுனியாவின் காவலர் புளொட் மட்டுமே என்ற தோற்றப்பாட்டை நிலைநிறுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருகிறது.

வவுனியாவில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சங்கங்கள் புளொட்டினால் அமைத்து மக்களை ஏமாற்றுகிறார்கள். (தனியார் வர்த்தக சங்கம், ஓட்டோ நடத்துனர் சங்கம் என பல சங்கங்களை உருவாக்கியுள்ளார்கள். இச்சங்கள்கள் மூலமாகவும் பெருந்தொகையான பணத்தைக் கறக்கின்றார்கள். மேற்படி சங்கங்களின் செயற்பாட்டாளர்களின் அச்சுறுத்தலுக்குப் பயந்து கேட்பதை கேட்கும் நேரமெல்லாம் கொடுக்க வேண்டிய நிலையில் தாம் இருப்பதாக வர்த்தகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களின் வதை முகாமில் 10நாட்களுக்கு மேலாக சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு இராணுவப்புலனாய்வுத் துறையினரிடம் 4 மாதங்கள் நிலக்கீழ் அறைகளில் துன்புறுத்தப்பட்டு வெளிவந்த சிலரது அனுபவங்கள் உயிரை உறைய வைக்கும் அனுபவங்களாகக் கிடைத்துள்ளது.

புலம்பெயர்நாடுகளில் சுகபோக வாழ்வு வாழ்ந்தபடி புளொட்டின் சர்வதேசத் தலைவர்கள் மாற்றுக்கருத்து மாணிக்கங்கள் புலி வருது புலிவருது மனித வதை புலி செய்கிறது எனப் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் ஐரோப்பாவிலிருந்து ஒரு புளொட் பினாமி வவுனியா சென்று திரும்பியுள்ளது. இந்தப் பினாமி கோவில் வீதி வதை முகாமிலும் இருந்து வந்திருப்பது மட்டுமில்லாமல் அங்கிருந்து அகில உலகத்துக்கும் அறிக்கையும் விட்டிருந்தது. பூந்தோட்டம் அகதி முகாமுக்கு விசிட் அடித்த இந்த மாற்றுக் கருத்து மாணிக்கம் தனது குழுவின் வதை முகாமை ஏன் பார்க்க மறந்தது?

இந்தத் கொலைகாரர்களிடமிருந்து தப்பிக்க முடியாமல் வதைமுகாமில் வதைபடும் தமிழ் இளைஞர்களை இவர்கள் மீட்பார்களா?

உலகில் எங்கோ யாருக்கோ நிகழும் அவலம் பற்றியெல்லாம் அக்கறைப்படும் இந்தத் துரோகிகள் உள்வீட்டுக் கொலைக்கதவுகளை எப்படி எதிர் கொள்ளப் போகிறார்கள்?

வவுனியாவில் நீதிமன்றம், காவற்துறை, சட்டம், சட்டமா அதிபர்கள் என நீதியைக் கொடுக்க வேண்டிய யாவரும் இருந்து கொண்டும் இத்தகைய வதைமுகாம்களை ஏன் இன்னும் பாராமுகமாய் விட்டுள்ளனர்?

மாணிக்கதாசன் காலத்தில் பிரபலமாகியிருந்த வதைமுகாம் சித்தார்த்தன் காலத்தில் புனர்நிர்மாணமாகியிருப்பது இன்னும் தமிழ் இளைஞர்கள் யுவதிகளின் உயிர்களை எடுக்கத்தானோ?

இளஞ்செழியன் வவுனியாவில் இருந்த போது சற்று குறைந்திருந்த மனிதவதை தற்போது மிகவும் மோசமாகியுள்ளது. இந்தக் கிட்லரின் வழி வரும் புளொட்டின் வதை முகாமை இளஞ்செழியன் பலதரம் எச்சரித்ததும் திடீர் திடீரென காவல்துறையை அனுப்பி கைது செய்வித்து நீதிமன்றுக்கு இழுத்ததில் கொஞ்சம் அடங்கியிருந்த வதைகளம் மீளவும் மோசமாகியுள்ளது.

இந்தக் கொலைகாரர்களால் இவர்களது வதை முகாமில் வதைபட்ட சிலர் ஐரோப்பாவுக்கு வந்து சேர்ந்துள்ளனர். அவர்களின் வாக்கு மூலங்களுடன் ஐரோப்பிய நீதிமன்றுக்கு இந்தக் கும்பலை அழைக்கும் நாளும் தூரத்தில் இல்லை. ஐரோப்பிய நாட்டு வதிவிட உரிமையுடன் இலங்கைக்குச் சென்று வரும் இக்கும்பலின் சர்வதேசத் தலைகளாக இயங்கும் கூலிகளை வரைவில் அந்தந்த நாட்டுச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். ஒரு நாட்டின் பிரஜை இன்னொரு நாட்டின் கொலைக்கும்பலுடன் தொடர்பைப் பேணுவது உதவுவது சர்வதேசச் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

**THURAI & CO ACCOUNTING**
Comprehensive Accounting & Tax

Personal Tax
Corporation Tax
Value Added Tax
Capital Tax
Business Advice

☎ 01865 247 109
தரமான சேவை
நியாயமான கட்டணம்!

9A, Arnold Road, Oxford, OX4 4BH

# அம்மாளாச்சி வருத்தம்

கடந்தது நடந்தது

எழுதியவர்: கே.எஸ். பாலச்சந்திரன்

எனக்கு சற்றே மீசை அரும்பிய காலம். மீசை அரும்பியதை கண்டுபிடித்ததே என் வகுப்பு நண்பர்கள் தான். நாங்கள் பள்ளிக்கூடத்தில் தண்ணீர் குடிக்கும் பைப்பில் குனிந்து கையேந்தி நீர் குடித்து நிமிரும்போது, ஈரமான மேலுதட்டில் படிந்த 'பிஞ்சு' க் கேசங்களின் தொகுப்பு அவர்களுக்கு காட்டிக் கொடுத்து விட்டது.

"டே.. இவனுக்கு மீசை வந்திருக்கடா.." என்று கூச்சலிட்டார்கள்.

அவசரமாக உதட்டின் ஈரத்தை துடைத்துக் கொண்டாலும், அதை உறுதிப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடனேயே வீட்டுக்கு செல்லும் நேரத்தை எதிர்பார்த்து காத்திருந்தேன். பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டுக்கு போனதும், முதல் வேலையாக அறைக்குள் இருந்த கண்ணாடியில் பார்த்தேன். அவர்கள் சொன்னது உண்மைதான். வியர்த்திருந்த மேல் உதட்டில் மங்கலாக தெரிந்தது.

அதற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக எனது நடை, உடை, பாவனைகள் மாறிக் கொண்டே போயின. கண்ணாடிக்கு முன்னால் அதிக நேரம் செலவழித்தேன். சினிமாப் புத்தங்களில் நடிகர்களின் உடுப்புகளில், சிகையலங்காரங்களில் எனது கவனம் சென்றது.

இரட்டைப் பின்னல் ஈஸ்வரியின் அண்ணன் எனக்கு நண்பனாகிப் போனான். காரணங்களை உருவாக்கிக் கொண்டு அவனிடம் அடிக்கடி போனேன். விறாந்தையில் இருந்த கதிரைகளில் இருந்து படிப்பு, கிரிக்கெற் என்று பலவற்றையும் கதைத்தோம்.

ஒரு மெல்லிய உருவம் அறைக்கும், குசினிக்குமாக நடைபோடுவதை கண்டாலும் காணாததுபோல பாவனை செய்தேன். எப்பொழுதாவது அரிதாக ஒரு புன்னகை என் பக்கம் வீசப்படுவதை எதிர்பார்த்து காத்திருந்தேன்.

(என்ன இது.. அம்மாளாச்சி வருத்தம் என்று விட்டு எதையெல்லாமோ சொல்கிறீர்களே.. என்று யோசிக்கிறீர்களா? கவலையை விடுக)

எங்கள் ஊரில் பொக்குளிப்பான், சின்னமுத்து போன்ற நோய்கள் வந்தால் 'அம்மாளாச்சி வருத்தம்' வந்து விட்டதாகச் சொல்வார்கள். இந்த வருத்தங்கள் வந்துவிட்டால், நோயுற்றவர்களை மற்றவர்களுக்கு தொற்றாவண்ணம், ஒதுக்குப்புறமாக விட்டு விடுவார்கள்.

நான் முன்னர் குறிப்பிட்ட நாட்களில், எனக்கு 'அம்மாளாச்சி வருத்தம்' எப்படியோ வந்து விட்டது. எங்களுக்கு பழைய வீடு ஒன்றிருந்தது. ஓலையால் வேய்ந்த வீடு, குளிராகவிருக்கும் என்பதோடு யாரும் அங்கு இருப்பதில்லை என்பதாலும் என்னை அங்கே படுக்க விட்டார்கள். எனக்கு துணையாக அம்மம்மா அங்கே இருந்தா.

வெய்யில் காலத்தில் உடம்பெல்லாம் தீப்பற்றி எரிவதுபோல இருக்கும். சில நாட்கள் அம்மம்மாவின் வேப்பிலை விசிறலால் சற்று ஆறுதல் கிடைக்க, அங்கே படுத்திருந்தேன்.

நோயின் சின்னங்கள் முற்றாக மாறிய பின்னர் குறிப்பிட்ட நாட்கணக்கில் முழுக்கு, குளிப்பு - அதுவும் எங்கள் ஊர் அம்மன் கோயிலின் அருகிலுள்ள வயற்கிணற்றில் அதிகாலையில் தான் நடக்கும்.

இவையெல்லாம் நிறைவேறிய பின்னர், அம்மா ஒரு குறிப்பிட்ட நாளில் காலையில் முழுகி, விரதமிருந்து எங்கள் உறவினர் வீடுகளின் வாசல்களில் நின்று, 'அம்மாளாச்சிக்கு பிச்சை போடுங்கோ' என்று மடிச் சீலையில் அரிசி முதலானவற்றை தானமாகப் பெற்று (மடிப்பிச்சை என்று சொல்வார்கள்), அவற்றை கொண்டுபோய் அம்மன் கோயிலில் பொங்கிப் படைத்து, அம்மனைக் கும்பிட்டு வருவதாக ஏற்பாடு. இதுவே வழக்கம்.

இதற்கு இரண்டு மூன்று நாட்கள் இருந்தன. நோய் காரணமாக நீண்ட நாட்களாக எங்குமே போகாதது அலுப்பாகவிருந்தது. உடம்பில் சிறிது பலம் வந்தபின் ஒருநாள் 'அவர்கள்' வீட்டிற்கு போகவேண்டுமென்ற 'தவனம்' (விருப்பம்) வந்தது.

அதற்கு அம்மாவிடமிருந்தோ, அம்மம்மாவிடமிருந்தோ அனுமதி கிடைக்காது என்று நிச்சயமாகத் தெரியுமாதலால், சற்று இரவாகிய பின்னர், அம்மம்மா உறங்கிய பின்னர் ரகசியமாகப் போவதாகத் தீர்மானித்து படுத்திருந்தேன்.

அன்றைக்குப் பார்த்து அம்மம்மாவுக்கு உறக்கம் வரவில்லை. ஏதோ கதைகள் சொல்லிக் கொண்டேயிருந்தா. வழக்கத்தில் அவவின் சுவையான கதைகளுக்கு, 'ம்' கொட்டிக்கொண்டு சுவாரஸ்யமாக கேட்டுக் கொண்டிருப்பேன். உண்மையில் அவை சுவாரஸ்யமானவைதான்.

ஆனால் அன்று எனக்கு இருந்த மனநிலையில், மூச்சும் விடாமல் படுத்திருந்தேன். என்னிடமிருந்து எந்தவிதமான அசுகையும் (பதில் - அசைவு) இல்லாத நிலையில், அவ நான் உறங்கி விட்டேன் என்று நினைத்திருக்க வேண்டும். எனது நோயின் ஆக்கல், சுகப்படுத்தல் இரண்டினுக்கும் பொறுப்பாக இருப்பதாக நம்பும் 'அம்மாளாச்சி'யை ஒருமுறை அழைத்துவிட்டு உறங்கப் போய்விட்டா.

மெதுவாக எழுந்து, நான் படுத்திருந்த இடத்தில், தலையணையை நீட்டுக்கு வைத்து, போர்த்து விட்டு, இதற்காகவே பகலே எடுத்து வைத்திருந்த சேர்ட்டைப் போட்டுக் கொண்டு முற்றத்தில் கால் வைக்க, கும்மிருட்டாக இருந்தது. நேரம் என்னவென்று தெரியவில்லை.

தூரத்தில் எங்கோ, 'டாங்..டாங்' என்று பன்னிரண்டு முறை அடித்து ஓய்ந்தது. நேரம் நடுச்சாமமாகி விட்டது என்பதை அது உணர்த்தியது. துப்பறியும் கதைகளில் வரும் சங்கதிகள் ஒன்றும் எங்கள் குக்கிராமத்தில் இல்லை, யாராவது ஒழுங்காகப் படிக்கின்ற பிள்ளைகளின் வீடுகளில், 'கிர்ர்ர்' என்று ஒலியெழுப்பும் சின்ன 'அலாரம் மணிக்கூடு', அதுவும் அரிதாகத் தான் இருக்கும்.

முற்றத்தில் நின்றுகொண்டு நேரத்தை யூகிக்க முனைந்த நான், சாமத்தை அண்மித்துக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து, அன்றைய திட்டத்தை கைவிட்டு, வீட்டிற்குள் திரும்ப ஒருகணம் நினைத்தாலும், நெஞ்சுக்குள் இருந்த 'குட்டிப்பிசாசு' போகச் சொல்லி ஏவியது.

**தமிழ்த் திரைப்படங்களில் நடிக, நடிகையரின் உருவத்திலிருந்து மனச்சாட்சி பிரிந்து புறப்பட்டு, வேறாக நின்று, வாதாடுவதாகக் காட்டுவார்களே.. அதுமாதிரி மனதிற்குள் பட்டிமன்றம் நடந்தது.**

இருளுக்குள் நடந்து, எங்கள் கோயிலின் தெற்கு வீதியின் வெள்ளை மணலுக்குள் கால் புதைய நடந்து சென்றேன். ஊரே உறங்கி விட்டது. அவர்களும் உறங்கிப் போயிருக்கலாம் என்றாலும், அவர்கள் வீட்டுக்கேற வரை சென்று, அதை உறுதிப்படுத்தினால் தான் மனம் நிம்மதியடையும் போலிருந்தது.

அப்படியே போய் அவர்களின் வீட்டுக் கேற்றடியில் நின்றேன். விறாந்தையும், அதில் 'தணித்து' (ஒளி குறைத்து) வைக்கப்பட்ட 'லாம்பு'ம் தெரிந்தது. யாரோ படுத்திருந்தார்கள். அவர்களின் தகப்பனாக இருக்கலாம்.

தமிழ்த் திரைப்படங்களில் நடிக, நடிகையரின் உருவத்திலிருந்து மனச்சாட்சி பிரிந்து புறப்பட்டு, வேறாக நின்று, வாதாடுவதாகக் காட்டுவார்களே.. அதுமாதிரி மனதிற்குள் பட்டிமன்றம் நடந்தது. தீர்ப்பு சொல்வதற்கிடையில் கேற்றில் கை வைத்து விட்டேன். அது தன்னிச்சையாகத் திறந்து கொண்டது.

அவர்கள் முற்றத்தில் கால்வைத்து, என் நண்பனை (ஈஸ்வரியின் அண்ணனை) அழைப்பதா அல்லது பேசாமல் திரும்பிப் போவதா என்று யோசித்துக் கொண்டிருந்த எனக்கு ஒரேயொரு விசயம் தெரியாமல் போய்விட்டது. அதாவது நான் நோயுற்று இருந்த ஒரு மாத இடைவெளிக்குள் அவர்கள் 'பெரிய்யயய' நாய் ஒன்றை வளர்க்கத் தொடங்கிவிட்டார்கள்

நினைக்க முடிக்க பாய்ந்து வந்து எனது தொடையைக் கவ்வியது. திமிறினேன். கழுத்தில் பிடித்துத் தள்ளினேன். அது அழுங்குப்பிடியாய் இருந்தது. பெலத்து கத்தி யாரையாவது கூப்பிட்டிருக்கலாம். அண்டை, அயல் எல்லாம் நித்திரை கலைந்து ஓடிவந்து, 'ஏன் தம்பி..இந்த நேரத்தில் இங்கே வந்தனீ ..?' என்று கேட்டுத் தொலைக்க, அதற்கு பதில் தேடும் சிரமத்தை நினைத்து, நானும், நாயும், திமிறலைத் தொடர்ந்தோம்.

யாரோ கேற்றைத் திறந்துகொண்டு வெளியில் இருந்து வந்தார்கள். அது அவர்களின் உறவுக்காரன். ஈஸ்வரிக்கு ஒன்றுவிட்ட அண்ணன் முறை. எட்டி நாய்க்கு விட்ட உதையில் நாய் ஈனஸ்வரத்துடன் என் காலை விட்டது. அடுத்த உதை நேரங் கெட்டநேரத்தில் 'பெண் புரசுகள்' (புரசுகள் என்றால் என்ன?) இருக்கும் வீட்டிற்கு வந்த எனக்குத்தான் என்று நினைத்த வேளையில், வீட்டிற்கு உள்ளிருந்து யாரோ கைவிளக்குடன் வந்தார்கள். அது தாய்.

'என்ன தம்பி..நாய் கடிச்சுப்போட்டுதே' என்று கேட்ட கேள்விக்கு, 'சாடையாக நகம் கீறிவிட்டது' என்று பதில் சொல்லி அவசரமாக புறப்பட்டேன். 'பார்ப்பம்' என்று கேட்டு, ஏறக்குறைய 'புறாவுக்காக தன்தொடைச்சதையை கொடுக்க முற்பட்ட சிபிச் சக்கரவர்த்தி' யின் நிலையில் நான் நிற்பதை அவர்கள் கண்டு கொள்ள விடாமல், ஏதோ சொல்லி நான் புறப்பட, அந்தவீட்டுப் புறா, மெதுவாக வந்து தாயின் பின்னால் நின்று பரிதாபமாக என்னைப் பார்ப்பதை கால்வேதனைக்கு மத்தியிலும் கவனிக்கத்தான் செய்தேன்.

என் வீட்டுக்காரருக்கு, குறிப்பாக அம்மம்மாவுக்கு என்ன சொல்லப் போகிறேன் என்ற சிந்தனையுடன் நடந்தேன். எங்கள் வீட்டுக் கேற்றை ஒலியெழுப்பாமல் திறந்து உள் நுழைந்தேன். அம்மம்மா நித்திரை கலைந்து என்னைக் காணவில்லை என்று பார்த்திருப்பதை தெரிந்து கொண்டேன்.

அவ கேட்பதற்கு முதல் நான் முந்திக் கொண்டேன்.

'அம்மம்மா.. பின்வளவுக்கு போனன்.. அங்கை படுத்திருந்த நாயிலை மிதிச்சு விட்டன். அது கடிச்சுப் போட்டுது' என்று பட்டினியால் மெலிந்து போய், நடக்கவும் பெலமில்லாமல் திரிந்த ஒரு அனாதை நாய் மேலே வீண்பழி சுமத்தினேன்.

ஒன்றுமறியாத அந்த அப்பாவி நாயைத் திட்டிக் கொண்டே, அம்மம்மா துணியால் காயத்துக்கு கட்டிவிட்டு, விடியும் வரை, ஏதோ சொல்லி அரற்றிக் கொண்டிருந்தா. அவவின் கவலை என்னவென்றால், 'அம்மாளாச்சி வருத்தம்' வந்து, சுகமாகும்போது, தயிர் போன்ற குளிரான சாப்பாடுகள் கொடுப்பது வழக்கம். ஆனால் நாய்க்கடிக்கு குளிரானவை கண்ணிலேயே காட்டக்கூடாது. தன்னுடைய அருமைப் பேரனுக்கு இப்பிடி ஒரு நிலை வந்துவிட்டதே என்று, 'அம்மாளாச்சி'யை துணைக்கு அழைத்துக் கொண்டு படுத்திருந்தா.

அடுத்தநாள் காலை சேதியறிந்த அம்மா, அப்பாவும் கலங்கிப் போனார்கள். என தம்பிமார்கள், நான் மறித்தும் கேட்காமல், கண்ணில் பட்ட தெருநாய்களுக்கு கல்லால் எறிந்து விரட்டி திரிந்தார்கள். நெஞ்சம் குறுகுறுக்க, நான் நல்லபிள்ளை மாதிரி, மூச்சு விடாமல் இருந்து விட்டேன்.

நேற்றுப் போல இருக்கிறது...

நலன் விரும்பிகள்

சதயவு செய்து
பட்டாசுகளை வெடிக்காதீர்கள்
தீக்காயம் ஏற்படலாம்.
நாங்கள்
அணுகுண்டு போடுகிறோம்

- ரசிகன் ஞானியார்



» Accountancy & Auditing
» Business Start up Advice
» Business Plans & Cash Flow Forecasts
» Personal tax Affairs & Self Assesment
» Company Tax Affairs & Company Tax Return (CT 600)
» Preparing VAT, Payroll for the Sole Trader
» Patrnership & Limited Companies
» Company Formation
» Attending VAT & PAYE visits
» CIS Voucher & Construction
» Industry Services
» Tax Investigations
» Solicitors Accounts & Accounts Reports

TAMSONS

Accountancy & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# அழிவுப் பாதையில் மருந்துச் செடிகள்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோய்களில் சில எம்மை நாடி வருவதுமுண்டு, நாடிச் செல்லும் நோய்களும் எம்மை வந்தடைவதுண்டு. வந்த நோய்களைத் தடுக்கவும், குணப்படுத்தவும் இயற்கையாக வளர்ந்த மருந்துச் செடிகள் நிவாரணம் தருவது கண்கண்ட உண்மை.

கொடிய நோய்களான புற்று நோய், மலேரியா போன்ற நோய்களைக் கட்டுப்படுத்த இயற்கையாக வளர்ந்த மருந்துச் செடிகள் கைகொடுப்பது பாரம்பரிய வழிமுறையாகும். ஆபிரிக்க வாழ் மக்களில் 80 வீதமானவர்கள் இப்பூர்வீக மருந்துச் செடிகளையே நம்பியுள்ளனர்.

உலகம் பூராவும் கண்டுபிடிக்கப்பட்ட மருந்து வகைச் செடிகளை பாதுகாக்கும் மையமான Plant life, சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையின் மூலம் அதிர்வு தரும் செய்திகள் வெளிவந்துள்ளன.

வியாபார ஆசையினால் மருந்து வகைத் தாவரங்களை அத்துமீறி அறுவடை செய்வதினாலும், மாசுபடிந்த சூழல் காரணமாக அழிவுக்குள்ளாகும் நிலமையினாலும் இத்தாவரங்களின் எதிர்கால வளர்ச்சியில் எள்ளளவேனும் அக்கறை கொள்ளாததினாலும் 15,000 தொடக்கம் 50,000 வரையான தாவர வகைகள் அழிந்து பொகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக Alan Hamilton கவலைப்படுகிறார்.

சீனா, இந்தியா, கென்யா, நேபாளம், தன்சானியா மற்றும் உகண்டா ஆகிய நாடுகளில் காணப்படும் இந்த மருந்து வகைத் தாவரங்கள் உரிய முறையில் பாதுகாக்கப்படவில்லை என்பதே Plant life இயக்கத்தின் கவலையாகும்.

இந்த நாடுகளில் காணப்படும் இயற்கையான மருந்து வகைத் தாவரங்கள் அழிந்து போகாமல் காக்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளதை உணர்த்தும் ஆய்வாளர்கள் இவ்வகைத் தாவரங்களைப் பராமரிக்க சில ஆலோசனைகளைக் கூறவும் தயங்கவில்லை.

உள்ளூர் உற்பத்தியைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் இத்தாவரங்கள் பயிரிடக் கூடிய இடங்களில் வசிக்கும் உள்ளூர் வாசிகளுக்கு ஊக்கமளிக்கும் சலுகைகளை வழங்குவது பொருத்தமாக இருக்குமெனத் தெரிவிக்கின்றனர்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

இவ்வாறான ஊக்குவிப்பு சலுகைகளை வழங்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்திய இநதியா, பாகிஸ்தான், சீனா, நேபாளம், உகண்டா போன்ற நாடுகளில் வெற்றியளித்திருப்பதாக Plant life, இயக்கம் மகிழ்ச்சியடைகிறது.

இது போன்ற திட்டங்களை ஏனைய நாடுகளும் பினபற்றினால், மருந்து வகைத் தாவரங்களை அழிவினின்றும் காப்பாற்ற முடியுமென Plant life, மையத்தின் அறிக்கையாளர் Alan Hamilton நம்பிக்கையுடன் தெரிவிக்கிறார்.

### புதிய முறையில் பொரித்த உணவுகள்

எப்படித்தான் சமையல் செய்தாலும் சிலருக்குப் பிடித்தமான பொரியல் வகை என்னவோ தவிர்க்க முடியாதது.

உடலின் ஆரோக்கியத்திற்கு பொரித்த உணவு வகைகள் உண்டு பண்ணும். கெடுதல்களை ஆராய்ந்த ஆய்வாளர்கள் பொரித்த உணவுகளில் காணப்படும் ஒருவகை Heterocyclic Amines உடலின் ஆரோக்கியத்தைக் கெடுப்பதாகவும் புற்றுநோய் போன்ற நோய்கள் அணுகுவதற்கு ஆதாரமாக அமைந்து விடுவதாகவும் கண்டுபிடித்துள்ளனர்.

பொரித்த கோழி இறைச்சி, பொரித்த ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி போன்ற வகையறாக்களை எந்தவித எச்சரிக்கையுமின்றி உள்ளே தள்ளிக் கொண்டிருப்பவர்கள் பாடு எப்படியிருக்கும் என்று ஆராய்ச்சியில் இறங்கிய Spain நாட்டிலுள்ள Porto பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த Isabel Ferreira என்பவரும் அவரது குழுவினரும் பொரியல் உணவுகளை விரும்பிச் சாப்பிடும் உணவுப் பிரியர்களுக்கு உற்சாகம் தரும் செய்தியொன்றைச் சொல்லியுள்ளனர்.

பொரித்த இறைச்சித் துண்டுகளை, 6 மணித்தியாலங்களுக்கு Beer குடிபானங்களிலும் Red wine போன்ற மதுபானங்களிலும் ஊறவைத்த பின் ஆராய்ந்த போது 90 வீதமான Heterocyclic Amines என்ற உடல் ஆரோக்கியத்திற்கு கெடுதலான கலப்பு (Compounds) குறைந்து விடுமெனக் கண்டுபிடித்துள்ளனர்.

இதே போன்று ஒலிவ் எண்ணெய், எலுமிச்சம் சாறு, உள்ளிப் பூடு போன்ற திரவங்களில் ஊற வைத்தாலும் பொரித்த உணவுகளின் கெடுதலான பங்கு நீங்கி உடலுக்கு உகந்ததாக அமையுமென நம்பிக்கை தெரிவித்தனர்.

எனவே பொரியல் உணவை விரும்பும் அன்பர்களுக்கு பியர் குடிபானங்களும் Red wine மது பானமும் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையும் துளிர் விட்டுள்ளது.

இதிலும் ஒரு ஆச்சரியம் என்னவென்றால் பியரில் 4 மணித்தியாலங்கள் மட்டும் ஊற வைத்தால் போதுமென்ற சாதகமான தகவலும் உண்டு.

இந்த பியர் சமாச்சாரம் Red wine குடிவகை ஒன்றும் வேண்டாம் என்பவர்களுக்கு இருக்கவே இருக்கிறது ஒலிவ் ஒயில், எலுமிச்சம் சாறு உள்ளிட்ட பதார்த்தங்கள்.

போயும் போயும் ஒரு பொரியல் சாப்பிட இத்தனை கெடுபிடியா? வேண்டவே வேண்டாம் இந்தப் போதனை. பொரித்த மீனும் வேண்டாம். பொரித்த இறைச்சியும் வேண்டாம் என்று தீர்மானிப்பவர்களாயின் உங்கள் உடல் ஆரோக்கியம் நிச்சயம் அனுகூலமாக இருக்குமென்று ஆராயச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### மின்சார உற்பத்தியில் பலூன்கள் உபயோகம்

சூரிய சக்தியைக் கவர்ந்திழுத்து பல வழிகள் மூலமாக மினசாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் புதியதோர் கண்டுபிடிப்பு உற்சாகத்தைத் தருகிறது.

காற்றாடிகளால் இயங்கும் இயந்திரம் ஒரு புறமும் வானுயர்ந்த கோபுரங்கள் மறு புறமும் கைகொடுக்கும் மின்சார உற்பத்தியில் விண்ணில் பறக்க விடும் பலூன்களையும் பயன்படுத்தலாம் என அவுஸ்திரேலியாவிலுள்ள Brisbane நகரின் சுறறுச் சூழல் மையத்தின் ஆலோசகர் Ian Edmonds நிரூபித்துள்ளார்.

44 மீற்றர் குறுக்களவு கொண்ட பலூனை 3 கிலோமீற்றர் உயரத்திற்கு சூரிய வெப்பத்தால் சூடாக்கப்பட்ட உஸ்ணமான காற்றை நிரப்பி மேலாகக் கிளம்ப விட்டு அந்த உயரத்தை அடைந்ததும் அதனைக் கீழே இறக்கக் கூடிய வகையில் உள்ளிருக்கும் காற்றை வெளியில் அகற்றி மேலும் கீழுமாக இயக்கப்படும் இதன் அசைவில் நிலத்தில் நிறுவப்பட்டுள்ள மின்னுற்பத்தி இயந்திரம் இயக்கப்படுகிறது

இவ்வாறு உற்பத்தியாகும் மின்சாரம் 50KW சக்தி கொண்டதாகவும் 10 வீடுகளுக்குத் தேவையான மின்சக்தியைக் கொடுக்கக் கூடியதாகவும் இருப்பதாக நிரூபித்துள்ளனர்.

தேவைக்கு ஏற்ற வகையில் பலூனின் வட்டத்தை விஸ்தரித்தால் அதற்கேற்றவாறு மின்சாரம் கிடைக்குமென பரிந்துரைக்கிறார். Ian Edmonds .

ஆகாயத்தில் அழகான பலூன்கள் விரைவில் பவனி வர வெகுநாட்கள் காத்திருக்க வேண்டாம். ஒருமுறை Australia சென்று வந்தால் உடனே காணலாம்


IRO

Immigration – குடிவரவு

**கடந்த 11 ஆண்டுகளாக பிரித்தானியாவில் குடிவரவுத்துறையில் முன்னணி நிறுவனம்**

**உங்கள் சகல விதமான**

- குடிவரவு விண்ணப்பங்கள்
- மேன்முறையீடுகள் (Appeals)
- இலங்கை, இந்தியாவில் விசா மறுக்கப்பட்டவர்களுக்கான மேன்முறையீடுகள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்

**இது தவிர**

- Human Rights - Humanitarian Protection, 10 years - 14 years விண்ணப்பங்கள்,
- புதிய அரசியல் அடைக்கல் விண்ணப்பங்கள் (Fresh Application)

விபரங்கட்கு: **திரு குலேந்திரன்**
**திரு ராம்**
**திரு சூரியகுமாரன்**

Tel: 020 8682 4494
Mob: 07976 759 725
07939 261 540
07810 848 017

1083 Garratt Lane,
Tooting, London
SW17 0LN

(குடிவரவு ஆணையாளர் அலுவலகத்தினால் குடிவரவு ஆலோசனைகள் வழங்க Level 3 அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனம்.)

முன் அனுமதி பெற்று வரவும்
அலுவலக நேரம் 11.00 – 17:30
திங்கள் முதல் வெள்ளி

வாசகர் கருத்துக் களம்

# புலம்பெயர்ந்த நாடுகளில் முதியவர்களின் நிலை

### சிறை மீளச் சில மணிநேரம் ஒதுக்கப்பட வேண்டும்

முதுமை என்பது வாழ்வின் முக்கிய பருவம். 'வாழ்ந்து முடித்தவர்கள்' என்ற அடைமொழியுடன் வாழ்க்கை அனுபவத்தைத் தமக்குள் அடக்கிக் கொண்ட பொக்கிசங்கள் இவர்கள். வாழ்வின் பல தரத்திலும் இருந்து சேகரித்த பட்டறிவுகளைச் சுமந்து கொண்டிருக்கும் பெட்டகங்கள் இவர்கள். ஆனால் இந்தப் பொக்கிசங்கள் அல்லது பெட்டகங்கள் சரியான முறையில் கையாளப்படுகின்றனவா என்பதே இங்குள்ள கேள்வி.

அதிலும் குறிப்பாக வேகம், வேகமென்று சில்லுப் பூட்டிய புலம் பெயர் வாழ்விலே ஆடி ஓய்ந்து கொண்டிருக்கும் முதியவர்களை கவனிப்பதற்கும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பிள்ளைகள் தயாராயிருக்கிறார்களா?

தமது இறுதிக் காலம் எப்படி இருக்க வேண்டும் என்று இன்றைய முதியவர்கள் அன்று கண்ட கனவுகள், கட்டிய கோட்டைகள் எல்லாம் பேணப்படுகின்றனவா?

தாயகத்தில் நிலவும் கொடிய யுத்தத்தால் தாம் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த மண்ணை விட்டுப் புலம் பெயர்ந்த, அல்லது புலம் பெயர நிர்ப்பந்திக்கப்பட்ட இந்த முதியவர்களால் இந்த வெளிநாட்டு வாழ்க்கை முறையுடன் ஒட்டிச் செயற்படக் கூடியதாக இருக்கிறதா?

இது போல இன்னோரன்ன கேள்விகள் மனதில் எழுகின்றன. இந்தக் கேள்விகளில் அனேகமானவற்றுக்கான பதில் இல்லை என்பதே உண்மை.

தம்மைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கி, சொந்த மண்ணில் தம் பிள்ளைகளுக்கு ஏதாவது நடந்து விடுமோ என்ற அச்சத்தில் கண்காணாத தேசத்திலாவது நன்றாக வாழட்டும் என்ற எண்ணத்தில் அனுப்பி வைத்த பெற்றவர்களை பெரும் சுமையாக நினைக்கின்ற பிள்ளைகள் தான் புலத்திலே அதிகமாக இருக்கிறார்கள்.

அடுத்தவனைப் பார்த்து வாழ்வதையே தொழிலாகக் கொண்டு விட்ட காரணத்தால் உயர்ந்து கொண்டே செல்லும் செலவை ஈடுகட்ட ஒன்றிற்கு இரண்டு வேலைகளுடன் மல்லுக் கட்டும் இவர்களால் அந்தப் பெற்றவர்கள் எதிர்பார்க்கும் அரவணைப்பை, ஆறுதலான நான்கு வார்த்தைகளை, இன்முகத்துடனான நலம் விசாரித்தலை வழங்க முடிவதில்லை.

சரி, தாம் பெற்றவர்களின் அன்பைத் தான் பெற முடிவதில்லை என்றால் பேரப் பிள்ளைகளின் நிலை அதை விட மோசமானதாக இருக்கின்றது. பெற்றவர்களுடனேயே ஒட்டாமல் தமக்கென்று தனியான ஒரு உலகத்தைச் சிருஷ்டித்துக் கொண்டு தொலைபேசியும் கணனியுமே வாழ்க்கை என்பதாய் வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களைப் பொறுத்தவரை பாட்டன், பாட்டி எல்லாம் நாகரீகம் தெரியாத வயதானவர்கள் அவ்வளவு தான்.

வாழ்வின் இளமைப் பருவத்தில் தமக்கென்று வாழாது தம் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றியே சிந்தித்துச் சிந்தித்துச் செயலாற்றி ஆடி ஓய்ந்தவர்கள். தம் பிள்ளைகளிடமிருந்தோ பிள்ளைகளின் பிள்ளைகளிடமிருந்தோ எதிர்பார்த்த அன்பு கிடைக்காது கலங்கிப் போகிறார்கள்.

நான்கு சுவருக்குள் அடைபட்ட வாழ்க்கை அவர்களுக்குச் சிறை போலவே படுகிறது. ஆனாலும் பிறருக்குத் தாங்கள் மகிழ்ச்சியாய் இருப்பது போலக் காட்டிக் கொள்கிறார்கள்.

பெற்றவரின் தேவை அறிந்து, அவர்களது ஆதங்கங்களைப் புரிந்து கொண்டு, நடக்க வேண்டியது பிள்ளைகளின் கடமை.

காலமெல்லாம் எமக்காக ஒதுக்கியவர்களுக்காக வாரத்தில் ஒரு நாளையாவது ஒதுக்கி அவர்களுடன் கழிக்க வேண்டியது பிள்ளைகளின் தலையாய பொறுப்பு என்பதைப் புரிந்து கொண்டால் புலத்தில் வாழும் முதியவர்கள் தமது இறுதிக் காலத்தை இன்பமாகக் கழிப்பார்கள்.

*- கமலா*

### இயன்றவரை மகிழ்ச்சியுடன் முதியவர்கள்

நமது தாயக மண் பெற்ற சாபமோ என்னவோ எம் சொந்த மண்ணில் வாழ முடியாமல் புலம் பெயர நிர்ப்பந்திக்கப்பட்டு விட்டோம்.

அறியாத நாட்டிலே, புரியாத மொழி பேசும் மக்களுக்கிடையே, பழகிப் பார்த்திருக்காத கால நிலைக்கு மத்தியிலே, அகதி என்ற நாமத்தை மட்டுமே சொத்தாக்கிக் கொண்டு பட்ட கடனை அடைப்பதற்கும், பரிதவிக்கும் சொந்தங்களைக் காக்கவும் கையில் அகப்பட்ட தொழிலையெல்லாம் செய்து கொண்டு காலத்தைக் ஓட்டிக் கொண்டிருக்கிறோம்.

எம்மைப் பெற்றவர்களைத் தாயகத்தில் தனிமையில் விட்டு விடக் கூடாது என்பதற்காக அவர்களையும் இந்த நாடுகளுக்கு அழைத்துக் கொண்டு விடுகிறோம்.

அவ்வாறு இந்த மண்ணை மிதிக்கின்ற அவர்களின் மனநிலை எப்படி இருக்கும் என்பது எமக்கும் புரியத்தான் செய்கிறது.

சுமார் பதினைந்து இருபது ஆண்டுகள் வாழ்ந்து விட்ட அந்த மண் குறித்த ஏக்கங்களும் கவலைகளும் நினைவுகளும் எங்களையே வாட்டி வதைக்கின்ற போது அந்த மண்ணிலே பிறந்து, அந்த மண்ணையே நேசித்து, அறுபது எழுபது ஆண்டுகளை ஓட்டி விட்ட எம் பெற்றோரின் ஆதங்கங்களும் அங்கலாய்ப்புகளும் எமக்குப் புரியாததல்ல.

ஆனாலும் ஓட்டமே வாழ்வு என்றாகிவிட்ட எமது வாழ்க்கையில் முழுமையான நேரத்தை எம்மைப் பெற்றவர்களுக்காக செலவிட முடியாத நிலையை உணர்கிறோம்.

அந்த ஏக்கத்தைத் தவிர்ப்பதற்காய் வாரமொருமுறை ஆலயம் அழைத்துச் செல்கிறோம். எமது உறவுகள் கூடும் திருமண வீடுகள் உள்ளிட்ட கொண்டாட்டங்களில் எம்மைப் பெற்றவர்களையும் அழைத்துச் சென்று அவர்கள் தம் வயதையொத்தவர்களுடன் அளவளாவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறோம்.

முதியோர் இல்லங்கள் அல்லது மூத்தோர் கலைக் கூடங்கள் என்ற பெயரில் வயதானவர்கள் தமக்கிடையே சந்தித்துக் கொள்ளவும் தமது ஆற்றல்களைப் பகிர்ந்து கொள்ளவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்றோம்

சொர்க்கமே என்றாலும் அது சொந்த ஊரைப் போல வராது என்பது அனைவரும் ஒத்துக் கொண்ட உண்மை. அப்படியிருக்க இந்த 'நரகத்'திலே அவர்கள் நிம்தியாக இருக்க முடியாது என்பது உண்மைதான்.

ஆனாலும் காலம் செய்த கோலத்தால் இந்த வாழ்வு தவிர்க்க முடியாததாகிறது. எனவே அவர்கள் இந்த மண்ணில் முடிந்தளவு மகிழ்ச்சியாக வாழ்வதற்கு ஏற்றவற்றைப் பிள்ளைகள் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். அதன் மூலம் அவர்கள் தம் இறுதிக் காலத்தில் ஓரளவு மகிழ்ச்சியாகவே வாழ்கிறார்கள்.

*- கனிமொழி*

### தனிமையும் தவிப்புமே எஞ்சி நிற்கிறது

இன்றைக்குத் தாயகத்திலிருந்து பல்வேறு காரணங்களால் புலம் பெயரும் எங்கள் முதியவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்ற கேள்விக்கு அவர்கள் அடிமைகள் போல வாழ்கிறார்கள் என்பதே சரியான பதிலாக இருக்க முடியும்.

அவர்கள் பெற்றவர்கள் தொழிலுக்குப்போக, பெற்றவர்கள் பெற்றவற்றைப் பராமரிக்கும் பொறுப்பைச் சுமந்து கொண்டு அல்லாடும் முதியவர்கள் பலரைக் கண்டிருக்கிறேன்.

தள்ளாத வயதில், புரியாத மொழி பேசும் பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பு இவர்களுக்குச் சுமையாகவே அமைந்து விடுகிறது. முதுமைப் பருவமும் குழந்தைப் பருவமும் உள்ளத்தில் ஒன்று என்று சொல்லுவார்கள். ஆனால் அவர்களிடமே திரும்பவும் குழந்தை பராமரிக்கும் பொறுப்பு கொடுக்கப்படுவதைத்தான் ஜீரணிக்க முடியவில்லை.

இத்தனை வருடமும் தங்கள் பிள்ளைகளைப் பராமரித்தவர்கள் ஓய்வு பெறவேண்டிய காலத்தில் மீண்டும் அப் பாரத்தை சுமக்க வைக்கப்படுகிறார்கள் என்பது மிகவும் மன வேதனைக்குரிய விடயமாகும்.

பேரப்பிள்ளைகள் வளர்ந்து பள்ளி செல்லத் தொடங்கி விட்டால் இவர்களை வாட்டும் அடுத்த நோய் தனிமை. தனிமை என்பது எவ்வளவு கொடுமையானது.

தாயகத்தில் பல உறவுகள் நட்புகளுடன் தாங்கள் பிறந்து வளர்ந்த இடத்தில் இருந்து விட்டு புலத்திற்கு வருபவர்கள் இங்கு கட்டிட காட்டின் தனிமையில் இருந்து மனதளவில் ஒடிந்து போகிறார்கள்.

புலத்தில் பிள்ளைகள், மருமக்கள், வேலைக்கு போன பின்பு வீட்டின் தனிமையில் இருக்கும் இவர்களுக்கு நேரத்தை எப்படி கழிப்பது என்பதே முக்கிய பிரச்சனை.

தெரியாத மனிதர்கள், புதிய சூழல், புரியாத மொழி, பழக்க வழக்கங்கள் என்று பல விதமான காரணிகளால் அவர்களுக்கு தனிமை உருவாக்கப்படுகிறது.

அந்தத் தனிமையைப் போக்குவதற்கு வழி தெரியாது தமக்குள்ளே குமுறிக் கொண்டிருக்கும் இவர்களுக்கு வடிகாலாய் அமைவது தொலைக்காட்சிகளே.

ஆனாலும் நாலு பேருடன் பேசிப் பழகி கருத்துக்களைப் பகிரும் சந்தோசம் இந்த மின்சாரப் பெட்டிக்குள்ளிருந்து கிடைத்து விடவா போகிறது?

இந்த நிலையில் பெரியவர்களுக்கு மதிப்புக் கொடுத்து அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களது ஏக்கங்களையும் ஆசைகளையும் நிறைவேற்றி வைப்பதற்குத் தயாராயுள்ள பிள்ளைகள் புலம் பெயர் தேசங்களிலே மிக மிகக் குறைவு என்பதே என்னுடைய அபிப்பிராயம்.

*- சிவதீபன்*

### வந்திட்டம்... வாழத் தானே வேணும்!

நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ இந்த நாட்டுக்கு வந்திட்டம். இந்தத் தேசங்களிலை நாங்கள் எதிர்பார்த்த வாழ்க்கையை வாழுறம் எண்டு சொல்ல முடியாது தான். ஆனால் அதுக்காக நாங்கள் ஏதோ சிறை வாசம் அனுபவிக்கிறம் எண்டும் சொல்லேலாது.

யோசிச்சுப் பாருங்கோ. நாங்கள் இங்காலை வந்திருக்காட்டில் அங்கை ஊரிலை பிள்ளைகள் அனுப்பின படங்களைப் பாத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பம்.

ஆனால் இப்ப பிள்ளைகளைப் பக்கத்திலை இருந்து பாக்கக் கூடியதாயிருக்குது. பிள்ளைகள் வீட்டிலை நிக்கிறது குறைவு எண்டதும் உண்மை தான். ஆனால் என்ன செய்யிறது. இந்த ஊர் வாழ்க்கை முறை அப்படித் தானே இருக்குது.

நாங்கள் ஊரிலை இருந்திருந்தால் இந்தச் சண்டைக்குள்ளை சரியான சாப்பாடும் இல்லாமல் ஓடுப்பட்டுத் திரிஞ்சிருப்பம். ஆனால் இஞ்சை சிவனே எண்டு நிம்மதியா இருக்கிறம்.

நல்ல சாப்பாடு சாப்பிடக் கூடியதாயிருக்கு. மருந்து வசதி இருக்கு. அவசரமெண்டால் வீட்டுக்கே அம்புலன்ஸ் வருகுது. இதெல்லாம் வரம் எண்டு தானே சொல்ல வேணும்.

பொழுதைப் போக்காட்ட தமிழ் ரீவீ இருக்குது. கோயில் இருக்குது. அது போதும் எங்களுக்கு. நிம்மதியா எங்கடை கடைசி காலத்தைக் கழிச்சிடுவம்.

*- சிவராசா*



ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிட நிலையம்

SRI KARUMARI AMMAN JOTHIDA NILAYAM

பண்டிதர் அர்ஜுன் ரெட்டி சாஸ்திரி

EELAM ENTERPRISES

164B, Mitcham Road, London SW17 9NJ
(Near Selvarajah Gold House)
Contact: PANDIT A ARJUN REDDY SASTRY
**Mob.: 07529 723 111, 07529 723 118**

Seven days a Week from 10.00 am. Till 10:00 pm.



மெய்யன்பர்களே,

30 வருட அனுபவம் நிறைந்த பண்டிதர், கருமாரி அருள் கொண்டு கைரேகை மூலம், முகநாடிமூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் - கணவன் மனைவி ஒற்றுமை, குழந்தைப் பாக்கியம், கைரேகை, திருமண யோகம், தொழில், வியாதிகள், வியாபாரம், லட்சுமீகர விடயம், காதல், கல்யாணம், கோட்டு வழக்குகள், வாகனப் பொருத்தம், வீட்டு வாஸ்த்த, கண் திருஷ்டி ஆகிய அனைத்தும். தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். முந்திர தந்திரம், செய்வினைகள் போன்றவை ஹ்ரீ ஓம் மந்திரத்தினால் பரிகாரம் செய்யப்படும்.

Pandit A Arjun Reddy Sastry



Through face - palm reading "Horescope" Date of birth, Numerology: So, come and consult him once. He will solve and guide all your problems like health, business, marriage, education, carrier/job, abroad, promotion, land Court, birth of children, visa and family problems etc. He has done protection things for house, house vasthu, shop and personal matters etc. English, Tamil, and Hindi are the Languages of contact.

Confidentiality will be maintained for your secret matters.

# 'மரணத்துள் வாழ்வு'



**சுகி**
*(ஒரு பேப்பருக்காக)*

கறுப்புத் துணியால் இறுக்கிக் கட்டப்பட்ட கரங்கள், பின்னணியில் நீள்கடற்கரை, முள் கம்பி வலைகளால் சூழப்பட்ட புகைப் படத்துடன் கூடிய 'மரணத்துள் வாழ்வு' என்ற தலையங்கத்துடன் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் 30வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் புதிய நாடகத்தின் விளம்பரப் பிரதி ஒன்றைப் பார்த்ததும் இந்நாடகத்தை கட்டாயம் பார்க்க வேண்டும் என்ற ஆவல் என்னையும் அறியாமல் என்னுள் எழுந்தது.

ஆங்கில நாவல்களையும், வேற்று மொழி நாவல்களையும் தழுவி அரங்க நிகழ்வுகளை நடாத்தும் அவைக்காற்றுகழகம் முதன் முறையாக முழுக்க முழுக்க எமது பிரச்சினைகளையும், சமகால பதிவுகளையும் நாடகமாக்கத் தொடங்கி விட்டார்களா? என்ன இருந்தாலும் ஒரு கலைஞன் தன்னையும், தன் சமூகத்தையும் சுற்றி நடக்கும் இரத்தமும், சதையுமான நிகழ்வுகளில் இருந்து நீண்ட காலத்திற்கு விலகி இருக்க முடியாது என்பதால் வந்த மாற்றமா? என்ற வினாவுக்கு மேல் வினாவோடு சனவரி 2ம் திகதி Winston Churchill மண்டபத்தில், திரை எப்போ விலகும் எனக் காத்திருந்தேன்.

இலங்கையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் வீதியோரத்தில் கைதாகி கடத்தப்பட்டு காணாமல் போனவர்களில் ஒருவராக இருந்து பின்னர் விடுதலையானவர் மாலினி. கொடுமையான சித்திரவதைகளுக்கும், பாலியல் வன்முறைக்கும் உள்ளாகி அந்த மன அவஸ்தைகளுடன் துன்பப்படும் அவள் தனது வீட்டிலேயே தன்னை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியவர்களில் ஒருவரான டொக்டர் இராஜரத்தினத்தை சந்திக்கிறாள்.

மாலினி (ஆனந்தராணி), டொக்டர்(பாலேந்திரா), மாலினியின் கணவர் (மனோகரன் மனுவேற்பிள்ளை) என இந்த மூவருடனேயே நாடகம் நகர்ந்தாலும், இம் மூவரின் நடிப்பாற்றல் நாலாம் நபருக்கான தேடலை இல்லாமல் செய்கிறது.

புலம்பெயர் தமிழ் மத்தியதர வீட்டுச்சூழலில் நடப்பதாக சித்தரிக்கப்படும் இந்த நாடகத்தில் இரவுப்பகுதி மெல்லிய வெளிச்சத்தில் நகர்வதும், வெளியில் வாகனம் நிற்பது, புறப்படுவது போன்ற காட்சிகளில் ஒலி, ஒளி மிக நேர்த்தியாக கையாளப்பட்டுள்ளதுடன், குவி வட்ட வெளிச்சத்தில் அவர்களின் முகபாவனையையும், நடிப்பாற்றலையும் பார்க்கக் கூடியதாக இருந்தது. குரல், தங்கு தடுமாற்றம் இன்றி, அவர்களின் நேர்த்தியான பயிற்சியையும், நடிப்பாற்றலையும் வெளிக்காட்டி நின்றது. ஆனால் பகலில் நடக்கும் பகுதியை கொஞ்சம் பிரகாசமாக்கி, பகலையும், இரவையும் வித்தியாசப்படுத்தி இருந்தால் இன்னமும் நன்றாக இருந்திருக்கும்.

காட்சிகள் இடைவெளியின்றி விறு,விறுப்பாக நகர்ந்தாலும் ஒருசில இடங்களில் தொய்வு காணப்படுகிறது. குறிப்பாக மாலினி துப்பாக்கியோடு சுற்றிச் சுற்றி நடந்து ஒன்றில் இருந்து பத்துவரை எண்ணி டொக்கரை மிரட்டுவது, மற்றும் பல இடங்களில் ஆங்கில நாவல் வாடையும் அடிக்கிறது. முக்கியமாக ரேவதி ராகத்திற்கு கொடுக்கப்படும் அதீத முக்கியத்துவமும், அந்த ராகத்தைப் பாவித்து மாலினியின் மனஉளைச்சலின் வேகத்தைக் காட்டுவதும், காரணமில்லாமல் மாலினியின் கணவர் சட்டத்தரணி குமாரை (அவரும், மாலினியும் ஒரே காலப் பகுதியில் பல்கலைக் கழகத்தில் படித்தவர்கள், இந்த கதையின் படி அவருக்கு நடுத்தர வயது கூட ஆகவில்லை) ஒரு கைத்தடியின் உதவியுடன் நடப்பதாகக் காட்டுவதும், ஒரு தமிழ் டொக்டர் இப்படியான மிகக் காட்டமான வன்முறையை செய்ததாகக் சித்தரிப்பதுவும். நாடகத்தின் தலைப்புக்கும், நாடகக் கருச்சூழலுக்கும் விரிசலை ஏற்படுத்தி ஒரு ஒவ்வாத் தன்மையை உண்டு பண்ணுகின்றது. இறுதிக் கட்டக் காட்சியும் அதையே பிரதிபலிக்கிறது.

அதை உறுதிப்படுத்துவது போல நாடகத்தின் முடிவில் உரையாற்றிய நிகழ்ச்சித் தொகுப்பாளர் ச.வாசுதேவன் இந்த நாடகத்தின் பிரதி "Death And The Maiden" என்ற ஆங்கில நாவலினை தழுவி எழுதப்பட்டது எனக் குறிப்பிட்டார்.

மேற்படி நாவல் "Death And The Maiden" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் திரைப்படமாக்கப்பட்டது. அதில் டொக்ரர் Dr.Roberto Miranda வாக Ben Kingsley யும் (காந்தி படத்தில் காந்தியாக நடித்தவர்), (மாலினி) Paulina Lorca வாக Sigourney Weaver ரும், கணவர் Gerardo வாக Stuart Wilson னும் மிக திறமையாக நடித்துள்ளார்கள்.

கதை உட்பட, காட்சிக்கு காட்சி (கார் வருவது, வானொலியில் மனித உரிமை விசாரணைக் குழுவிற்கு அதிகாரியாக பதவி யேற்றதாகச் சொல்லுவது, கடற்கரை வீடு, கதிரையில் கட்டிப் போடுவது, விசாரிப்பது, மிரட்டுவது, வாக்கு மூலம் எடுப்பது என) அதை அப்படியே மிகத் திறமையாக மேடையேற்றியுள்ளார் பாலேந்திரா, ஒரு சில காட்சிகளைத் தவிர.

மரணத்துள் வாழ்வு பற்றி அவைக்காற்று கழகத்தினர் தமது கலைப்பயணத்தில் ஒரு மைல்கல் என்றும் மிகவும் நாடகத்தன்மையுடையதும், உக்கிரமான இந்நாடகம் எழுப்பும் கேள்விகள் எமது தமிழ் சமூகத்திற்கு முக்கியமானவை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தன. என்னைப் பொறுத்தவரை இந்த நாடகம் எழுப்பும் கேள்வி ஒன்றே ஒன்றுதான். எமக்கொரு நாடு உண்டு. அதில் நாம் வாழும் இக் காலப்பகுதி மிக முக்கியமானது. ஏராளம், ஏராளமான நிகழ்வுகளை நாளுக்கு நாள் சுமந்து நிற்கிறது. ஒவ்வொரு தமிழன், தமிழிச்சிக்குப் பின்னாலும் ஒரு கதை சுமந்து நிற்கும் காலப் பகுதியிது. இன்னும் ஏன் நாம் நமது நாட்டுப் பிரச்சனையைச் சொல்வதற்கு மொழிபெயர்ப்பு கதைகளை தழுவி நிற்க வேண்டும்?

இங்குள்ள இளையோர்களை இணைந்து நாடகங்களை பலமுறை மேடையேற்றலாம் என நிரூபித்துள்ள மிகத்திறமையான நெறியாளரான பாலேந்திரா எமக்காக, எமது சமூகம் சார்ந்த பிரச்சனைகளை, எமது மண்ணின் இயல்பான கலைவடிவமாக தருவாரா? அதற்காக அவரின் கரம் பற்றி அவருக்கு ஆக்கமும், ஊக்கமும் தருவோம்.

30 வருடமாக பலவிதமான புகலிடப் பிரச்சனைகளுக்கு மத்தியிலும், இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கும் அவைக்காற்று கலைக் கழகத்தினரின் கலைப்பணி மேலும் சிறக்க வாழ்த்துவோம்.


## South Harrow Food & Wines

Best services at your needs.
Special prices on **Harin Products**
Best quality goods, Best product,
Friendly staff

**தாயகத்தின் வாசம் சுமந்து வரும் தரமான பொருட்களை இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்**




**உள்ளே சென்றால் போதும்**

இறக்குமதியாளர்களும், இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள் மற்றும் மீன், இறைச்சி வகைகள், உடன் மரக்கறி வகைகள், பழவகைகள் ஆகியவற்றின் மொத்த உற்பத்தியாளர்களுமான இந்நிறுவனத்தினர்.






Sri Lankan and Indian fresh Fruits & Vegetables

உங்கள் அனைத்துத் தேவைகளையும் நிவர்த்தி செய்ய தங்கள் சொந்தத் தயாரிப்பான கலப்படமற்ற, ஐரோப்பிய தரக்கட்டுப்பாட்டுக்கமைய தயாரிக்கப்பட்ட HARIN உற்பத்திகளை சிநேகபூர்வ சேவையுடன் தருகிறார்கள்.

Importers and Wholesalers of Sri Lankan **HARIN** brand-own Products (specially grocery products).

**வாடிக்கையாளர்களின் மிக வரவேற்பைப் பெற்று 10 ஆண்டுகளை நோக்கி Harrow இல் ஒரே ஒரு தமிழர் நிறுவனம்.**

அனைத்துக் கடைகளின் வாராந்த மலிவு விற்பனைக்கு ஈடாகப் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.


**South Harrow Food & Wine Imports Co .Ltd.**
234-236 , Northolt Road, South Harrow, Middlesex, HA 2 8 DU.
Tel: 02084236321 Fax: 02084236014
email: Thamilgnanan@aol.com

















சிறிலங்கா அரசின் தமிழினப் படுகொலையை இருட்டடிப்பு செய்து வன்னியில் நாள்தோறும் படுகொலை செய்யப்படும் மக்களின் துன்ப துயரங்களை வெளிக்கொணராமல் பிபிசி பாராமுகமாய் இருப்பதை கண்டித்து லண்டனில் உள்ள பிபிசி தலைமையகத்துக்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இக்கண்டன ஆர்ப்பாட்டம் பிற்பகல் 2:30மணி தொடக்கம் மாலை 6:30 மணிவரை இடம்பெற்றது. லண்டனில் இயங்கி வரும் தமிழ் பாடசாலைகள் மற்றும் தமிழ் இளையோர் அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட இடத்தில் ஈழத்தமிழரின் அவலங்களை விளக்கும் ஒளிப்படக்கண்காட்சியும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வின் இறுதியில் அண்மைக்காலத்தில் சிறிலங்காவின் கொடூர வான்வெளித் தாக்குதல் பற்றிய காணொளித் தொகுப்பு பல்லயிரக்கணக்கான மக்கள் கையெழுத்திட்ட விண்ணப்பம் மற்றும் துண்டுப்பிரசுரங்களையும் பிபிசி நிர்வாகத்தினரிடம் கையளித்தனர்.

இதனைப் பெற்றுக்கொண்ட பிபிசி நிர்வாகத்தினர் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தனர். பிபிசி தொடர்ந்தும் பாராமுகமாக செய்திகளை இருட்டடிப்பு செய்து வருமாயின் மேலும் பல பாரிய போராட்டங்களை நடத்த உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## ஜெய்ஹிந்த்! பாரத இத்தாலி மாதாஜிக்கு...



இப்போது அறிமுகப்படுத்துகிறோம்
துல்லியமான ஒலித்தெளிவுடன்
"புலிகளின் குரல்"
"தமிழீழ வானொலி"
உட்பட 60க்கும் மேற்பட்ட தமிழ் வானொலிகள்
துல்லியமான ஒலி ஒளித்தரத்தில் அனைத்து தமிழ் தொலைக்காட்சிகளும்
£150
மட்டுமே
தொடர்புகளுக்கு
020 71830367
http://www.nallatv.co.cc/

சுவையான உணவு.. சிக்கன விலை.. தரமான சேவை..



Watch Me

seeing is believing

Indo Sri Lankan Tandoori Restaurant



A relaxed atmosphere in a sumptuous setting

Glass enclosed cooking are a to enhance your dining pleasure

The Dishes are prepared from Scratch on the premises,
No preservatives are added

Served with a smile by experienced staff
Our aim is QSC (quality, service, cleanliness)

Watch the skilled chef prepare your fresh food in front of your eyes

Indo Sri Lankan Tandoori Restaurant

108 Modern Road
South Wimbeldon
SW19 3BP

Car Park in
Princess of Wales of Pub
(T) 020 8286 7900

Fully Licenced and
Fully airconditioned
Opening Hours 12 noon to 12 midnight

# ஆயுர்வேதத்தின் பார்வையில் எக்சிமா என்னும் மேகப்படை நோய்....

*டாக்டர் இராஷலக்சுமி ரமேஷ் - ஆயுர்பிரஸ்தா*
Croydon

ஆயுர்வேதத்தில் எக்சிமா என்னும் மேகப்படை நோயை விசார்சிகா என்பார்கள். இது வாத, பித்த, கபம் என்னும் மூன்று தோசங்களினதும் சீரற்ற நிலையினால் தோன்றுவது.

இது கடுமை கூடிய நிலையிலும் தீராத நிலையிலும் அமையலாம். இதில் தீராத நீணடகாலம் நீடிக்கும் வகைதான் சர்வ சாதாரணம். அது அதன் வகையைப் பொறுத்து நீர் வடிதல், சொறி, தோல் தடித்தல் போன்ற குறிகள் தோன்றும்.

### காரணிகள்

வாதம் பித்தம் கபம் ஆகிய மூன்று தோசங்களினால் இந்நோய் தோன்றும். ஆனாலும் சீரற்ர பித்தமும் குருதியும் முக்கிய பங்கை ஆற்றுகின்றன. அவை தோலை சீரற்ரதாக்கி மேகப்படையை தோற்றுவிக்கின்றன. வாதமும் பித்தமும் நோயை யை அறியும் செயலில் தொடர்பு ஏற்படுத்தி பலவகை அறிகுறிகளை உண்டாக்கலாம்.

### அறிகுறிகள்

- வாத வகையால் பாதிக்கப்பட்ட தோல் வரட்சியுடனும் நோவுடனும் கடும் சொறி கூடியதாகவும் இருக்கும்.
- பித்த வகையில் நீர்வடிதலுடன் எரிச்சல் அல்லது காய்சல் இருக்கும்.
- கப வகையில் தோல் தடித்து வெளிறி சொறியும் நிர்வடிதலும் இருக்கும்.

### சிகிச்சை முறை

எல்லா வகையிலும் பித்தமும் குருதி அசுத்தமுமே சர்வ சாதாரணமாக உள்ளதால் பேதி மூலமான வயிற்றுப் போக்கும் இயலுமானால் குருதிப் போக்கும் நல்லது. அதன்பின் குளிர்தரும் மூலிகைகள் மூலம் மருந்தாக்கப் பட்ட நெய் நல்ல பயனைத் தரவல்லது. அதற்கேற்ற மூலிகைகளாக வேம்பு, blue flag, burdock, chaparral, dandelion, tinospora cordifoliaபோன்ற மூலிகைகளை தெரிவு செய்யலாம்.
ஒரு மாதத்திற்கு நாள்தோறும் இரு தடவை ஒரு தேக்கரண்டிPanchatika ghrita. அத்துடன் arogyavardhini 250 மில்லி கிராம் குளிகை நாளுக்கு மூன்றுவேளை எல்லா வகைக்கும் பயன் தரும்.
கபா வகைக்கு myrrh, prickly ash, and bayberryash அகிய மூலிகைகளில் ஒன்றைச் சூடாக்கி நாளுக்கு இருதடவை ஒரு கிராம் படி ஒரு மாதத்திற்கு எடுக்க வேண்டும்.
பவுண் கலந்த chaturmukh 50 மில்லிகிராம் குளிகை நாளுக்கு இருதரம், அத்தோடு 15 மல்லி லீற்ரர் khadirarishtaநாளுக்கு மூன்று தரம் என்ற வகையில் ஒரு மாதத்திற்கு எடுப்பது பயன் தரும்.
mahamarichyadi எண்ணை அல்லது guduchyadi எண்ணை பூசுவதும் பயன் தருகிறது.
வாந்தியை தூண்டுவதும் வயிற்றுப் போக்கை தூண்டுவதும் நல்ல பயன் தரும். அறிகுறிகள் கடுமையானவையாகவும், நீண்ட காலம் கொண்டதாகவும் இருக்கும் சூழலில் தொழில் அனுபவம் கொண்ட வைத்தியர் உதவியுடன் செய்வது அவசியம்.

பூச்சு மருந்துகள்: சந்தணம், நெய் தேன் கலவை, கறுவாக்கற்பூர எண்ணை. Shatadhout Ghruta, Dashang lep, Hemidesmus indicusஉட்கொள்ளும் மருந்துகள். Triphala Guggul, Manjishthadi qadha, Kamdududha, Gandhak Rasayanand Mahatikta Ghruta..
தனி மூலிகைகளான வேம்பு, Hemidesmus indicus, Rubia cordifolia, Bacopa monnieri, Nardostachys jatamansi ஆகியவைகளைக் சொல்லைாம்.
கூட்டாகவும் சிறந்த மூலிகைகள் உண்டு. மொத்தத்தில் குருதியையும் சருமத்தையும் பழைய நன்நிலைக்கு திருப்புவதும், எங்கள் உடலின் எதிர்ப்புச் சக்தியை நிதார்த்தம் ஆக்குவதுமே.

உணவு: உப்பு குறைக்கப்பட வேண்டும். புளிப்பான ஊறுகாய் தயிர் போன்றவை நிச்சயம் தவிர்க்கப்பட வேண்டும். கசப்பும் வேப்பம் பூவும் பயன் தருபவை. உணவாக எடுக்கவும் வெளியே பூசவும் தலை சிறந்ததாக மஞ்சள் கருதப் படுகிறது.
ஆயுர்வேத நிறைவு படுத்திகள்

- Neem Guard
- Suracta
- Raktosodhak vati
- Rasamanikaya
- Haridra Khanda

### வாழ்கை முறை

வேப்பம் பட்டை அவித்த இளம் சூட்டு நீரினால் நாளாந்தம் நோயாளிகள் கழுவப்பட வேண்டும். கழுவிய பின் பட்டை கசிவு பூசப்பட்டு உலர விடவேண்டும். எண்ணைச் சாப்பாடும் காரமான சாப்பாடும் நோயாளிகள் தவிர்க்க வேண்டும். இறுகிய உடைகளோ, வெப்ப சூழலோ அல்லது ஈரலிப்பான சூழலோ தவிர்க்கப்பட வேண்டும். நைலோன், ரெறிலின்ஸ், செயற்கை நார்த் துணிகள் வேர்வை, காய்தல் போன்றவற்றிற்கு இடஞ் சலாக இருப்பதால் அவை தவிர்க்கப்பட வேண்டும்.
பிராணயம,; சர்வாங்காசனம், சிரசாசனம் போன்ற யோக ஆசனங்கள் மேகப்படைக்கு சிகிச்சையாக அமைகின்றன.

KERALA AYURVEDIC CLINIC
ayurprastha

505 London Road, Thornton Heath
Surrey, CR7 6AR





**Booking and Appointments: 020 8684 7574 / 08447780052**

croydon@keralaayurvedam.co.uk
www.keralaayurvedam.co.uk

## முத்துகுமரன்கள் வேண்டாம்.



ஈழத்தில் ஒவ்வொரு உயிரையும் காப்பாற்றுவதற்காக நாள் தோறும் மணி தோறும் காடு மேடு பதுங்கு குழியென ஓடித்திரிகிறது ஒரு இனம். ஏனெனில் உயிர் பெறுமதியானது.

தமிழகத்திலிருந்து செய்தி வந்தபோது என்ன செய்வது என்றே குழம்பிப் போய் இருக்கிறோம். தயவு செய்து தமிழகத்து ஈழ உணர்வாளர்களே - உங்களது உணர்வை நாம் புரிந்து கொள்கிறோம். அதனை உயிரைக் கொடுத்தே நிரூபிக்கும் முடிவை எடுக்காதீர்கள். அரசுகளின் கையாலத் தனங்களுக்கு நீங்கள் எதற்கு கருக வேண்டும்.?

தயவு செய்து திருமா வைகோ முதலான சிங்கங்களே - உங்கள் கர்ச்சனையைநிறுத்திவைத்துக்கொள்ளுங்கள். மொழியால் ஒன்று பட்ட ஒரு இனத்தின் இளைய சமூகத்தை உசுப்பி உசுப்பி விடுவதால் - தற்போதைய நிலை எவ்வகையிலும் மாறப் போவதில்லை.

முத்துகுமரா - அஞ்சலி சொல்வது கூட ஊக்குவிப்பது போல தெரிகிறது. ஏன் குமரா?.. இனியென்ன? கொஞ்ச காலத்தில் உன்னை மறந்துவிடுவர். ஏன் ஈழத் தமிழர்களே மறந்து விடுவர். இதை படித்துகொண்டிருக்கிற எத்தனை ஈழத் தமிழருக்கு 95 இல் யாழ்பாண இடப்பெயர்வின் போது தீக்குளித்து மாண்ட தமிழக உறவின் பெயர் தெரியும்?

ஈழத்தமிழர்களே

எங்களுக்காக இன்னொரு தேசத்தில் இன்னொருவன் தன்னையே மாய்த்தான் என்பது பெருமைப்படக் கூடிய விடயமில்லை. மகிழ்வடையக் கூடிய விடயமில்லை. வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம். வாருங்கள் ஒருவரையொருவர் எங்கள் மூஞ்சிகளில் துப்பிக் கொள்வோம்.

முத்துகுமரன்கள் வேண்டாம்.

- *சயந்தன்*

## தீ கொழுத்தத் தணல் கொடுக்கும் நாட்டில் தீக் குளிப்பா???

என்ன எல்லோரும் இடிஞ்சு போய் இருக்கிறீங்கள்?? எல்லோரும் வெட்கித் தலை குனிஞ்சு நாக்கைக் கீழ போட்டு வாலை ஆட்டுற நிலையில இருக்கிறோம் என்றா??? ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன்.. என்றே எங்கட தம்பி பிரபாவே சொல்லியிருக்கிறார்.

ஈழத்திலை ஒரு உயிரைப் பாதுகாக்கத் தானே எங்கட உறவுகள் இருக்க இடமில்லாமல் ஆமி அடிக்க அடிக்க உந்த பாரத மாதாவின்ர படைகள் ஆயுதம் அள்ளி அள்ளிக் கொடுக்கக் கொடுக்க ஓடி ஓடி ஒளியினம். ஒரு உயிர் முக்கியம் இல்லை என்றால் ஏன் அவையள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கை போய் இருக்க முயற்சி செய்திருப்பீனம் தானே??? அங்கை போய் அவங்களின்ர சித்திரவதைகளுக்கை ஆளாகி ஏன் சாக வேணும் என்று தானே உந்த ஊர் விழுங்கிப் படையள் பல் குழல், பீரங்கி, உந்துகணை அடிக்கவும் ஓடி ஓடி ஒளியுதுகள்.

தமிழர்களைக் கொல்ல தீயை அள்ளி இலங்கை அரசிட்டை கொடுக்கிற நாட்டிலை உள்ள மனிதாபிமானம் உள்ள மகத்தான ஜீவன்களாகிய உங்களுக்கு நாங்கள் என்ன செய்வோமோ தெரியாது?? என்றென்றும்,.....நாம் இனத்தால் தமிழர்கள் தான்.....

எங்கட பாசத்திற்குரிய உறவுகளே! உங்கள் உள்ளத்தில் இருக்கும் ஆதரவு எங்களுக்கு நன்றாகத் தெரியும். உங்கள் ஆட்சியாளர்கள் எலும்புத் துண்டுக்காக வாலாட்டுவதற்கு நீங்கள் ஏன் இப்படியான வழியில் உங்கள் உயிரை மாய்க்க வேண்டும்?? உங்கள் ஆதரவை, உங்கள் உணர்வைப் புரிந்து கொண்டவராய்த் தானே நாங்கள் இருக்கின்றோம்.. பிறகு ஏன் உறவுகளே இப்படியான வழி முறைகளைக் கைக் கொள்ள வேண்டும்?? இனிமேல் இப்படியான உயிரை மாய்க்கின்ற வேலைகளில் ஈடுபட வேண்டாம் எம் அன்புக்குரிய உறவுகளே??

உங்களால் முடிந்தவரை அகிம்சை ரீதியாக ஏதாவது செய்யுங்கள்?? அகிம்சை மூலம் உங்கள் அரசிற்கு ஏதாவது புரிய வைக்கப் பாருங்கள்?? எங்களிற்கு எப்போது தான் விடிவு கிடைக்குமோ??

- *சக்(ங்)கடத்தார்*

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**Jan 19 @ 12:00**

**உண்ணாநிலை போராட்டம்**

*பிரித்தானியா வாழ் தமிழ் இளையோர் மேற்கொள்ளும் சுழற்சி முறையிலான உண்ணாநிலை போராட்டம்.*

19-01-2009 *முதல்* 31-01-2009 *வரை*

*இடம்:* Parliament Square.

Nearest Station : WESTMINISTER

*தொடர்புகளுக்கு:* 075 8830 9496

**Jan 31 SATURDAY @ 13:00**

**ஆர்ப்பாட்டப் பேரணி**

*மரணத்தின் பிடியில் இருந்து தாயக மக்களை காக்க பிரித்தானிய தமிழர் பேரவை நடத்தும் ஆர்ப்பாட்டப் பேரணி.*

*ஆரம்பமாகும் இடம்:* MILLBANK (Tate Britain).

*முடிவடையும் இடம்:* TEMPLE PLACE.

Nearest Station : PIMLICO, VAUXHALL

*தொடர்புகளுக்கு: பிரித்தானிய தமிழர் பேரவை* 020 8808 0674, 078 2846 5103

**Feb 01 MONDAY @ 17.30**

**நூல் வெளியீடு**

*திரு சத்தியேந்திரா, மூத்த பேராசிரியர் குல்ரங், கலாநிதி சதானந்தன் உட்பட அனைத்துலக அறிஞர்களின் கட்டுரைத்தொகுப்பு "இலங்கை இனமோதுகையின் சர்வதேசப் பரிமாணம்" நூல் வெளியீடு*

Sivayogam

180-186 Upper Tooting Road, Tooting

London, SW17 7E

*தொடர்புகளுக்கு:* 079 8543 3782

*உங்கள் நிகழ்வுகள் தொடர்பான விபரங்களையும் பிரசுரிப்பதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்*

*ஒரு பேப்பர்*

உங்களுக்குத்தேவையான இலங்கை இந்திய உணவுப்பொருட்களை நியாயமான விலையிலும், தரமான சேவையுடனும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்!

PRM
பொதிகை
Phothihai
INDO-LANKA MARKET

வந்து பாருங்கள்!
வாங்கி மகிழுங்கள்!



News, Mag's, Booze, Tobbaco, Sweets, Snacks, Halal meat, Fresh Vegetable, Indo-lanka foods, Household and Hardware etc...

- எல்லாமே கிடைக்கும் -

Contact: 015 1259 8115
394/396 Prescot road, Liverpool L13 3DA
Open : 7.00AM - 10.00PM 7 Days



# Indra Sebastian Solicitors

Administrators of Oaths

**உங்கள் தேவை எங்கள் சேவை**

வியாபார நிலையம் வாங்க விற்க குத்தகைக்கு எடுப்பதற்கு, உங்கள் வசதிக்கும் வல்லமைக்கும் ஏற்ப சிறப்பான வழிகாட்டலுக்கு தனித்துவமான எம்மை நாடுங்கள்

**பிரித்தானிய குடிவரவு விசா**

தற்போது நடைமுறையிலிருக்கும் புள்ளி அடிப்படையிலான முறையின் கீழ் சரியான ஆலோசனை வழங்கப்படும்

- Immigration
- Home Office Same Day Visa Service
- Work Permits, HSMP, SEGS
- Business Persons
- Doctors - Medical Training Initiatives
- Care Homes - Cares & Nurses
- Hospitality - F&B, Receptionist, Waiters etc.
- Skilled Workers & Domestic Servants
- Marriage & Certificate of Approval
- Asylum & Human Rights
- European Applications (EEC, WRS)
- Entry Clearance & Visa Refusals Appeal
- Students
- Nationality (UK & Sri Lanka)
- Long Term Residency in UK

**Conveyancing** - Sale, Purchase & Lease of Commercial and Residential Properties and all other types including landlord & Tenant disputes

**Intellectual Property**
Protect your business and goodwill. Trademarks, Copyrights & Patents Litigation/Debt Collection/Business, Disputes

**Matrimonial** - Divorce & Ancillary, Proceedings Employment



Tel: 020 8427 3303 Fax: 020 8427 3313
144 Station Road, Harrow, Middlesex HA1 2RH
Website: issolicitors.co.uk | Email: info@issolicitors.co.uk

SLTWG

*South London Tamil Welfare Group*
தென் லண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பு

*Enhancing the quality of life of tamil community.*

**வேலை தேடுவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!**

## Employment Support Course

(includes basic IT & English)



FREE COURSES for TAMILS!



Certificates given!!!

Travel & Childcare expenses given!
We welcome people with Disability.

Support Classes Every Month!
At Mitcham, Surrey.

**Course modules:**

- Interview Techniques.
- CV preparation & Job search;
- Application form filling;
- Team work; Presentation skills;
- Motivation & Time Management;
- Internet & E-mails;
- Basic MS Word & Excel.
- Skills for Life;

Telephone: 0208 646 1193 to Register.
(You must be eligible to work in the UK).

SLTWG Employment Training Centre
Ambassador Suite3, Justin Plaza 3,
341 London Road, Mitcham,
Surrey CR4 4BE.

SUPPORTED BY
LONDON DEVELOPMENT AGENCY
WORKING FOR THE MAYOR OF LONDON

**please telephone before visiting our Centre**

LYCAFLY.com
Travel the world for Less

Fares correct at the time of publication 22nd Dec 08

# MERRY CHRISTMAS AND A HAPPY 2009

Want to try something new ?
Login to
www.LycaCruise.com

www.Lycafly.com

All fares
Return incuding
taxes.
Subject to availability.
Conditions may apply

IATA ABTA

from London Heathrow
# COLOMBO
from £425
Return flights including taxes

## CALL US
## 0208 902 1040
Free Phone 0800 012 0500

Bombay
Delhi
from £320

Chennai
from £360

# தமிழரின் உயிரைக்........

(15ம் பக்கத் தொடர்ச்சி)

அன்பிற்குரிய சர்வதேச சமூகமே, நம்பிக்கைகுரிய ஒபாமாவே,

உங்கள் மீது எங்களுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. ஆனால், இறையாண்மை கொண்ட ஒரு குடியரசு தம் குடிமகனை இன ஒதுக்கல் மூலமாக கொடுமைப்படுத்தாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

வசதிக்காக அமெரிக்காவின் கடந்த காலத்தையே எடுத்துக்காட்டாக சொல்லலாம். உலகப்புகழ் பெற்ற குத்துச்சண்டை மாவீரன் முகமதலி சொன்னானே, என் சருமத்திலிருக்கும் கொஞ்ச வெண்மையும் கற்பழிப்பின் மூலமாகவே வந்திருக்குமென்று.

நீங்கள் அமைதியாக இருக்கும் வரை இந்தியா வாயே திறக்காது. ஒட்டுமொத்த தமிழர்களும் அழிக்கப்பட்ட பிறகு வேண்டுமானால் அது நடக்கும். அதுவரை, இந்தியாவின் வாயைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்களா? வன்னியில், விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர்தான் நடக்கிறது என்கிறார்கள். புலிகள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள் என்கிறார்கள். அப்படியானால் அரசு சொன்ன பகுதிக்கு வந்த மக்களை ஏன் கொலை செய்தார்கள்? இது ஒன்று போதுமே, தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளைச் சார்ந்து நின்றாலும் சரி, இலங்கை அரசைச் சார்ந்து நின்றாலும் சரி, தமிழர்கள் என்ற காரணத்திற்காகவே அவர்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதற்கு. இது இனப்படுகொலை இல்லையா?

இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆயுதம் கொடுத்தும், ஜப்பான் பணம் கொடுத்தும், கூடுதலாக, இந்தியா நாட்டாமை செய்தும் தமிழர்களைக் கொல்கின்றனரென்றால், நீங்கள் உங்கள் மௌனத்தின் மூலமாகவும், பாராமுகத்தின் மூலமாகவும் அதே கொலையைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை ஏன் உணரவில்லை? ஆயுதம் தாங்கி போராடுவதால் மட்டுமே யாரும் தீவிரவாதியாகிட மாட்டார்கள். அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார். மறத்திற்கும் அஃதே துணை என்று பாடியுள்ளான் எங்கள் திருவள்ளுவர்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்கிறார் ஜெயலலிதா. என்னவோ பிரச்சினையே புலிகள் ஆயுதம் எடுத்ததால் தான் வந்தது என்பதைப் போல.. உண்மையில், புலிகள் தமிழீழ இன அழிப்பிலிருந்து உருவாகி வந்தவர்களே தவிர, காரண கர்த்தாக்கள் அல்லர்.(They are not the reason: just an outcome)

இந்தியா சொல்லும் காரணங்கள் அடிக்கடி மாறுவதிலிருந்தே இந்தியா நியாயத்திற்குப் புறம்பாகத்தான் இந்தப்போரில் ஈடுபட்டிருப்பது அம்பலமாகி இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழலில் நீங்கள் ஏன் நேரடியாகத் தலையிடக் கூடாது?

புலிகள் போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி ஆயுதம் குவிக்கிறார்கள் என்றது இலங்கை. சந்திரிகாவோ, ரணிலோ, மகிந்தாவோ கடந்த காலங்களில் ஒரு கடவுளாக அல்ல, மனிதர்களாகக் கூட நடந்து கொண்டதில்லை. இவர்கள் ஒரு நிர்ப்பந்தத்தின் பெயரில் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டுவிட்டார்கள். என்பதால் மட்டுமே போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும். புனரமைப்புப் பணிகளில் ஈடுபடக்கூடாது என்று எதிர்பார்ப்பது என்ன வகை நியாயம்?

தாங்கள் நேர்மையாக நடந்து கொள்வோம் என்ற நம்பிக்கையை உண்டாக்குவது மூலமாக மட்டுமே போராளிகளை ஆயுதத்தைக் கீழே வைக்கச் செய்ய முடியும். கடந்த கால அரசுகள் எவையும் அப்படி செயற்படவில்லை. உதாரணம் ரணில்- கருணா.

இப்போது சர்வதேச செஞ்சுலுவைச் சங்கத்தின் அம்புலன்ஸ்களைத் தாக்கினார்களே, அவர்களும் விடுதலைப்புலிகளா? பிரான்சின் 17 மனித உரிமையாளர்களைக் கொலை செய்தார்களே, அவர்களும் விடுதலைப் புலிகளா? சீனாவின் டாங்கிகள், இந்தியாவின் உளவு விமானங்கள், பாகிஸ்தானின் ஆர்டிலரிகள் மட்டுமல்ல இப்போது எம்மக்களைக் கொலைசெய்து வருவது சர்வதேச சமூகத்தின் மௌனமும்தான் என்பதை எப்போது உணர்வீர்கள்? நியாயத்தின்பால் பெருவிருப்பு கொண்ட ஒரு மக்கள் சமூகம் பூமியிலிருந்து முற்றாகத் துடைத்தழிக்கப்பட்ட பிறகா?

அபாரிஜின்கள், மாயா, இன்கா வரிசையில் நாங்களும் சேர்க்கப்படுவது உங்கள் நோக்கமென்றால், எங்கள் பழங்கதைகள் ஒன்றின் படி ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு வீட்டிலிருந்து ஒருவர் வந்து உங்கள் முன்னால் தற்கொலை செய்து கொள்கிறோம். எங்கள் சகோதரிகளையும், குழந்தைகளையும் விட்டுவிடச் சொல்லுங்கள். தாங்க முடியவில்லை. அவர்களெல்லாம் மனமார சிரிப்பதை ஒருநாள் பார்ப்போம் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் போராடிக் கொண்டிருப்பதே.

ஒரு பேச்சுக்கு ஒத்துக் கொள்வதென்றாலும் கூட, விடுதலைப்புலிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றாலும் அப்படி ஒரு தண்டனையை வழங்கும் யோக்கியதை இந்தியாவுக்கோ, இலங்கைக்கோ கிடையாது.

காலம் கடந்து வழங்கப்படும் நீதி அநீதியைவிடக் கொடுமையானது.

1.இந்தியா உடனடியாக தமிழீழத்தின் பகுதிகளிலிருந்து தன் துருப்புகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வதோடு, மேற்கொண்டு செயற்கைக்கோள் உதவிகள், ராடார் போன்ற உதவிகளைச் செய்யக்கூடாதென்று சர்வதேச சமூகத்தால் கண்டிக்கப்பட வேண்டும்.

இலங்கையோடு இந்தியா அரசு நடத்தும் முக்கியத்துவமற்ற பேச்சுப்பரிமாற்றங்கள்கூட சர்வதேச சமூகம் மூலமாகவே நடக்க வேண்டும். தமிழக மக்களிடமும், உலகெங்கும் பரந்து வாழும் தமிழீழத்தாரிடமும் இந்தியா பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்.

2.ஐநா பொதுச்செயலாளரான பான் கி மூன், தொடர்ந்து சீனாவிற்கு ஆதரவான நிலைப்பாட்டிலிருந்து, ஒருதலைப்பட்சமாக செயல்பட்டு வருவதால், ஈழம் தொடர்பான முடிவெடுக்கும் அதிகாரம் அவருக்கு வழங்கப்படக் கூடாது.

3.இலங்கை அரசு எந்தெந்த நாடுகளிடமெல்லாம் கோரப்பட்டு புலிகள் மீது தடை விதிக்கப்பட்டதோ அந்தந்த நாடுகளில் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு, தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர் என்ற குற்றத்திற்காக சிறையிலிருக்கும் அதன் உறுப்பினர்கள் எதுவித நிபந்தனையுமற்று உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

4. புலிகளின் உறுப்பினர்கள் மீதான பாஸ்போர்ட் தொடர்பான குற்றங்கள் மன்னிக்கப்பட்டு, அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

5. புலிகளோடு தொடர்புடையது என்னும் குற்றச்சாட்டின் பேரில் தடை செய்யப்பட்ட தொழில் நிறுவனங்களின் உரிமம் மீண்டும் அளிக்கப்படுவதோடு, தக்க நட்ட ஈடும் வழங்கப்பட வேண்டும்.

6. ராஜீவ்காந்தி கொலை வழக்கு இண்டர்போலால் விசாரிக்கப்பட்டு, உண்மையான குற்றவாளிகள் இனம் காணப்பட வேண்டும்.

7.பிரணாப் முகர்ஜி, கோத்தபாய ராஜபக்ஷே, சந்திரிகா, உதய நாணயகார, கேகலிய ரம்புக்வெல, பசில் ராஜபக்ஷ, மகிந்த, பொன்சேகா போன்றோர் நார்கோ அனிலிசிஸ் சோதனைக்குட்பட வேண்டும்.

8.அமைக்கப்பட போகிற தமிழீழத்தை அங்கீகரிக்கிற உரிமையைமட்டுமே சர்வதேசம் மேற்கொள்ளலாமே தவிர, அது யாரின் தலைமையில் அமைய வேண்டும் என்பதை தமிழீழ மக்கள் தான் முடிவுசெய்வார்கள்

9. புலிகள் கை பலவீனமான நேரத்தில், மலையக மக்கள் மீது நடந்த வன்தாக்குதல், எதிர்காலத்தில் அப்பகுதிகளில் மீண்டும் ஒரு பாரிய இன அழிவு ஏற்படுத்தப்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதால், மலையக மக்கள் தமிழீழத்தோடு இணைய விரும்புகிறார்களா என்பதை வாக்கெடுப்பு மூலம் அறிந்து அதன்படி செயல்பட வேண்டும். இந்த விசயத்தில் மலையக மக்களின் முடிவே இறுதியானது.

10. சென்னையில், குடிபோதையில் அப்பாவித் தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தாவின் தண்டனைக்காலம் பூர்த்தியாகும் காலத்திற்கும் இலங்கைக்குத் தப்பிச் சென்று விட்டதால், அவர் கைது செய்யப்பட்டு, தமிழக போலிசார் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

11. பத்திரிகையாளரான லசந்தவின் கொலைக்குக் காரணமான அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்.

12. தமிழ்நாட்டிற்கு தஞ்சம் புகுந்திருக்கும் சிங்கள பத்திரிகையாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

13.தமிழ்நாட்டிற்கு அகதிகளோடு அகதியாக வந்த சிங்களத்தம்பதியர் மீதான பாஸ்போர்ட் குற்றச்சாட்டு நீக்கப்பட்டு, அவர்களும் அகதிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

14. சுட்டுக் கொலை செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்கான வாழ்வாதாரங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

அருமைத் தமிழ் மக்களே,
அநீதிகளுக்கெதிரான போராட்டத்தில் நம் சகோதரர்களும், பிள்ளைகளும் அறிவாயுதம் ஏந்தியிருக்கிறார்கள். நான் உயிராயுதம் ஏந்தியிருக்கிறேன். நீங்கள் நகலாயுதம் ஏந்துங்கள். ஆம், உங்கள் கையில் கிடைத்திருக்கும் இந்தத் துண்டறிக்கையை நகலெடுத்து, உங்கள் நண்பர்கள், உறவினர்கள், மாணவர்கள் வசம் கொடுத்து, போராட்டத்திற்கான ஆதரவைப் பெருகப் பண்ணுங்கள் நன்றி.

## முத்துக்குமாரா!

முத்துக் குமாரா!
தொப்புள் கொடி தந்த உறவே!
நீ செத்து விட்டதாகத்தான்
சொல்கின்றார்கள் எல்லோரும்!
இல்லைத் தம்பி நீ சாகவில்லை!
உயிர்கொண்டும் பிணமாகித் திரிகின்ற
பலரில் உணர்வோடு தமிழனாய்
உயிரும் மானமும் எனத் தமிழ்
விடுதலைக்கோர் கருவானாய்!
தியாகத்தின் தீபமே உன்னைத் தீ
எரிக்குமா?
நீ மூட்டிய தீயிலே குருடர் கண்
திறக்குமா?
இருட்டிய கிழக்கது இனியாயினும்
வெளிக்குமா?!
உயிருன்னைச் சுடும் என உணர்ந்திட்ட
பொழுதிலும் உண்மையை
உரத்துச்சொன்னாய் உயிராயுதம்
ஆகியே உன்னதம் ஆகிவிட்டாய்!
தமிழ் அது உடையல்ல உணர்வென்று
நீ உலகுக்கு காட்டிவிட்டாய்!
தன்மான நெருப்பிற்கு எங்கள் தம்பியே
நீ நெய் ஊற்றிவிட்டாய்!
ஆட்சியே பெரிதென்று எண்ணுவோர்
மத்தியில் தமிழன் மானத்தை
நாட்டிவிட்டாய்!
கரைவேட்டிகள் எரிபட உன்னையே
ஏனடா நீ எரியூட்டிவிட்டாய்?!
பொய்யினை பொசுக்கவே உன்னையே
ஏனடா என் தம்பி நீ தீயிலிட்டாய்?
உண்மைக்கு கூட வெளிச்சங்கள்
தேவைதான் என்றெண்ணச் செய்து
விட்டாய்,
ஈழத்தின் இரத்தமே
நான் உன் சொந்தமே"
அதைத் தீயிட்டா உணரச்செய்வாய்?
தமிழ் ஆயுளின் சொந்தமாய் நீ
இருப்பாயடா அஞ்சலி செய்து
நின்றேன்!.
வேண்டியே நிற்கின்றேன் உங்களிடம்
நான் கண்ணீர்மல்கிட கெஞ்சுகின்றேன்!
தீயிட்டு பாடம் படிப்பிக்க வேண்டாம்
உணவின்றி நீங்கள் தவித்திட
வேண்டாம்!
தோளொடு தோளென நின்றிட்டால்
போதுமே
வெற்றி தமிழுக்கே வந்திங்கு சேருமே!

- தமிழ்த்தங்கை


## தமிழில் இணையத்தளம் உருவாக்கும் பயிற்சி

நீங்கள் தமிழில் இணையத்தளம் உருவாக்கும் பயிற்சியைப் பெற வேண்டுமா?

கிழமை நாட்களில் மாலை நேரத்தில் 3 மணி நேர பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

5 வகுப்புகளில் பயிற்சி பெற்ற பின் நீங்களாகவே ஒரு இணையத் தளத்தை உருவாக்கும் ஆற்றல் பெறுவீர்கள்.

வகுப்புக்கள் ஆரம்பமாக இருக்கின்றன !

இடத்திற்கு முந்துங்கள்

பதிவு செய்வதற்கு

தொலைபேசி: 020 7043 4316

45B, Crusoe Road, Mitcham, CR4 3LJ

# இப்போது அறிமுகப்படுத்துகிறோம்

## சுவிஸ் வாழ் தமிழர்களின் இல்லமெங்கும் தமிழ் பரப்பும் தொழில்நுட்பம் தற்போது லண்டனிலும்....

துல்லியமான ஒலித்தெளிவுடன் "புலிகளின் குரல்" "தமிழீழ வானொலி" உட்பட 60க்கும் மேற்பட்ட தமிழ் வானொலிகள்

புலிகளின் குரல்
தமிழீழ வானொலி
ஐரோப்பிய தமிழ் வானொலி
சூரியன் FM
தமிழ் கிறிஸ்தவ வானொலி
வெற்றி FM
மற்றும் பல வானொலிகள்..

துல்லியமான ஒலி, ஒளித்தரத்தில் அனைத்து தமிழ் தொலைக்காட்சிகளும்



**£150 மட்டுமே!**

**புதிய சட்டிலைட் இணைப்புகளுக்கு அழையுங்கள்**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

# 020 7183 0367

http://www.nallatv.co.cc/

GTV தீபம் KTV கலைஞர் IBC சூரியன் FM SOORIYAN FM TODAY'S BEST MUSIC

# வன்னிக்கோர் கடிதம்: தங்கச்சிக்கு சின்னண்ணா எழுதுவது..

நாட்கள் வந்துவிட்டன.
தடவும் கரங்கள் எதுமற்று
நான் நிற்கையிலும்
எனைச் சூழ்ந்து முழ்கடிக்க
துயரத்தின் சேதிகள்
காதுக்கெட்டின.
தோன்றிட உருவங்கள்
எதுவுமற்று,
தனித்தே கிடக்கிறதாம்
என் வீட்டு
நிலைக்கண்ணாடி
இனி என்ன எம் கனவுகளிலும்
சிருங்கார ரசம் வழியும்
நடனங்களை மறப்போம்.
எதுவுமற்ற ஊரினில்
நாய்களின்
ஊளையே கீதங்களென
எண்ணி இருப்போம்.

*அன்புள்ள அப்பா,அம்மா, தங்கச்சி அறிவது,*

அப்பா நீங்கள் எனக்கு சொல்லித் தந்ததின் படி... நான் இங்கு நலமாய் இருக்கின்றேன், உங்கள் நலமும் அதுபோல் அமைய இறைவனை வேண்டுகின்றேன்? என்றுதான் வர வேண்டும். ஆனால் எனக்கு தெரியும் நீங்கள் அங்கு நிச்சயமாக நலமாக இருக்கப் போவதில்லை என்று.

ஆனால் உயிரோடாவது இருக்க வேண்டுமேன வேண்டுன்றேன். அம்மா, அப்பா, தங்கச்சி நீங்கள் என்னுடன் கதைத்து இன்றுடன் 386 நாட்களாகின்றது. இனிமேல் கடிதம் கூட உங்களை வந்தடையாது என்பது எனக்கு தெரியும். முதல் முறை நாங்கள் இடம்பெயர்ந்த போது எங்களுர் தபலகமும் எங்களுடன் சேர்ந்தே இடம்பெயர்ந்தே இருந்தது. நாங்கள் அங்கு போய் எங்கள் முகவரிகளை மீள்பதிவு செய்து கொண்டோம். ஆனால் இந்த முறை நீங்கள், தர்மபுரத்தில் இருந்ததாகவும், விசுவமடுவில் இருந்தாகவும், புதுக்குடியிருப்பில் இருந்ததாகவும் யாரும் சொல்லும் போது, அந்த இடத்தில் இருந்தும் மக்கள் இடம்பெயர்வதாக புதினமும், சங்கதியும் சொல்லும்.

எல்லாவித முன்முடிவுகளோடும் இணையத்தளங்களில் வரும் பெயர்களை படிக்கின்றேன்.மீண்டும் மீண்டும்.... வெளியாகும் புகைப்படங்களையும், வீடியோக்களையும் உன்னிப்பாக பார்க்கின்றேன். எதிலும் நீங்கள் இல்லை தற்காலியமாக மூச்சு விட முடிகின்றது.

அம்மா, நீங்கள் என்னையும், அண்ணாவையும் ஒட்டுமொத்தமாக மன்னிக்க வேண்டும். உங்களுக்கும், அப்பாவுக்கும் உங்களின் மூன்று பிள்ளைகள் பற்றி இருந்திருக்க கூடிய கனவுகளில் ஒன்றைக் கூட நாங்கள் யாரும் நிறைவேற்றவில்லை.

அம்மா, நீங்கள் சோறு சாப்பிடாமல் விட்டு 17 வருசமாகின்றது. அண்ணா தனது சிவப்பு சைக்கிளை மாணவர் கலாசாலை ரியூட்டறிக்கு பக்கத்து வீட்டில் விட்டுப்போட்டு இயக்கத்திற்கு போனதில் இருந்து இன்றுவரை நீங்கள் சோறு சாப்பிடமால் விடுவதற்கு காரணங்கள் மாறி மாறி இருந்து கொண்டே இருக்கின்றது. நீங்கள் 17 வருசமா சோறும் சாப்பிடாமல், மச்சம் சாப்பிடுவதையும் விட்டு, கிழமையின் எல்லா நாட்களையும் விரத நாட்கள் ஆக்குமளவிற்கும் எந்த கடவுளுக்கும் இரக்கமே வரவில்லை.

அம்மா, நீங்கள் அடிக்கடி எங்கள் காணியில் நிற்கும் தென்னை மரங்களை எல்லாம் நீங்களும், பெரியம்மாவும் குடத்தில் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றி வளர்ந்தாய் சொல்லுவீர்கள். ஆனால் நாங்கள் முதல் தடவை இடம்பெயர்ந்து திரும்பி வந்த போது மரங்களும், நாங்களும் பட்டுப்போயிருந்தோம். ஆனால் நீங்கள் உங்கள் வாழ்க்கையின் எல்லா சந்தோசங்களையும் மிகுதியாய் வீட்டில் இருப்பவர்களுக்கு சமைந்து போடுவதிலேயே கண்டீர்கள்.

கடைசியா போனில் கதைக்கும் போது சொன்னீர்கள் தங்கச்சி கனவு கண்டவளாம்..தன்னை பாம்பு கொத்த கலைப்பதாக, இறுதியில் அவள் களைத்து கீழ விழுந்த போது, சின்னண்ணா வந்துதான் தன்னை கூட்டிக் கொண்டு போனதாகவும் சொன்னீர்கள். இப்போது அவள் எங்கே இருக்கிறாள்?.

பாம்புகள் அவளை கலைத்திருக்க கூடும். செல்கள் அவள் அருகே வீழுந்திருக்க கூடும். ஆனால் அவளை தேற்றுவதற்கு அவளின் சின்னண்ணாவும், பெரியண்ணாவும் அவளருகே இல்லை. தங்கச்சி உன் சின்னண்ணாவை மன்னித்து விடு. நீ சோர்வுற்று கீழே வீழ்ந்திருந்தாலும் உன்னை தூக்க முடியாது இருப்பது கேவலம் தான். உன் வாழ்க்கையில் சின்னண்ணா உனக்கென்று ஒரு துரும்பை கூட தூக்கி போடவில்லை. நடு இரவுகளில் நித்திரை கலைந்ததும், அழத் தோன்றுகின்றது.

அப்பா, ஒரு முறை தங்கச்சியை நான் பேசிய போது, நீங்கள் எனக்கு அடிக்க வந்தீர்கள். அவளை பேசுவதை கூட உங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத போது, இன்று அவள் எங்கிருக்கின்றாள் என்ற செய்தியை அறிய முடியாது இருப்பதிற்கு நீங்கள் அப்படி ஒரு குற்றமும் செய்யவில்லையே.

நாங்கள் ஆயிரம் தடவை சொல்லியும் நீங்கள் இடிந்திருந்த வீட்டை இரண்டாம் தடவை கட்டினீர்கள். பட்ட தென்னை மரத்திற்கடியில் இன்னொரு தென்னை வைத்தீர்கள். உடைந்த மதிலை அகற்றி, சீமை கிளுவை வேலி போட்டீர்கள். இவையெல்லாம் உங்களின் இறுதி வாழ்க்கைக்கு முதல் நீங்கள் அவளுக்கு சேர்க்க வேண்டும் என்று செய்தது. இறுதியில் எங்கள் வீட்டை, காணியை, வேலியை ஒரு நாளில் 5 வருடத்திற்கு முன்பு இருந்தது போல் ஆக்கிவிட்டீர்கள்.

எனக்கு வரும் ஒவ்வொரு தொலைபேசி அழைப்பிற்கும், ஆயிரம் வேண்டுதல்களுனேயே தொலைபேசியை கையெடுக்கின்றேன். இந்த அழைப்பு எந்த கெட்ட செய்திக்காகவும் இருக்க கூடாது என்று.

அம்மா, அப்பா, தங்கச்சி தயவு செய்து நீங்கள் உயிருடன் வர வேண்டும். என் உயிரை கொடுத்தாவது உங்களின் மகனாய், உனது சின்னண்ணாவாய் நானிருப்பேன். ஆனால் நீங்கள் எனக்கு உயிருடன் வேண்டும்.

*- கோசலன்*

# இனி!! என்ன செய்யப் போகின்றோம்?

தனிமனித வாழ்க்கையின் அத்தனை சுதந்திரங்களையும் இழந்துவிட்டு தமிழனாகப் பிறந்ததன் காரணமாகவே தண்டிக்கப்படுகின்றோம் நாம். காலம் நமக்கொரு விடியலைத்தரும் என்ற நோக்கில் நகர்ந்து கொண்டிருந்தாலும் இதுவரை காலமும் நாங்கள் கற்றுக் கொண்ட வேதனைப் பாடங்களை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டிய முக்கிய தருணத்தில் இருக்கின்றோம்?!

எங்களுக்கும் ஆசைதான் தினமொரு படமும், ஐ.பொட் இல் பாட்டும் கேட்டுக் கொண்டு where is the party' என்று பாடிக்கொண்டு திரிய் ஆனால் நாங்கள் பிஞ்சுகளாகவே நசுக்கப் படுகின்றோமே பாட்டியாகும் வயதை காலம் நமக்குத் தருமா? நம் பரம்பரை ஆண்ட பூமியை அடிமைப்படுத்தி ஆள நினைக்கும் பேரினவாதத்தில் பயங்கரங்களை, பச்சைத் துரோகங்களை நாம் துகிலுரிக்க வேண்டாமா?

எங்கள் அவலங்கள் சிலருக்கு புலம்பல்களாகவே இருக்கின்றன, எங்கள் ஓலங்கள் பிரச்சாராங்களாகவே விளங்கிக் கொள்ளப்படுகின்றன. என்பது வேதனைதருகின்ற செய்திதான் இருந்தாலும் வேதனைப்பட்டுக்கொண்டே இருந்தால் ஒரு இனமே இல்லையென்றாகிவிடும். 'சொன்னவர் சொன்னாலும் கேட்பார்க்கு மதியேது?' ஆயிரம் குறைகளைப் பேசுவதறகு ஒருவன் போதும் ஆனால் உண்மையினை எடுத்துக்காட்ட ஆயிரம் குரல்கள் தேவைப்படுகின்றன அதனால் தான் தமிழராய் இணைவோம் தமிழரே அனைத்து பேதங்களையும் தூக்கி எறிந்துவிட்டு தன்மானம் கொண்ட தமிழனாக வாருங்கள் என்று வேண்டி நிற்கின்றேன்.

நாம் ஏன் போராளிகள் ஆனோம்? ஆயுதம் தூக்க நம்மை தூண்டி விட்டவர் யார்? இதற்கான விளக்கங்களை ஒவ்வொரு தமிழனும் புரிந்து கொண்டாலே போதுமானது. ஒரு நாட்டின் வளம் அதன் கல்வித்தரத்திலேயேதான் தங்கி உள்ளது. அதனால் தான் வேலைவாய்ப்பு, கல்வியில் சிறந்தோரை அதிர்ஷ்டசீட்டு மூலம் தன்னகத்தே அழைத்துக் கொள்ள விரும்பி நிற்கின்றது அமெரிக்கா. கல்வியின் சிறப்பை நாம் அனைவரும் அறிவோம்.

எத்தகைய இனத்திற்கும் சளைத்து விடாமல் சவால்களை எதிர்கொள்ளும் இனம் தமிழினம். அந்தத் தமிழினத்தின் கல்வி அழிப்பை தன் இன அழிப்பின் முதல் வித்தாக்கியது சிங்களப் பேரினவாதம். சிங்கள மாணவர்களை விட அதிக புள்ளிகளைப் பெற்ற தமிழ் மாணவர்களைப் புலிகளாகவே பார்த்ததோ என்னவோ 'கல்விதரப்படுத்தல்' என்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்தது.

இந்தத் திட்டமானது வெட்டுப் புள்ளிகளை விகிதாசார அடிப்படையிலேயே வழங்கிச் சிங்களவருக்கு உயர்கல்வி செல்ல பெரும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. முதல் முதலாகத் தமிழ் மக்களின் ஆணிவேராக விளங்கிய கல்விக்கு முட்டுக்கட்டை போட்டு தன் கொடூர புத்தியை காட்டியது சிங்களம். இதன் காரணமாகவே புகழ் பெற்று விளங்கிய யாழ் நூலகசாலையை 1981ம் ஆண்டு மே 31ம் திகதி தீயிட்டுத் தன் வன்முறை வெறியைத் தீர்த்துக் கொண்டது சிங்களம்.

அடுத்து நில அபகரிப்பு. தமிழன் வாழ்ந்த இடங்கள் எல்லாம் தன்னைப் போலவே வளமாக்கினான். சிறப்பாக்கினான் தன்னிறைவாக்கினான், இதைக் கண்டு பொறுக்காத சிங்கள அரசு. நிலங்கள் அல்லாத சிங்கள மக்களுக்கு நிலம் கொடுக்கின்றோம் என்ற பெயரில் தமிழர் வாழ் இடங்களில் எல்லாம் சிங்கள மக்களைக் குடியேற்றினார்கள்.

திருகோணமலைப் பிரதேசத்தில் பெரும்பான்மையாக இத்தகைய குடியேற்றங்கள் நிகழ்த்தப்பட்டன. திருகோணமலை மீது முழு ஆதிக்கத்தையும் அரசு கொண்டு வந்தது. மிக முக்கியமான கேந்திர நிலையமாக விளங்கிய திருகோணமலைப் பிரதேசத்தை முழுக்க முழுக்க தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து எங்கும் சிங்களம் என்பதை வெகு சிரத்தையுடன் முன்னெடுத்து நடத்தியது பேரினவாத அரசு.

தற்போது நடப்பது என்ன?! தமிழர் வாழ் பிரதேசங்கள் அனைத்தையும் சிங்கள மக்களுக்கேயென்றாக்கி ஒரு சின்ன வட்டத்துள் அத்தனை தமிழரையும் ஒடுக்கிவிட்டு மேற்குலக நாடுகளால் தடைசெய்யப்பட்ட கொத்தணிக் குண்டுகளைப் போட்டு மொத்தமாகத் தமிழினத்தை அழித்துவிட எத்தனிக்கிறது சிங்களம்? இதைக்கண்டு இனியும் கண் மூடிக்கிடப்போமா?!

மருத்துவவசதி இல்லை, சுகாதார வசதி இல்லை உணவு இல்லை உடையில்லை உறைவிடம் கூட இல்லை தினமும் ஓட்டம் வாழ்வின் மூலங்கள் எல்லாமே அழித்துக் கொண்டு பயங்கரவாதத்தை தாம் அடக்கிவிட்டோம் என்று சொல்கின்ற இந்த அரசின் பயங்கரவாதமுகத்தை நாம் வெளிச்சம் போட்டுக்காட்ட வேண்டிய தருணம் இது. ஆகவே புலம்பெயர்ந்த தமிழர்காள் ஒன்றுபடுவோம் செயற்படுவோம். எம் தமிழை நிலைநாட்டுவோம்.

*- அஞ்சனா*



# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ***ஒரு பேப்பர்*** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. Australian citizen, Green Card Holding senior employee in a leading company, 30 years old, 5' 11" tall seeks a matching bride, willing to live in USA. Ref: 1356

2. EU பிரஜா உரிமையுள்ள தற்போது இலண்டனில் படித்து தொழில் புரியும் வயது 29 உயரம் 5'8" பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1355

3. கனடாவில் எட்டு ஆண்டுகளாக வசிப்பவரும் பிரஜா உரிமை உள்ளவருமாகிய 29 வயது 5'3" உயரமுள்ள பட்டதாரி மணமனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 1354

4. ஏழு ஆண்டுகளாக பிரித்தானியாவில் வசிக்கும் ஏ எல் படித்த 38 வயது 5'11" உயரமுள்ள மணமகனுக்கு நிரந்தர வதிவிட உரிமை உள்ள மணமகளை தேடுகிறார்கள். Ref: 1353

5. In the UK since childhood, 30 years, 6' tall, a medical professional, seeks a matching bride who is tall, traditional and pleasant. Ref: 1352

6. Post Graduate Student in Australia, planning to settle down there, 30 years, 5' 7" tall, seeking a suitable bride. Ref: 1350

7. British Citizen, 35 years, 5' 4" tall, A/L qualified, willing to settle down in Canada, seeks a matching bride. Ref: 1349

8. In UK since 1997, now on 'leave to remain' status, 35 years, 5' 7", an accountant, seeks a matching bride in Europe or Canada with permanent residence. Ref: 1348

9. On work visa, 5 years in UK, a post-graduate, 32 years, 5" 7" tall, seeks a matching bride with permanent residence status, in an European country. Ref: 1347

10. கொழும்பில் தொழில்புரியும் ஏ எல் படித்த 31 வயது 5' 6" உயரமுள்ள மணமகனுக்கு வெளிநாடுகளில் Sponsor பண்ணக் கூடிய தகுந்த மணமகள் தேவை. Ref: 1346

11. 10 ஆண்டுகளாக லண்டனில் வசிக்கும் 32 வயது 5' 9" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref 1345

12. விசிற் விசாவில் கனடாவில் தங்கியுள்ள 36 வயது 5'7" உயரமுள்ள BSc Multimedia Production படித்த மகனுக்கு Sponsor பண்ணக்கூடிய மணமகளை பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1344

13. Dubai யில் Software Engineer (Senior Programmer) ஆக தொழில் புரியும் 30 வயது 5'11" உயரமுள்ள மகனுக்கு இலண்டனில் அல்லது ஐரோப்பாவில் மணமகளை பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1343

14. ஜேர்மன் குடியுரிமை உள்ள 28 வயது 5'8" உயரமுள்ள பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref. 1342

15. இலங்கையில் தொழில் புரியும் 5'5" உயரமுடைய 45 வயதுடைய, மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். விவாக இரத்துச் செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம். கனடிய /ஐரோப்பிய வதிவிட உரிமையுள்ளவர்கள் விரும்பத் தக்கது. Ref. 1341

16. கனடியப் பிரஜையும் 6' உயரம் 45 வயதுடைய விவாகரத்துச்செய்த மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் தேடுகிறார்கள் இலங்கையும் விரும்பத் தக்கது. Ref. 1340

17. பிரித்தானியப் பிரஜையும் 28 வயது 5' 10" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறார்கள். Ref. 1338

18. British citizen, in the UK since 5 years of age, MSc qualified and well employed, 28 years and 5' 10" tall, seeks a matching bride. Ref: 1335

19. லண்டனில் மாணவ விசாவில் படிக்கும் 27 வயது 5" 7" உயரமுள்ள மணமகனுக்கு கனடாவில் அல்லது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நிரந்தரவ வதிவிட உரிமை உள்ள தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1334

20. பிரித்தானியாவில் நிரந்தர வதிவட உரிமையுள்ள 38 வயது 5" 7" உயரமுள்ள கணக்கியல் பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். விவாக ரத்து செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம். Ref: 1333

21. ஐக்கிய இராச்சியத்தில் 7 ஆண்டுகளாக வசிக்கும் குடியுரிமை உள்ள 34 வயது 5'5" உயரமுள்ள A/L படித்த மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 1332

22. ஐக்கிய இராச்சியத்தில் 18 ஆண்டுகளாக வசிக்கும் குடியுரிமை உள்ள 37 வயது 5' 11" உயரமுள்ள படித்த மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். விவாக ரத்துச் செய்தவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும். Ref: 1331

23. ஐக்கிய இராச்சியத்தில் 2007ல் இருந்து மாணவ விசாவில் இருக்கும 22 வயது 5' 10" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 1330

24. கொழும்பில் தொழில்புரியும் A/L படித்த 32 வயது 5' 5" உயரமுள்ள மணமகனுக்கு கனடாவில் வதிவிட உரிமை உள்ள தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 1329

25. London இல் 16 வருடங்களாய் வசிக்கும், படித்து நல்ல தொழிலில் இருக்கும் 38 வயது, 5'3" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை பார்க்கின்றனர். Ref: 1328

26. மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்யும் A/L படித்த 32 வயது 5' 9" உயரமுள்ள மணமகனுக்கு, வெளிநாடுகளில் வதிவுடமை உள்ள மணப்பெண்ணை பார்க்கின்றனர். Ref: 1327

27. In the UK, since 2000 on holiday working visa, 28 years, 5' 9" tall, a graduate from the East London Uni., and well-employed, seeking a bride in Europe with permanent residence status. Ref: 1326

28. In Norway since 1996 on 'Leave to remain status', 42 years, 5' 7" tall, A/L educated, seeks a bride in EU or Canada with permanent residence status. Ref: 1325

29. பிரித்தானியக் குடியுரிமை உள்ள 31 வயதும் 5'7" உயரமும் உடைய A/L படித்த மணமகனுக்கு கனடாவில் ஸ்பொன்சர் செய்யக்கூடிய மணமகள் தேவை. Ref:1323

30. UK qualified professional, on 5 year-work-visa, 30 years, 6' tall, looking for a suitable bride. Ref: 1321

31. British born professional, 32 years, 5' 4" tall, seeking a matching bride. Ref: 1320

32. லண்டனில் 14 ஆண்டுகளாக வசிக்கும் 41 வயது 5'10" உயரமுள்ள படித்த மணமகனுக்கு UK யில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகளை எதிர் பார்க்கின்றார். Ref: 1319

33. Living in the U.K on Permanent Resident status, diploma holder and in permanent employment, 34 years old, 5' 7" tall, seeking an educated bride living in India. Ref: 1318

34. Canadian Citizen, over there since 1993, 32 years, 5' 8" tall, Software engineer seeking a matching Bride. *Ref: 1316*

35. In the UK since 2000 on student-visa, Graduate in Accountancy, 34 years , 5' 10" well employed, seeking a suitable bride with permanent resident status. *Ref: 1315*

36. Software Engineer, working in India, 30 years, 5' 7" inches tall seeking a suitable bride in Canada or EU countries with permananant residence status. Ref: 1312

37. Senior Manager, with Master's degree, a citizen of USA, 36 years, 5' 9" tall, seeking a matching professional bride in USA, or one willing to migrate to USA. Ref: 1307

38. In the UK since 1998, a graduate from London Uni., 35 years, 5' 6" tall, seeking a suitable bride with permanent residence state. Ref: 1306

## மணமகன் தேவை

39. Eight years in USA on work visa, a Master's degree holder, 31 years old, 5' 2" tall, looking for a matching groom. Ref: 1800

40. சிறு வயதிலேயே கனடாவில் குடியேறிய 25 வயது 5'8" உயரமுடைய மணமகளுக்கு தகுந்த மணமகனை கனடாவில் அல்லது அமெரிக்காவில் தேடுகின்றனர். Ref: 1699

41. In Canada from childhood, a graduate from Toronto Uni., working in Bank, 30 years old, 5" 5" tall, seeks a matching groom. Ref: 1698

42. Colombo Uni. Graduate, living in Colombo, 25 years, 5' 2" tall looking for a matching groom. Ref: 1697

43. In the UK since 1994, now on PR, a student of IT, 26 years old, 5' 4" tall seeks a matching groom. Ref: 1696

44. கொழும்பில் வசிக்கும் 21 வயது 5'1" O/L படித்த மணமகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்திலோ அல்லது கனடாவிலோ தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1695

45. In Canada since 2000, Jaffna Uni. Graduate, 43 years, 5' 3" tall, seeks a matching groom. Ref: 1694

46. கொழும்பில் பட்டதாரி ஆசிரியராகத் தொழில் புரியும் 36 வயது 5'2" உயரமுள்ள மணமகளுக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1693

47. நோர்வேயில் வளர்ந்த, ஐரோப்பிய ஒன்றிய குடியுரிமை உள்ள 26 வயது 5'5" உயரமுள்ள பட்டதாரி மணமகளுக்கு தகுந்த வரனை UK ல் பெற்றோர் தேடுகிறார்கள். Ref. 1691

48. In the UK since 2004, on student/work visa, 28 years, 5' tall, advanced diploma qualified and well employed bride, seeks a matching groom. Ref. 1690

49. கனடா குடியுரிமை உள்ள 30 வயது 5'4" உயரமுள்ள Business Management படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனை பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1687

50. பிரித்தானிய குடியுரிமை உள்ள 32 வயது 5'7" உயரமுள்ள திருமணமாகி இரண்டு ஆண்டுக்குள் விவாகரத்துப் பெற்ற Medical Engineer ருக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர்.Ref. 1686

51. இலங்கையில் வசிக்கும் 31 வயது 5'3" உயரமுள்ள B A பட்டதாரியான பெண்ணுக்கு தகுந்த மணமகனை கனடாவில் வசிக்கும் பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1688

52. In the UK since 2001 on student-visa, 34 years, 5' 6", doing Master, in Law, seeking a suitable bride from Sri Lanka or UK. Ref: 1198

53. British citizen, 35 years, 5' 7", Financial Accountant, well employed, seeking a matching bride. Ref: 1196

54. French citizen, graduate in Accountancy from UK-Uni, presently working in England, 30 years,5' 7", seeking a matching bride. Ref: 1195

55. கனடாவின் பிரஜையும் 35 வயது 5' 7" உயரமும் கொண்ட நன்கு படித்த பெண்ணுக்குத் தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். Ref. 1681

56. கொழும்பில் தொழில் புரியும் 24 வயது 5'2" உயரமுள்ள பெண்ணுக்குத் தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள Ref. 1682

57. நெதர்லாந்துப் பிரஜையும் 22வயது 5' 2" உயரமுள்ள Administration படித்து முடித்துள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள் 1683

58. பிரித்தானியப் பிரஜையும் 25 வயது 5' 5" உயரமுள்ள Administration படித்து முடித்துள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். 1684

59. பிரன்சுப் பிரஜையும் 32 வயது 5' 2" உயரமுள்ள Accountancy Diploma முடித்துள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். 1685

60. 11ஆண்டுகளாக கனடாவில் வசிக்கும் பட்டதாரி 30 வயது 5" 3" உயரமுள்ள மணமகளுக்குத் தகுந்த வரனை கனடா, அமெரிக்கா அல்லது லண்டனில தேடுகின்றனர். Ref: 1680

61. யாழ் பல்கலைக் கழகப் பட்டதாரி, 25 வயது 5" 1" உயரமுள்ள மணப் பெண்ணுக்கு கனடா அல்லது லண்டனில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள கத்தோலிக்க மணமகனை தேடுகின்றனர் Ref: 1679

62. கொழும்பில் வசிக்கும் 31 வயது 5அடி உயரமுள்ள படித்த மணமகளுக்கு லண்டனில் அல்லது அவுஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகனை தேடுகின்றனர் Ref: 1678

63. லண்டனில் தொழில் விசாவில் வசிக்கும் கணக்கியற் பட்டதாரி 34 வயது 5" 2" உயர மணமகளுக்கு தகுந்த வரனை தேடுகின்றனர். Ref: 1677

64. Graduate in Accountancy, 26 years old 5' 5" tall, born and brought up in the U K looking for a matching groom, a professional. Ref: 1675

65. கொழும்பில் தொழில் புரியும் 23 வயது 5' 1" உயரமுள்ள CIMA பட்டதாரி பெண்ணுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். Ref: 1673

66. Top professional, in the UK since childhood, 35 years, 4' 9" tall, seeks a matching groom. Ref: 1672

67. In the UK since 1999, British Citizen, a Graduate and well employed, 26 years, 5' 4" tall, seeks a matching groom. Ref: 1671

68. யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும் A/L படித்த 28 வயது, 5'3" உயரமுள்ள மணப்பெண்ணுக்கு, வெளிநாடுகளில் sponsor பண்ணக்கூடிய வரனை தேடுகின்றனர். Ref: 1670

69. Canadian citizen, a graduate from Uni. of Toronto, well employed, 26 years old, 5' 3" tall, seeking a matching bride. Ref:1668

70. கொழும்பில் வேலை செய்யும் 29 வயதுடைய 5' 6" உயரமுள்ள படித்த மணப்பெண்ணுக்கு ஐரோப்பாவில் தகுந்த மணமகனை தேடுகிறாகள் Ref:1666

71. In Canada since 1990, a canadian citizen, A Graduate, well employed, 28 years, 5' 1" tall seeking a suitable groom. Ref: 1665

72. A graduate, 28 years, 5' 4" tall, born in the U.K, seeking a matching groom. Ref: 1664

73. Sri Jayewardenepura Accountancy Graduate, 27 years, 5' 4" tall, wellemployedinColombo, seeksamatching groom, abroad. Ref: 1663

74. இலங்கையில் வசிக்கும் A/L படித்த 23 வயது 5' 3" உயரமுள்ள மணப்பெண்ணுக்கு நிரந்தர வதிவுடமை உள்ள தகுந்த வரனைத் EU நாடுகளில் தேடுகின்றனர் Ref: 1662

75. Professional, in USA on 5 year student visa, 32 years, 5' 3" tall, seeking a matching professional groom in Canada or USA Ref: 1660

76. கொழும்பில் தொழில் புரியும் CIMA கணக்கியல் படித்த 29 வயது, 5' 3" உயரமுடைய மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. சாதி கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. Ref: 1658

77. Professional qualified bride working in Colombo, 27 years, 5' 3" tall, seeking a matching educated groom, a UK / USA citizen. *Ref: 1657*

78. In Canada since her 12 years, a Science Graduate and a teacher in a public school, 33 years, 5' 1" tall, seeks a matching groom. *Ref: 1656*

79. 8 வருடங்களாக இந்தியாவில் வசிக்கும் பட்டதாரி 27 வயது 5'7", மணப்பெண்ணுக்கு தகுந்த வெளிநாட்டு வதிவிடவுரிமை உள்ள வரனை தேடுகின்றனர். Ref: 1654

80. Canadian citizen, in Canada since 1991, 30 years, 5' 6" tall, Maths Graduate, well employed seeking a matching groom. *Ref: 1653*

81. Canadian citizen, over there since 1996, Engineering Graduate, 29 years, 5' 6" tall, seeking a matching groom in Canada. Ref: 1650

82. Working in Colombo, ICMA Final, 24 years, 5' 1", looking for a well educated, matching groom in Sri Lanka or abroad. Ref: 1647

83. கனடாவிற்குப் 10 வயதில் வந்த 24 வயது 5' 3" உயரமுள்ள பொறியியலாளராகப் பணிபுரியும் மணப்பெண்ணுக்கு கனடா அமெரிக்காவில் படித்த தகுந்த மணமகனைத் தேடுகின்றனர் Ref: 1645

# தமிழில் எழுதலாம் வாருங்கள்... வலையில் பரப்பலாம் வாருங்கள்...




## வலையுலகில் சம்பாதிக்கலாம்!

கடந்த வாரங்களில் வலைப்பதிவுகளை அறிமுக ப்படுத்தி வரும் இப்பகுதியில் இம்முறை வலைப்பதிவு எழுதுபவர்கள் வைத்திருப்போர் எவ்வாறு பணம் சம்பாதிப்பது என்பது பற்றி ஆராய்யோம்.பொதுவாக இணையத்தில் பணம் சம்பாதிப்பதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று வலைப்பதிவெழுதுவது மற்றையது இணையத்தூடு வேலைசெய்வது. இரண்டுமே ஆர்வமி ருந்தால் இலகுவானதுதான்.

முதலாவதாக வலைப்பதிவெழுதுவதன் மூலம் எவ்வாறு பணம் பெறலாம் என்பதனைப் பார்ப்போம்.

பொதுவாக வலைப்பதிவு மூலம் சம்பாதிப்பதற்கான வழி விளம்பரங்களை வலைப்பதிவுகளில் இடுதல். பொதுவாக இவை உங்கள் பதிவு மிகப்பிரபலமாக இல்லாது விடின் பெருமளவு பணத்தினை உருவாக்கி தரமாட்டா. ஆனாலும் பொழுதுபோக்காக நாங்கள் செய்கின்ற வலைப்பதிவு சிறிதளவு பணத்தினை ஈட்டித்தருமாயின் அது நல்லதுதானே?

இவ்வாறு விளம்பரங்களை வழங்குவதற்கு பல நிறுவன ங்கள் இருந்தாலும் பலரும் அறிந்தது. கூகிள் அட்சென்ஸ். Google Adsenseமூலம் ஒரு கணக்கை உங்களுக் கென்று உருவாக்கி கொண்டு உங்கள் வலைப்பதி வெங்கும் அவர்களது விளம்பரங்களை வெளிப்படுத்த இயலும். பொதுவாக விளம்பரங்களின் மேல் சொடுக் கப்படுகின்ற ஒவ்வொரு சொடுக்கிற்கும் உங்களுக்கு பணம் கிடைக்கும். நீங்கள் செல்லவேண்டியது : https://www.google.com/adsense

### Text-Link-Ads

இதைவிட பல பிரபல நிறுவனங்கள் வித்தியாசமான முறைகளின் மூலம் உங்கள் வலைப்பதிவிற்கு விளம்பரம் தரத்தயாராக உள்ளார்கள். இவர்கள் உங்கள் வலைப் பதிவில் இடுகின்ற ஒவ்வொரு தொடுப்பிற்கும் மாதாமாதம் இவ்வளவு பணம் என்ற அடிப்படையில் பணம் வழங்குகிற ார்கள். எவ்வளவுதரம் சொடுக்கியது எனப்து போன்ற விபரங்களை பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. மாத முடிவில் உங்கள் கடனட்டைக்கு அல்லது உங்கள் வீட்டிற்கு காசோலையாக பணத்தை அனுப்பிவி டுவார்கள்.இப்பொழுது இரண்டாவது முறைக்கு போவோம்.

இணையத்தினூடாக வேலை செய்தல்.

இதற்கு நீங்கள் வலைப்பதிவு ஏதும் வைத்திருக்க தேவையில்லை. உங்களின் திறமைக்கேற்றவாறு பணம் சம்பாதிக்க முடியும். திறமையிருக்கின்ற அல்லது விருப்பம் இருக்கின்ற பலருக்கு இருக்கின்ற பிரச்சனையே இதற்கான வழிமுறைகள் தெரியாமைதான். தொடர்ந்து அவற்றிற்கான சில வழிமுறைகளை பார்ப்போம்.

இதற்கு பொதுவாக இரண்டு வழிமுறைகள் இருக்கின்றன. ஒன்று இதற்கான வழிகளை செய்து தருகின்ற இணையத்தளங்கள் மற்றையது இணையத் தளமூடாக வேலைக்கு சேர்க்கும் நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள்.இதில் முன்னைய வழிமுறையைப்பற்றி இப்போது பார்ப்போம்.இணையத்தூடாக வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்து தரும் இணையத்தளங்கள் பல உள்ளன. அவற்றில் என்னைப்பொறுத்தவரை இலகுவானது என கருதும் இணையத்தளங்கள் இரண்டு கீழே.

### Elance

http://www.elance.com/ சென்று நீங்கள் ஒரு கணக்கினை ஆரம்பித்து கொண்டால் உங்கள் திறமை க்கேற்ப வேலைகளை பெற்றுக்கொள்ள முடியும். இங்கு இருக்கின்ற முக்கியமான பிரச்சனை உங்களை நீங்கள் சந்தைப்படுத்துவதுதான். அங்கே உங்களுக்கேற்ற வேலை ஒன்றினை நீங்கள் கண்டுகொண்டால் உடனே நீங்கள் ஏன் அந்த வேலைக்கு தகுதியானவர் என்றும் உங்களால் எவ்வாறு அந்த வேலையை முடித்துக் கொடுக்க முடியும் என்றும் ஒரு கோரல் ஒன்றினை செய்ய வேண்டும். நீங்கள் வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் உங்களுக்கு நீங்கள் குறிப்பிட்ட தொகை கிடைக்கும். இங்க ஆகக்குறைந்த தொகை 50 அமெரிக்க டொலர்கள் என்பதால் சிறிய வேலைக்கே நீங்கள் நல்ல பணத்தினை சம்பாதித்து கொள்ள முடியும்.

### Get a freelancer

http://www.getafreelancer.com/ இந்த இணையத் தளமும் மேலே குறிப்பிட்டதைப் போன்றது தான். இங்கு ஆகக்குறைந்த தொகை 30 அமெரிக்க டொலர்கள்.

நாங்கள் இப்பதான் வலைப்பதிவெண்டாலே என்னெண்டு பாத்திருக்கிறம். உதில போட்டிருக்கிற விசயம் தெரியுமெண்டா நான் ஏன் இப்படி இருக்கிறன். இதைவிட சுகமான வேலை ஏதும் இருந்தா சொல்லு எண்டுற ஆக்களுக்காக இருக்கிறது தான் mturk இணைத்தளம்.https://www.mturk.com/mturk/welcome.இந்த இணையத்தளம் அமேசன் நிறுவனத்தின் ஒரு பகுதி. இங்கு நீங்கள் மிகச்சிறயளவு பணத்திற்கு சிறிய சிறிய வேலைகளை செய்ய முடியும். வீட்டில ஒரு பொழுதும் போகேல்ல நல்ல இணைய இணைப்பு இருக்கு எண்டு சொல்லுறாக்களுக்கு இது நல்ல இடம். இந்த படம் நல்லா இருக்கு. இது நல்லா இல்லை எண்டு சொன்னாலே காசு கிடைக்கும். போய் ஒரு இரண்டு வேலை செய்து பாருங்க.

*ஊரோடி பகீ - யாழ்ப்பாணம்*

வாசகர்களே நீங்கள் வாசித்த வலைப் பதிவுகளை அறிமுகப்படுத்த விரும்பின் blogs@orupaper.com என்ற முகவரிக்கு மின்னஞ்சலைத் தட்டி விடுங்கள்.

# *முத்துகுமரன் இங்கே தான் இன்னுயிர் கொடுத்தான் ஈழத் தமிழனுக்காய்!*



தமிழ் நாட்டின் செல்வமே
நம் முத்துக்குமரனே
முத்தான உன் உயிர்தந்து
நம் மூச்சையே நிறுத்திவிட்டாய்...

காலையில் செய்திகேட்டோம்
கண்ணீரால் நம் உடல் நனைந்தோம்
உன் உடலைக் கருக்கிய
உன் உறுதி கண்டு
மனதளவில் உருக்குலைந்தோம்...

உயிர்பிரியும் நேரத்திலும்
பிரபாகரன் என்றாய்
பின்னர் உயிரையே போக்கிவிட்டு
தமிழன் பிரபஞ்சதையே நீ வென்றாய்..

முத்துக் குளிக்கும்
ஊரிலே பிறந்தவனே...
தமிழன் மனங்களிலே முத்தாக
உன் உயிர் தந்தவனே...
தமிழ் நாட்டிலே விதையாகி
தமிழர் மனங்களிலே
முளைத்து விட்டாய்...
உன் மூச்சு அடங்கமுதல்
உன் கொள்கைகளை எரியவைத்தாய்...

உன் லட்சியம் வெல்லவைப்போம்
துரோகிகளையும் ஓடவைப்போம்
உன் இறுதிமடலதையும்
எம் இலட்சியத்தில் சேர்த்திடுவோம்
உன் ஆசை நிறைவேற்றிடுவோம்
அன்பாய் நம் தலைவன்
கரம் பற்றிடுவோம்
மாவீரர் இல்லங்கலில்
தெய்வமாய் உனை வணங்கிடுவோம்...

கரும்புலியோ க்ளங்களிலே
களமாடி மாண்டிடுவான்
நம் முத்துக் கரும்புலியோ
தமிழன் உயிர்காக்க,
கணத்திலே எரியூண்டு
மாண்டு விட்டான்...
உன் எரிந்த உடல்காட்டி
எந்தன் மனங்களிலே
பொறியாக விழுந்துவிட்டாய்
இந்தப் பொறிகள் ஒவ்வொன்றும்
எரிக்கும் நம்
எதிரியின் உடல் காண்பாய்...

தமிழனின் காவியத் தலைவனே
காரிருளில் சூரியனே
உன் கனவெல்லாம் நனவாகி
உன் கல்லறையில்
தமிழ் ஈழத்தின் பூக்கள் விழும்...

- இளங்கவி

## முத்துக்களே தீக்குழிக்காதீர் இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிரான போரை ஆரம்பியுங்கள்

தமிழர்களை இந்திய வல்லாதிக்கம் தமிழ நாட்டிலும் சரி ஈழத்திலும் சரி வாழ விடப்போவதில்லை.வோட்டுக் கட்சிகளால் இனிப் பிரியோசனம் இல்லை. பதவி மோகத்திலும் பணம் உழைப்பதிலும் குறியாகா? இருப்பவர்களை நம்பிப் பிரியோசனம் இல்லை.உங்கள் உயிரை மாய்ப்பதிலும் பிரியோசனம் இல்லை. ஒன்று சேர்ந்து இந்திய வல்லாதிக்கத்தை எதிர்த்து போர் செய்வதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியில்லை.மக்களின் ஜன நாயக உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாத்வர்களுக்கு உங்கள் தீக்குழிப்புக்கள் ஒரு பொருட்டு அல்ல.

உங்கள் இலட்சியம் நிறைவேற வேண்டுமெனில் ஒன்று பட்டுப் போராடுங்கள். உலகெங்கும் இருக்கும் வல்லாதிக்க வாதிகளுக்கு புரிந்த மொழியில் போராடுங்கள். பெரியாரின் வழி நின்று அவர் தொடக்கி வைத்ததை முடிக்க வேண்டிய நேரம் இது தான். வீணான தனி நபர் சார்ந்த முயற்சிகளில் இறங்கி உங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்ளாதீர்கள்.


உறுதியுடன் வாழ்வதற்காக ஒன்று சேர்ந்து போராடுங்கள்.

*- அற்புதன்*


அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....
seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from concept to design


Please join our demonstration and march to support our just Tamil Humanitarian cause.
STOP
SRI LANKA'S
GENOCIDE
OF TAMILS
Saturday, 31 Jan 2009
From: Millbank (Tate Britain) at 13:00
To: Temple Place
Contacts : 020 8808 0674, 078 2846 5103

# Madagascar கொணர்ந்த கார்ட்டூன் நினைவுகள்



தர்மத்தின் வாழ்வதை சூது கவ்வும், மீண்டும் தர்மம் ஜெயிக்கும் இதையே பெரும்பாலான கார்ட்டூன் கதைகளின் சாரமாக வைத்து வித விதமான பாத்திரங்களையும், அவற்றுக்கான களங்களையும் வைத்துக் கதை பண்ணி விடுவார்கள். இப்போதெல்லாம் பிரபல ஹாலிவூட் நடிகர்கள் மற்றும் நகைச்சுவை தனி நடிப்பாளர்களின் குரலை படத்தின் பின்குரலுக்கும் பயன்படுத்துவதும், நகைச்சுவையை அள்ளித் தெளித்து ஆங்காங்கே பாடல்களையும் செருகி நூறுவீத பொழுது போக்கு உத்தரவாதம் அளித்து விடுவார்கள். அந்த வரிசையில் இடம்பிடித்திருக்கின்றது பார்த்த Madagascar: Escape 2 Africa.

கிராமத்தில் இருந்து பட்டணத்துக்கு வேலை தேடி வருபவன் கணக்காக மெல்பனில் பட்டப் படிப்பை முடித்து விட்டு எட்டு வருஷத்துக்கு முன் சிட்னிக்கு வேலை தேடி வந்த காலத்தில், வார நாளில் ஒரு நாள் காலை பொழுது போகாமல் Dinosaurs என்ற கார்ட்டூன் படத்துக்குப் போய்நான் மட்டுமே அந்தப் பெரிய அரங்கில் இருந்து படம் பார்த்ததை இன்னும் பெருமையாகச் சொல்லிக் கொள்வேன். பின்னர் Finding Nemo என்ற இன்னொரு கார்ட்டூன் திரைப்படத்துக்கும் போய் அரங்கத்தில் அமர்ந்தால் சுற்றிவர மூன்றுமாசக் குழந்தையில் இருந்து முப்பது வயது அம்மாக்கள். நடுவே நான் தனித்தீவில் விடப்பட்ட Nemo போல. படம் தொடங்கி முடியும் வரை இருபக்கமும் இருந்த வாண்டுகளும் என்னை முறைத்துக் கொண்டே இருந்தது போல ஒரு பிரமை இருந்தது. இம்முறை அந்தமாதிரி எதுவிதமான அசம்பாவிதங்களும் நடந்து விடாமல் இருக்க நண்பரின் மூன்று வாண்டுகளை பாதுகாப்புக் கவசமாக வைத்துக் கொண்டு Madagascar: Escape 2 Africa பார்க்கப் போனேன்.

Madagascar மூன்றாண்டுகளுக்கு முன்னர் வந்து சிறுவர்களின் உலகத்தையே சந்திரமுகி கணக்காட்டம் (வசூலில்) கலக்கு கலக்கிய படம். நியூயோர்க் நகரத்தின் Central Park Zoo வில் இருக்கும் பெங்குவின்கள் தமது கூண்டுச் சிறைவாசம் வெறுத்து நகரத்துக்குத் தப்பியோட முனைய Marti என்னும் அதே மிருகக்காட்சிசாலை கைதியும் தானும் வெளியுலகத்தைக் காண வேண்டும் என்று தப்பியோட அவரைத் தேடி அவரது நண்பர்கள் Alex (சிங்கம்), Melman (ஒட்டகம்), Gloria (நீர்யானை) என்று அவர்களும் திருட்டுத்தனமாக வெளியே வந்து நகரத்தை அதகளம் பண்ணி, மடகாஸ்கார் தீவெல்லாம் அலைவது என்று போகும். அந்தப் படம் கொடுத்த வசூல் தெம்பில் வந்திருக்கின்றது Madagascar: Escape 2 Africa.

இந்தப்படத்தில் ஆரம்பத்தில் மிருகக்காட்சிச் சாலையின் ராஜாவாக இருந்து கலக்கிய Alex என்ற சிங்கத்தின் பூர்வீகம் எப்படி



இருந்தது என்று 80 களுக்கு முந்திய காலத்து பழிவாங்கும் பாணி தமிழ் சினிமாவின் எழுத் தோட்டத்துக்கு முந்திய காட்சியமைப்பு போல இருக்கின்றது. ஆபிரிக்காவின் காட்டு ராஜாவான Zubaவுக்கும் காட்டு ராணி Florrieக்கும் பிறந்த Alex பச்சிளம் பாலகனாக இருந்த வேளை ஒரு நாள் வேட்டைக்காரர் கையில் அகப்பட்டு கூண்டில் அடைபட்டு போகும் போது, தன் தந்தையின் ஆக்ரோஷமான தாக்குதலால் நிலைகுலைந்த வேட்டைக்காரர்களின் ஜீப்பில் இருந்து வழி தவறி நதியில் விழுகின்றது Alex இருந்த பெட்டி. அது மெல்ல நதிகளைக் கடந்து மிருகக் காட்சிச் சாலையில் வந்து சேர்கின்றது. வேட்டைக்காரர்களின் துப்பாக்கிக் குண்டில் அடிபட்ட காட்டு ராஜா Zuba வழியில் சாய்கிறார். காலம் அப்படியே நிகழ்காலத்துக்குத் தாவுகின்றது. முந்திய படத்தின் இறுதிக் காட்சியில் வந்து மீண்டும் ஒட்டுகின்றது. King Julien & Maurice (Lemur - ஒருவகை பாலூட்டும் குரங்கினம், தேவாங்கு என்று இதை எங்களூரில் அழைப்பார்கள்) இன் விருந்தினர்களாக இருந்த Alex(சிங்கம்) அவரது நண்பர்கள் Marti(வரிக்குதிரை), Melman(ஒட்டகம்),Gloria(நீர்யானை), கூடவே ஒட்டிக் கொள்ளும் இரண்டு லூசுக் குரங்குகள் சகிதம் பெங்குவின்களின் விமானத்தில் நியூயோர்க் நகரத்துக்குக் கிளம்புகிறர்கள். ஆனால் விதியின் சதி அணில் ரூபத்தில் வந்து விமானத்தில் நாசவேலை செய்ய அந்த விமானம் ஆபிரிக்காவின் காட்டில் வந்து விழுகின்றது. ஆபிரிக்காவின் காட்டு ராஜா Zuba, காட்டு ராணி Florrie ஆகியோர் இங்கே வந்து அடைக்கலம் கேட்கும் Alex தமது பிள்ளை தான் என்று கண்டு பாசமழை பொழிகிறார்கள் (பாட்டு சீன் உண்டு). தமது மகன் Alexஐ காட்டுராஜாவாக்க முடிவெடுக்கும் போது, அதுவரை அண்ணன் எப்போது சாவான் திண்ணை எப்போது காலியாகும் என்று காத்திருக்கும் நம்பியார் ரூபத்தில் இருக்கும் Makunga என்ற இன்னொரு சிங்கம் தடையாக வந்து தன் சூழ்ச்சியால் தானே முடிசூடிக் கொள்கின்றது. தம் பதிவியையும் கௌரவத்தையும் இழந்த பழைய காட்டுராஜா Zuba குடும்பத்திற்கு எப்படி மீண்டும் சந்தோஷ வாழ்வு வருகின்றது. Alex தனது நண்பர்கள் மூலம் எப்படி இந்த காட்டின் தண்ணீர்ப் பிரச்சனையைத் தீர்த்து வளம் செழிக்க வைத்து தன் சமயோசிதத்தால் ஆட்சியைப் பிடித்தான் என்பதே Madagascar: Escape 2 Africa சொல்லும் கதை.

Etan Cohen கதையில் Eric Darnell, Tom McGrath ஆகியோர் இயக்கத்தில் வந்திருக்கின்றது இப்படம். ஆரம்பம் முதல் நளினமான நகைச்சுவையும் அந்தந்தப் பாத்திரங்களுக்கு ஏற்ற கச்சிதமான குரலையும், இனிய இசையும் பாடல்கள் உட்பட கொடுத்து அதற்கேற்றாற் போல சாதாரண கதை என்றாலும் ரசிக்கும் படி எடுத்திருப்பது இப்படத்தின் மிகப்பெரிய அனுகூலம். ஒவ்வொரு பாத்திரங்களையுமே சிறப்பாகக் காட்டியிருக்கின்றார்கள். ஆபிரிக்கா காட்டுக்குள் விழுந்து அங்குள்ள மிருகங்களிடம் அரைகுறை ஆங்கிலத்தில் (அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்று நினைத்து) சைகை பாஷை பேசிக் காட்டி நடிக்கும் Alex ஒருபுறம். மிருகங்களின் ஆபிரிக்க நடன விருந்தில் பாட்டின் நடுவே வரும் "சிக்கச் சிக்கச் ச்சா" என்று வரும் வரியை கேட்டு "சிக்கச் சிக்கச் ச்சா, what's that?" என்று கேட்டு விட்டு தானும் அதைப் பாடி ஆடும் King Julien (Lemur) படம் முழுக்க வந்து கலக்கும் குறும்புத் தனங்களும், தனக்கு மகப்பேற்று விடுமுறை (Maternity leave) கேட்டும் கொடுக்காத விமானத்தின் ஓட்டி பெங்குவினை அதன் அந்தரங்க விஷயத்தை போட்டோ மூலம் காட்டி பிளாக் மெயில் செய்யும் குரங்கின் குரங்குச் சேட்டை, Gloria (நீர்யானை) மேல் மையல் கொள்ளும் Melman (ஒட்டகம்) தனது தூய காதலை நிரூபிக்க உயிரைக் கொடுக்கும் விஷயங்கள் என்று எல்லாமே ஒரு கார்ட்டூன் படத்தைப் பார்க்கின்றோம் என்பதை மறக்கடித்து விடுகின்றது.

தர்மத்தின் வாழ்வதை சூது கவ்வும், மீண்டும் தர்மம் ஜெயிக்கும் இதையே பெரும்பாலான கார்ட்டூன் கதைகளின் சாரமாக வைத்து வித விதமான பாத்திரங்களையும், அவற்றுக்கான களங்களையும் வைத்துக் கதை பண்ணி விடுவார்கள்.

இறுதிக் காட்சியில் அந்தக் காட்டின் வரட்சியைப் போக்க Alex(சிங்கம்) எடுக்கும் முயற்சியை ஒருபுறம் காட்டிக் கொண்டே, இன்னொரு புறம் King Julien (Lemur)இன் ஆலோசனைப் பிரகாரம் காட்டின் ஒரு திக்கில் இருக்கும் எரிமலைக்கு பலி கொடுத்தால் தான் ஆண்டவன் அருள் புரிவார் என்று நம்பி மிருகங்கள் ஒன்று சேர்ந்து ஏகமனதாக தன் உயிரைப் போக்க Melman(ஒட்டகம்)ஐ பலியாடாக ஆக்க நினைக்கையில் வஞ்சகச் சுறா அந்த எரிமலையில் வீழ்ந்து சாவதுமாகக் காட்டி அந்த மூட நம்பிக்கை மூலம் தான் தண்ணீர் கிடைத்தது போலவும் காட்டியது வித்தியாசம். 'ஆண்டவனுக்கு கடல் உணவு தான் கிட்டியிருக்கு' ன்னு King Julien சொல்வது கலக்கல் கலகல.

நண்பர்களின் ஒற்றுமையான செயற்பாடு மூலம் உயர்ந்த வெற்றி கிட்டுகின்றது என்ற நல்ல செய்தியையும் குழந்தைகளுக்கும், ஏன் பெரியவர்களுக்கும் சொல்லி வைத்து முடிக்கின்றது இப்படம்.


- கானா பிரபா

**தலைவிதியை மாற்றுவோம்!**

வந்தாரை வரவேற்கும் பண்பாடு
தமிழன் பண்பாடு!
பகை கொண்டு வந்த சிங்களத்தையே
நிலம் கொடுத்து வரவேற்றான்..
வந்தது கொஞ்ச நஞ்சமா?!
தாரவில்லை தமிழன்....
வீட்டுக்குள்ளேயும் வரவேற்றான்...
வந்தவனுக்கு விருந்து கொடுப்பதும்
முறை அல்லவோ ?
விருந்துக்கு முன் தண்ணி
கொடுக்க வேண்டாமோ?
ஆனால் அவன் அன்புடன்
அனைவருக்கும் கொடுத்தபோது !!!!!


- சுதர்ஷன்


மிகத் துல்லிய ஒளி/ஒலித் தெளிவுடன் தமிழ் தொலைக்காட்சிகளை கண்டு களிக்க...
நீண்ட காலம் பாவிக்க கூடிய...ஒரு வருட உத்தரவாதத்துடன்...
அழகான ரிசீவர்!
இலவசமாக பூட்டித் தரப்படும்
viaccess
CERTIFIED RECEIVER



REPAIR RECEIVER
£125 RECEIVER + DISH
24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம்
அழையுங்கள்:
தாஸ்: 07885 987 857 ராம்: 07861 371 837 டயஸ்: 07960 225 850 பிரகாஸ் : 07968 960 666 சுபாஸ் : 07869 290 162

## விமர்சனம்: காதல்னா சும்மா இல்லை





நடிப்பு: ஸர்வானந்த், ரவிகிருஷ்ணா, கமாலினி
இசை: மணி ஷர்மா, வித்யாசாகர், ஈ.எஸ். மூர்த்தி
இயக்கம்: இளங்கண்ணன்
ஒளிப்பதிவு: வின்செண்ட்

திரைத்துறையில் சன் டிவி போன்று சர்வாதிகாரிகளை வளரவிடுவது எத்தகைய ஆபத்து என்பதற்கு காதல்னா சும்மா இல்லை என்ற ஓரளவு நல்ல படம் வந்ததே தெரியாமல் அமுங்கிப் போனதே சான்று.ஆஸ்கர் பரிந்துரை கமிட்டி வரை போன 'கம்யம்' என்ற தெலுங்குப் படத்தை குறைந்தபட்ச நேர்மையுடன் ரீமேக் செய்திருந்தார்கள். ஆனால் வெறும் சப்தங்களுக்கு மத்தியில் ஒரு சங்கீதம் எடுபடாமல் போன மாதிரியாகிவிட்டது, ராஜ் டிவி க்காரர்களின் இந்த நேர்மையான முயற்சி.

மாறுபட்ட வாழ்க்கைப் பார்வையால் தன்னை விட்டுப் பிரியும் காதலியைத்தேடிப் பயணம் செல்லும் காதலன் இந்தத் தேடலில் தன் சொந்த அடையாளத்தைக் கண்டுகொண்டு வாழ்வைப் புதிதாகப் பார்க்க ஆரம்பிக்கிறான். இந்தக் கதையை மையமாக வைத்துத் தெலுங்கில் வெளியான வெற்றிப் படம் 'கம்யம்'தான் 'காதல்னா சும்மா இல்லை'.

அபிராம் (அறிமுகம் சர்வானந்த்) தொழிலதிபர் நாசரின் ஒரே வாரிசு. சமூக சேவைகள் செய்யும் டாக்டர் (கமாலினி முகர்ஜி) மீது இவன் காதல் வயப்படுகிறான். அவளுக்கும் இவரைப் பிடிக்கிறது என்றாலும் ஏழை எளிய மக்களையும் வாழ்வின் துயரங்களையும் கண்டு அருவருப்படைந்து ஒதுங்கும் அபிராமின் மேட்டுக்குடி மனப்பான்மை அவளுக்குப் பிடிக்கவில்லை.நம் இருவரின் பார்வைகளுமே வேறு,பாதைகள் வேறு, நாம் ஒன்றாய் வாழ முடியாது என்று சொல்லும் கமாலினியே மனம் மாறி அவனை ஏற்றுக்கொள்ள வரும்போது அவள் மனம் வெறுக்கும்படி ஒரு சம்பவம் நிகழ்கிறது. அதையடுத்து நடக்கும் விபத்து அவர்களைப் பிரித்துவிடுகிறது. விபத்திலிருந்தும் அதிர்ச்சியிலிருந்தும் மெல்ல மீளும் பணக்கார அபி, தன் காதலியைத்தேடித் தன் மோட்டார் சைக்கிளில் பயணம் புறப்படுகிறான்.

வழியில் பைக் திருடும் நோக்குடன் இவனுடன் ஒட்டிக் கொள்ளும் ஒரு இளைஞன் (ரவி கிருஷ்ணா) இவனது நண்பனாகிறான். இருவரும் சேர்ந்து மேற்கொள்ளும் தேடலின் பயணத்தில் ஏற்படும் அனுபவங்கள் திரையில் விரிகின்றன. காடு, மலை, நடுத்தெருவில் பிரசவ வலியில் துடிக்கும் பெண், நக்ஸலைட், முதலானவற்றை உள்ளடக்கியபடி தொடர்கிறது பயணம். இந்த அனுபவங்கள் தரும் தரிசனம் அபியின் வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றத்தைக் காட்டியபடி முன்னகர்கிறது திரைக்கதை. காதலியைத் தேடும் பயணம் எப்படி அவன் தன்னைத் தானே தேடிக் கண்டுகொள்ளும் பயணமாக மாறுகிறது என்பது இயல்பாகச் சொல்லப்படுகிறது.

தெலுங்குப் படத்தின் விசுவாசமான மறுபதிப்பு என்றாலும் வணிக நோக்கங்களுக்காக நீர்த்துப்போகச் செய்யாமல் எடுத்திருக்கும் இயக்குனரை பாராட்டலாம். வசனங்கள் கச்சிதமாகவும் இயல்பாகவும் உள்ளன. கதையின் மையத்தோடு முரண்படாமல் படம் நெடுகிலும் இழையோடும் நகைச்சுவை அம்சம் குறிப்பிடத்தக்கது.

துயரம் சுமந்த அமைதியுடன் சர்வானந்த், சுமையற்ற மனநிலையுடன் பேசிச் சலிக்கும் ரவி கிருஷ்ணா என்று இரு வேறு துருவங்களின் இணை கோடுகளாய் வரும் பாத்திரங்கள் படத்தோடு நம்மை ஒன்ற வைக்கின்றன. இருவரும் தத்தமது பாத்திரத்தை உணர்ந்து கச்சிதமாகச் செய்திருக்கிறார்கள்.

கதாநாயகிகளின் சமூக சேவையைப் பெரும்பாலும் அச்சுப் பிச்சுத்தனமாவே காட்டிப் பழக்கப்பட்ட தமிழ் சினிமாவில் நேர்மையான, இயல்பான பாத்திர வார்ப்பாக வரும் கதாநாயகி மனதில் நிற்கிறார். நம்பகமான நடிப்பை வழங்கிப் பாத்திரத்திற்கு உயிர் கொடுத்திருக்கிறார் கமாலினி முகர்ஜி ஓரிரு காட்சிகள் வந்துபோகும் நாசர், தேஜாஸ்ரீ, எம்.எஸ். பாஸ்கர், கஞ்சா கறுப்பு, இளவரசு, சிட்டிபாபு ஆகியோரில் பாஸ்கர் மட்டும் அழுத்தமாகத் தடம் பதிக்கிறார்.

வித்யாசாகர், மணிசர்மா, ஈ.எஸ். மூர்த்தி ஆகிய மூன்று இசையமைப்பாளர்களும் வின்செண்டின் ஒளிப்பதிவும் படத்திற்குப் பக்கபலம். வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் நிகழும் பயணக்காட்சிகளை இயல்பான வண்ணங்களுடன் வின்செண்ட் படம்பிடித்திருக்கிறார்.

நல்ல படம் எடுக்க வேண்டும் என்ற எண்ணமிருந்தால் மட்டும் போதாது அதை சரியான முறையில் தர தயாரிப்பு மிக முக்கியம். பணம் செலவழிக்க முடியாவிட்டால் அந்த படத்தை வாங்கி டப்பிங் செய்து வெளியிட்டிருக்கலாமே.. கமலினி, ஷரவானந், சம்பந்தபட்ட காட்சிகள் எல்லாமே, தெலுங்கு படத்தின் காட்சிகளை டப்பிங் செய்திருக்கிறார்கள். ஒரு பாடல்காட்சி, ஒரு சில இன்சர்ட் காட்சிகளுக்கு மட்டும் கமலினியிடம் டேட் வாங்கி இணைத்திருக்கிறார்கள். ஷரவானந், ரவிகிருஷ்ணா காட்சிகளை மட்டுமே தமிழில் எடுத்திருக்கிறார்கள்.எடுக்கவேண்டும் என முடிவு செய்தபின் அதில் தடம் மாறக்கூடாது. படத்தில் இன்னமும் கொஞ்சம் நல்ல பாடல்கள் இருந்திருக்கலாம் பழைய வாசனை அடிக்கிறது. தலைப்பும் இன்னமும் சற்று படத்திற்கு பொருத்தமானதாகவும், அழகாகவும் தேர்ந்தெடுத்திருக்கலாம்.

அர்த்தமுள்ள கதைக்காகவும் இயல்பான திரைக்கதைக்காகவும் நம்பகமான நடிப்புக்காகவும் பாராட்ட வேண்டிய முயற்சி.

- அரவிந்தன்

## சினித்துளி

### ஆஸ்கருக்கு அருகில் ரஹ்மான்!



Slumdog Millionaire திரைப்படம் ஹாலிவுட்டின் 10 ஆஸ்கார் விருதுகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது அதில் ரஹ்மானுக்கு 3 பிரிவுகளின் கீழ் விருதுகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சாதாரண கலைஞன் தொடங்கி கமல்ஹாசன் வரை (வெளியே மறைத்தாலும்!!) ஒவ்வொரு இந்தியக் கலைஞனின் கனவு விருது அது. அந்த விருதை இன்னும் சில தினங்களில் எட்டிப் பிடிக்கும் வாய்ப்பைப்பெற்றுள்ளார் ரஹ்மான்.Slumdog Millionaire படம் 10 ஆஸ்கர் விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ரஹ்மானின் பெயர் 2 பிரிவுகளில் 3 விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.ஏற்கெனவே இதேபடத்துக்காக கோல்டன் குளோப் விருது பெற்றுள்ள ரஹ்மானுக்கு இப்போது ஆஸ்கர் விருதும் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை பிரகாசமாகியுள்ளது. ஆஸ்கர் விருது வழங்கும் விழா வரும் பிப்ரவரி மாதம் 22-ம் தேதியன்று நடைபெறுகிறது.

### சேரனின் பொக்கிஷம்!



தன் கனவு மாயக்கண்ணாடியில் நொறுங்கிப் போயிருந்தாலும், சற்றும் மனம் தளராத சேரன் பார்த்துப்பார்த்து உருவாக்கி வரும் படைப்பு பொக்கிஷம்.இண்டர்நெட் மற்றும் கைத் தொலைபேசி இல்லாத காலகட்டத்தில் நடக்கும் கதை என்பதால், இந்தப் படத்தில் கடிதங்களுக்கு அதிக முக்கியத்துவமும், அந்த காலகட்டத்தை கண்முன் நிறுத்தும் வகையிலும் படமாக்கி வருகிறார் சேரன்.விஜயகுமார் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார். நேமிச்சந்த் ஜெபக் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு சபேஷ் முரளி இசையமைக்கிறார்கள். ஆட்டோகிராப், தவமாய் தவமிருந்து செண்டிமெண்ட் போலிருக்கிறது.மனதில் எப்போதும் பொக்கிஷமாய் தங்கிவிடும் சில இனிய நினைவுகளின் தொகுப்பே இந்த பொக்கிஷம் என்கிறார் சேரன்.

### அயன் படம் கைமாறியது!



ஏவிஎம் தயாரித்து சூர்யா-தமன்னா நடிப்பில் உருவாகியுள்ள அயன் படத்தையும் வாங்கிவிட்டது சன் பிக்சர்ஸ் நிறுவனம். இன்றைய சூழலில் தயாரிப்பாளர்கள் படம் எடுப்பதே சன் பிக்சர்ஸ் நிறுவனத்துக்கு விற்பதற்காகத்தான் என்ற நிலை உருவாகியுள்ளது.சுமாரான படமாக இருந்தாலும் அதை ஹிட்டாக்கும் விளம்பரத் தந்திரம் சன் நெட்வொர்க்குக்கு நன்றாகவே கைவந்திருப்பதால், தொடர்ந்து அவர்கள் கேட்காமலே ரீல் பெட்டியைக் கொடுத்துவிட்டு கேஷ் பெட்டியை வாங்கிச் செல்கின்றனர் தயாரிப்பாளர்கள்.அந்த வரிசையில் இப்போது அயன் படத்தை ஏவிஎம் நிறுவனத்திடமிருந்து வாங்கிவிட்டது சன் பிக்சர்ஸ். இந்தப் படத்தை மிகப்பெரிய தொகைக்கு வாங்கியுள்ளது சன்.

### மீண்டும் ஹீரோவாகும் விவேக்!



தனது ஹீரோ ஆசையை மீண்டும் தூசு தட்டுகிறார் விவேக். முடிஞ்சா பிடிச்சுக்கோ என்ற படத்தில் அவர்தான் ஹீரோ.விவேக் ஹீரோவாக நடித்த சொல்லி அடிப்பேன் இன்னும் பெட்டியை விட்டு வெளிவரவில்லை.இந்நிலையில் கருணாஸின் திண்டுக்கல் சாரதி சுமாராகப் போனதால் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறியிருக்கிறது. இதற்காக முடிஞ்சா பிடிச்சுக்கோ என்ற ஸ்கிரிப்டை அவரே எழுதியிருக்கிறார்.படத்தின் பெயரை விவேக் அறிவித்த மறுநிமிடமே கோடம்பாக்கத்தில் பரபர வதந்தி. ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கின், Catch me if you can படத்தின் காப்பிதான் முடிஞ்சா பிடிச்சுக்கோ கதையாம்.




**SRI ANJANEYA ASTROLOGY CENTRE**

ஆஞ்சனேய ஜோதிடம்

ஜோதிடர் : வெங்கடேஸ் சாஸ்திரிகள்
Astro-Palmist

KALAI VANEE VIDEO
307, Mitcham Road, Tooting, London.
SW17 9JQ (Near Tooting Police Station)
Opening Hours. 9.00 a.m – 8:00p.m all 7 days.

SPOKEN LANGUAGES: TAMIL,HINDI, & ENGLISH.
Your Secret matters will be maintain confidently

உலகத்தில் உள்ள சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை, தீமைகள் பற்றிய விபரங்களைக் கூறுவார்.இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை.ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்லுவார்.கணவன் மனைவி சண்டை, பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள், பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது, படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது, வேலை, தொழில், உத்தியோகம், விசா பிரச்சனைகள், இப்படி பல்வேறான பிரச்சினைகளை தீர்த்து வைப்பார்.செய்வினை, பில்லி, சூனியத்தால் பாதிப்பு, பொறாமையில் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் , பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் ஓட்டப்படும். கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகிய வற்றிற்கு பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் எப்போதும் கொழிக்க உதவும் லெட்சுமி பூஜை செய்து தருகிறோம்.



**Would you like your future ?**

We resolves life's problems like love, Family, Marriage, business , money & health,Work.Court Case and any other Problems

**Contact :- Mob : 07507 752 696 / 07507 760 448**



## கடன் ஒரு பெரிய தலையிடியா உங்களுக்கு?

**உழைக்கும் பணம் மாதாந்தம் கடன் அடைக்கவே போய் விடுகிறதா?**

**உதவக் காத்திருக்கின்றோம்.**

கடன் கொடுத்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு...

- மிக மிக குறைந்த கட்டுப்பணம் கட்ட வசதி.
- குறிப்பிட்ட காலத்தின் பின் குறைந்த தொகையோடு பூரண கடன் நிவர்த்தி.
- வட்டி வளராமல் தடுத்து நிறுத்தலாம்.
- No Credit Check.
- மேலதிகமாய் கடன் எடுக்க வேண்டியதில்லை.

வர்த்தக கடன் பிரச்சனைகளுக்கும் மற்றும் வேலை செய்பவர்/இல்லாதவர் இத் திட்டத்தின் மூலம் பயனடையலாம்.

கடனிலிருந்து
படிப்படியாக மீள....
சட்ட நுணுக்கம் தெரிந்த
அனுபவசாலிகள் சேவை
செய்யக் காத்திருக்கின்றோம்.

The **Debt Unload Ltd.** is leading UK debt specialists, We offer free, professional advice to help get you out of debt and always recommend the best way forward, based on your circumstances.

**உடன் அழையுங்கள்**
**020 7378 9329**

Debt Unload Ltd.
Personal & impartial expert advice

39-41 Borough High Street,
London Bridge, SE1 1LZ

# **Ganesha** Cash & Carry

உங்களுக்குத் தேவையான Sri Lankan, Indian, English, Groceries ஆபிரிக்கன் உணவு வகைகள் Fresh meat மற்றும் Off Licence பொருட்களை. . .



ஒரே இடத்தில் . . .

ஒரே நேரத்தில். . .

பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.

பிரமாண்டமான Parking வசதிகள் எம்மிடம்.

Call:
Tel: **020 8597 9983**
Mob: **07946 058 177**

**Ganesha Cash & Carry**
112, Aldborough Road South, Newbury Park
London 1G3 8EZ



Chennai
Sweets & Snacks

*try something Completely new...*

**லண்டன் மாநகரில் முதன்முறையாக !**

100க்கும் மேற்பட்ட இந்திய Sweets வகைகள்

50க்கும் மேற்பட்ட இந்திய Snacks வகைகள்

25க்கும் மேற்பட்ட இந்திய Chaats வகைகள்

10 க்கும் மேற்பட்ட Juices வகைகள்

10வகை HotDrinks வகைகள்

5வகை Puffs வகைகள்

Bakery வகை களும் பிறந்தநாள் Cake வகைகளையும்

ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்

## Chennai Sweets & Snaks

251-223 London Road
Croydon, CR0 2RL

## Mob: 07943863959

Chennaisweetsandsnacks@gmail.com